பொதுசன நூலகம்
நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்

Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00


தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU





முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2042 சித்திரை 31 சனிக்கிழமை (14.05.2011) பக்கங்கள் 16 ஓசை – 227


தமிழ் மக்களின் பாதுகாப்புக்கு அரசே பொறுப்பு


திருமணத்துக்கு பின்னர் படிக்கலாம்


சிறைக்குள் அழகுராணி


கம்பீர் தலைமையில் இந்திய அணி

# அ.தி.மு.க. அமோக வெற்றி

## மூன்றாவது முறையும் முதல்வராகிறார் செல்வி. ஜெயலலிதா



(சென்னை)

**தமிழக சட்டமன்றத் தேர்தலில் செல்வி. ஜெயலலிதா ஜெயராம் தலைமையிலான அ.தி.மு.க. கூட்டணி அறுதிப் பெரும்பான்மை பலம் பெற்று ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது. கடந்த மாதம் இடம்பெற்ற சட்டமன்றத் தேர்தலின் உத்தியோகபூர்வ முடிவுகள் நேற்று வெளியாகியது. மொத்தம் 234 உறுப்பினர்களைக்கொண்ட தமிழக சட்டமன்றத்தில் வெற்றி இலக்கையும் தாண்டி 204 ஆசனங்களை அ.தி.மு.க. கைப்பற்றியுள்ளது.**

வெறும் 30 ஆசனங்களை மட்டும் தி.மு.க. பெற்றுள்ளது. இதனைத் தொடர்ந்து நாளை ஜெயலலிதா முதலமைச்சராகப் பதியேற்கவுள்ளார்.

இதன் மூலம் 3ஆவது முறையாகவும் ஜெயலலிதா தமிழக முதல்வராக பதவியேற்கவுள்ளார். அவரது பதவியேற்பு விழா விற்கான ஏற்பாடுகள் குறித்து ஆலோசனை (15 ஆம் பக்கம் பார்க்க)

## கருணாநிதி 'அவுட்'



(கொழும்பு)

தமிழக சட்டசபைத் தேர்தலில் படுதோல்வியடைந்த தி.மு.க. தலைவர் கருணாநிதி தனது பதவியை ராஜினாமாச் செய்துள்ளார். (15 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை மீது பொருளாதாரத் தடை

## வலியுறுத்துவாராம் ஜெயலலிதா

(கொழும்பு)

போர்க்குற்றம் புரிந்ததாக குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சர்வதேச நீதிமன்றில் நிறுத்த நடவடிக்கை எடுப்பேன் என்று தமிழக முதல்வராக பதவியேற்கவிருக்கும் ஜெயலலிதா சூளுரைத்துள்ளார்.

தமிழக சட்டமன்றத் தேர்தலில் வெற்றியடைந்து எதிர்வரும் 15 ஆம் திகதி தமிழக முதல்வராக பதவியேற்கவுள்ள அ.தி.மு.க. பொதுச்செயலாளர் செல்வி ஜெயலலிதா, இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பில் இரண்டு தீர்வுகளை முன்வைத்துள்ளார்.

போர்க்குற்றம் புரிந்ததாக குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சர்வதேச நீதிமன்றில் நிறுத்த நடவடிக்கை எடுப்பதுடன் இலங்கை மீதான பொருளாதாரத் தடையினை விதிக்க (16 ஆம் பக்கம் பார்க்க)

# 13 ஆவது திருத்தம் பற்றியும் உடனடி பிரச்சினைகள் குறித்தும்

## அரசு – ஈ.பி.டி.பி. பேச்சுவார்த்தை

(கொழும்பு)

தீர்வுப் பேச்சுக்கள் தொடர்பாக அரசாங்கத்திற்கும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினருக்கும் இடையிலான பேச்சுவார்த்தை நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

ஈ.பி.டி.பி. சார்பில் நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளருமான முருகேசு சந்திரகுமார் மற்றும் ராஜ்குமார், கே.தயானந்தா ஆகியோரும் அரசாங்கத் தரப்பில் அமைச்சர்களான நிமால் சிறிபால டி சில்வா, ஜீ.எல்.பீரிஸ் மற்றும் ரஜீவ விஜயசிங்க ஆகியோரும் பங்குபற்றினர்.

13 ஆவது திருத்தச் சட்டமூலத்தில் பிரச்சினையாக உள்ள விடயங்கள் குறித்தும் மேலும் சேர்த்துக்கொள்ள வேண்டிய அம்சங்கள் குறித்தும் விரிவாகக் கலந்துரையாடியுள்ளனர். (16 ஆம் பக்கம் பார்க்க)

# களுவாஞ்சிக்குடியில் வர்த்தகர் பலி!

(மட்டக்களப்பு)

களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவிலுள்ள எருவில் பாடசாலை வீதியில் நேற்று மாலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் பிரபல வர்த்தகர் ஒருவர் பலியாகியுள்ளார்.

நேற்று மாலை 6.45 மணியளவில் இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது. இனந்தெரியாத துப்பாக்கிதாரிகளினால் முருகேசு (15 ஆம் பக்கம் பார்க்க)

# புலி உறுப்பினர்கள் தப்பிச்செல்ல நோர்வே இரகசிய உதவி

(ஒஸ்லோ)

புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் பலர் இலங்கையை விட்டு வெளியேறுவதற்கு கொழும்பிலுள்ள நோர்வேத் தூதரக அதிகாரிகள் இரகசியமாக உதவியளித்ததாகவும் அவர்களுக்கு அரசியல் தஞ்சமளித்ததாகவும் நோர்வேயிலிருந்து வெளியாகும் அவ்டன் போஸ்டன் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

நோர்வேத் தூதரக அதிகாரிகள், இவ்வாறு சுமார் 12 பேருக்கு குறுகிய காலத்தில் விஸா வழங்கியதுடன் விமான டிக்கெட்டுகளை வழங்கி, அவர்களை விமான நிலையத்திற்கு அழைத்துச் சென்றதாகவும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

இது வழக்கத்துக்கு மாறான (16 ஆம் பக்கம் பார்க்க)

# மனைப் பொருளாதார விருத்திக்கு யாழில் விசேட திட்டம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வறிய மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் இவ்வருடம் அரசாங்கத்தால் நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் மனைப்பொருளாதாரத்தின் மூலமான குடும்ப அலகுகளைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டம் யாழ். மாவட்டத்தில் விசேட திட்டமாக எதிர்வரும் இரு வாரங்களுக்குள் அமுல்படுத்தப்படவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் இவ் வேலைத்திட்டத்தினை பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு, வடக்கு மாகாண சபை, பொருளாதார அபிவிருத்தி அமைச்சு என்பன இணைந்து நடைமுறைப்படுத்தவுள்ளன.

இது தொடர்பாக அரச அலுவலர்களுக்கு விளக்கமளிக்கும் கூட்டமொன்று நேற்று பி.ப 2.30 மணிக்கு யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் அரச அதிபர் இமெல்டா (15 ஆம் பக்கம் பார்க்க)

# மானிப்பாயில் நடமாடும் சேவை; பொலிஸ் திணைக்களம் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

பொலிஸ் மா அதிபர் மற்றும் பொலிஸ் திணைக்களத்தின் ஆலோசனைக்கிணங்க மானிப்பாய் பொலிஸ் நிலையத்தினரால் நடத்தப்படும் நடமாடும் சேவை நாளை காலை 8 மணி முதல் மாலை 4 மணிவரை மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்த நடமாடும் சேவையில், பொலிஸ் உயரதிகாரிகள், பிரதேச சபை செயலாளர், பிரதேச செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்துகொண்டு பொதுமக்களின் முறைப்பாடுகள் தொடர்பில் தீர்வினை வழங்கவுள்ளனர்.

இச்சேவையில் திருமணப் பதிவு, பிறப்பு அத்தாட்சிப் பத்திரப் (15 ஆம் பக்கம் பார்க்க)

# மாத இறுதியில் இந்திய தூதுக்குழு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனினால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை தொடர்பில் ஆராய்வதற்காக இந்திய உயர்மட்டத் தூதுக்குழுவொன்று எதிர்வரும் 26 ஆம் திகதி இலங்கைக்கான விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளதாக இராஜதந்திர வட்டாரச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்திய வெளிவிவகாரச் செயலாளர் நிரூபமா ராவ், இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவசங்கர் மேனன், பாதுகாப்புச் செயலாளர் பிரதீப் குமர் ஆகியோரை உள்ளடக்கிய இந்த (15 ஆம் பக்கம் பார்க்க)

# தந்தை செல்வாவின் கூற்று இன்று நிதர்சனமாகியுள்ளது

## பேராசிரியர் சிவச்சந்திரன் கூறுகின்றார்

(கொழும்பு)

ஈழத்தமிழர் கடந்த 62 வருடங்களாக சிங்கள மேலாதிக்கத்திற்கு உட்பட்டு சொற்களுக்குள் அடங்காத துன்ப, துயரங்களை மற்றும் உடன்படிக்கை என்ற போர்வையில் மீறப்பட்ட ஏமாற்றங்களை சந்தித்து வந்தார்கள்.

இதன் உச்சமாக 2009 மே இல் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் கொத்துக் குண்டுகளாலும், கனரக ஆயுதங்களாலும் கொலை வெறித் தாண்டவத்திற்கு உட்பட்டு உலக மனச்சாட்சியை உறுத்தும் விதமாக மரணமடைந்தார்கள். இதனை ஐ.நா அறிக்கை தெளிவாக தெரிவிக்கின்றது.

சிந்தனைக்கூடம் - யாழ்ப்பாணம் எனும் ஆய்வு அபிவிருத்தி நிறுவனத்தின் இயக்குநரும், தமிழரசுக்கட்சியின் மூத்த உறுப்பினருமான பேராசிரியர் இரா.சிவசந்திரன் அ.தி.மு.க வெற்றி குறித்து வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்தும் தெரிவிக்கும்போது:

தந்தை செல்வா ஈழத்தமிழர் இன்னல் கண்டு ஈழத்தமிழரை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்று வேண்டினார். இவ் வார்த்தையை பலர் விமர்சித்தனர். ஆனால் இன்று இது நிதர்சனமாகி வருகின்றது.

சனல்-04, அல்ஜீரா, விக்கிலீக்ஸ் எனும் ஊடகங்களைக் காக்கும் கடவுளாக தரிசிக்கும் நாம் இன்று தமிழ் நாட்டில் அ.தி.மு.கவின் அமோக வெற்றியுடன் கடவுளின் ஒளி மிகு தரிசனத்தை காண்கின்றோம்.

தமிழ்நாட்டு மக்கள் தமிழரைக் கொன்றுகுவித்தவர் பக்கம் நின்று துரோகம் இழைத்த தி.மு.கவை முகவரியின்றி துடைத்து எறிந்தமைக்கு ஈழத் தமிழர் பால் தமிழ்நாட்டு தமிழர் கொண்ட பந்தம், பாசம், உறவு தான் முக்கிய காரணம் என்பது நிதர்சனம்.

ஜெயலலிதாவின் அ.தி.மு.க ஆட்சி ஈழத்தமிழருக்கு அவர்களது நியாயமான போராட்டத்திற்கு ஆதரவளித்து அவர்கள் சம உரிமை பெற்றுச் சுதந்திர ஈழத்தில் வாழ வழிகாண வேண்டும்.

இப்பணிக்காகத்தான் தமிழ் நாட்டு மக்கள் அ.தி.மு.க வை ஆட்சிபீடம் ஏற்றியுள்ளார்கள். ஈழத்தமிழர், ஜெயலலிதா ஆட்சியை வாழ்த்துவதோடு எமது விடுதலைக்காக அவரது உதவியை நாடி நிற்கின்றார்கள்.

உலகெங்கும் நாதியற்று பரந்துள்ள தமிழரை தலை நிமிரச்செய்யுங்கள். மனித உரிமை யாவும் பெற்று வாழ வழி காட்டுங்கள் என ஜெயலலிதா அம்மையாரை வேண்டுகின்றோம் என்றும் அவர் தெரிவித்தார்.


### மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் மாபெரும் கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டி - 2011

இடம் :- மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழக மைதானம்
காலம் :- 14.05.2011 சனிக்கிழமை பிற்பகல் 2 மணி

**தலைவர்**
திரு சி.தயாளன் (விளையாட்டுக்கழக செயலாளர்)

**பிரதம விருந்தினர்**
மாண்புமிகு கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்கள்
(பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுகைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர்)

**சிறப்பு விருந்தினர்கள்**
கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் - சில்வேஸ்திரி அலன்ரின் அவர்கள்
(பாராளுமன்ற உறுப்பினர் - யாழ்.மாவட்டம்)
திருமதி சாந்தசீலன் அஞ்சலிதேவி அவர்கள்
(பிரதேச செயலர் - தென்மராட்சி)

**கௌரவ விருந்தினர்கள்**
திரு க.கமலேந்திரன் அவர்கள்
(யாழ்.மாவட்ட மைப்பாளர், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி)
திரு சூசை ந்து அலெக்சாண்டர் சாள்ஸ் அவர்கள்
(தென்மராட்சி மைப்பாளர், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி)
திரு க.செல்வராஜன் அவர்கள்
(முகாமையாளர் AVIVA NDB காப்புறுதி நிறுவனம்)
செல்வி தி.தர்சினி
(பிரதேச சபை செயலாளர்)

இறுதிப் போட்டியில் மோதும் கழகங்கள்
ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம் எதிர்
ஆவரங்கால் இந்து விளையாட்டுக் கழகம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழகம்

ஊடக அனுசரணை தினமுரசு



### THE PRINCESS OF WALES Nursing Home
### வேல்ஸ் இளவரசி வைத்தியசாலை

132, Kachcheri Nallur Road, Jaffna. E.Mail :- Princesshosp@gmail.com
T.P :- 0214922588, 0214922589, 0212226179. Fax :- 0212226180

- பொது சத்திரசிகிச்சை வைத்திய நிபுணர்
- இருதயநோய் சிகிச்சை வைத்திய நிபுணர்
- மகப்பேற்று சிகிச்சை வைத்திய நிபுணர்
- குழந்தைகள் சிகிச்சை வைத்திய நிபுணர்
- பொது சிகிச்சை வைத்திய நிபுணர்
- காது, மூக்கு, தொண்டை சிகிச்சை வைத்திய நிபுணர்
- நீரிழிவு சிகிச்சை வைத்திய நிபுணர்

மேற்குறிப்பிட்ட சிகிச்சைகள் யாவும் யாழ்.போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர்களினால் வழங்கப்படுகின்றன என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

- ஸ்கானிங் ECG, இரத்த, சல பரிசோதனைகளும் இங்கு செய்து கொடுக்கப்படும்.
- சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான மருத்துவச் சான்றிதழ்கள் தகுதி வாய்ந்த வைத்தியர்களினால் வழங்கப்படுகின்றன.
- மகத்தான வைத்திய சேவையுடன் கூடிய முதியோர் பராமரிப்பும் நடைபெறுகின்றன.


அடிப்படை தாதியர் பயிற்சி நெறியின் 2ஆம் பிரிவு யூன் மாதம் 1ஆம் திகதி ஆரம்பமாகின்றது.

உடனடியாக தொடர்புகொண்டு உங்கள் பெயர்களை பதிவுசெய்து கொள்ளுங்கள்

தேவை :- காலை மாலை வேளைகளில் கடமையாற்றுவதற்கு அனுபவம் வாய்ந்த வைத்தியர்கள் உடன் தேவை. (தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும்)

(R/035)


## சுழிபுரத்தில் "ஓவியச்சாளரம்"



படம் – ஊடகவியல் மாணவன் க.மனோகராசா

(சுழிபுரம்)

ஓவியச்சாளரம் என்ற தொனிப்பொருளில் ஓவிய சிற்ப கண்காட்சி ஒன்று சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியில் இடம் பெறுகின்றது. மிகப் பெரியளவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந் நிகழ்வில் இருநூறுக்கும் மேற்பட்ட ஓவியம் மற்றும் சிற்பங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

ஓவியச் சாளரம் தொடர்பாக கல்லூரியின் சித்திர ஆசிரியர் ஸ்ரீஸ்கந்தமூர்த்தி தெரிவிக்கையில்: "மாணவர்களின் நீண்ட காலப்பயிற்சி மற்றும் பாடசாலைச் சமூகத்தின் ஒத்துழைப்பின் மூலமும் இது சாத்தியமாக்கப் பட்டுள்ளது. இதனை பாடசாலை மற்றும் இத்துறைசார் பல்கலைக்கழக மாணவர்கள் பார்வையிட்டு, இளம் ஓவியர்களை ஊக்கப்படுத்த வேண்டும்" என்றார்.

இதன் ஆரம்ப நிகழ்வு நேற்று விலகாமம் கல்விப் பணிப்பாளர் அ.இராஜேந்திரம், பாடசாலை அதிபர் வ.ஸ்ரீகாந்தன் மற்றும் வலிகாமம் வலய சித்திர முதன்மை ஆசிரியர் ம.இளமுருகன் ஆகியோ ஆரம்பித்து வைத்தனர். இக் கண்காட்சி இன்றும், திங்கட்கிழமையும் காலை 9.00 தொடக்கம் மாலை 5 மணிவரை பார்வைக்காகத் திறந்து வைக்கப்படும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

## பொதுக்கூட்டம்

உடுப்பிட்டி நாவலடி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய பரிபால சபையின் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகசபைத் தெரிவும் நாளை ஞாயிற்றுக் கிழமை பி.ப. 2மணிக்கு நடைபெறவுள்ளது. இதில் சபை உறுப்பினர்களைக் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப் பட்டுள்ளது. (18)

## பொதுக்கூட்டம்

(ஆனைக்கோட்டை)

நவாலி இந்து சமய விருத்தி சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று சனிக்கிழமை மாலை 3 மணிக்கு நவாலி முதலியார் மகேஸர் இல்லத்தில் மோகன முரளி தலைமையில் நடைபெறவுள்ளது. இக் கூட்டத்தில் சகல உறுப்பினர்களையும் பாடசாலை மாணவர்களின் பெற்றோரையும் தவறாது வருகைதருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (104)

## ஏல விற்பனை பிற்போடப்பட்டுள்ளது

மக்கள் வங்கியில் நாளை நடைபெறவிருந்த நகை ஏல விற்பனை தவிர்க்கமுடியாத காரணங்களால் பிற்போடப்பட்டுள்ளது. ஏல விற்பனைத் திகதி பற்றி பின்னர் அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

# அரசாங்க அறிவித்தல்

## நிவாரண விநியோகத்திற்குரிய பொருட்களை கொள்வனவு செய்வதற்கான கூறுவிலை கோரல்

யாழ்.மாவட்டத்தில் இடம்பெயர்ந்த மக்களுக்கு மூன்று மாதங்களுக்குரிய நிவாரண விநியோகத்தை மேற்கொள்வதற்காக பின்வரும் பொருட்களை கொள்வனவு செய்வதற்கான கூறுவிலைகள் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபரினால் கோரப்படுகின்றன.

01. சிவப்பு நாட்டரிசி
02. கோதுமை மா
03. சீனி
04. பருப்பு

இப் பொருட்கள் கொள்வனவு செய்வதற்கான முத்திரையிடப்பட்ட (sealed) கூறுவிலைகள் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபரினால் கோரப்படுகின்றது. இப் பொருட்களை விற்பனை செய்ய விரும்புபவர்கள் மீளளிப்பு அற்ற வைப்புப் பணமாக ரூபா 5000.00 உம், மீளளிக்கக் கூடியதான வைப்பாக ரூபா 50,000.00 உம் செலுத்தி விண்ணப்பப் படிவத்தை புனர்வாழ்வுக் கிளையில் பெற்று தபால் உறையின் மேல் மூலையில் "நிவாரண விநியோகத்திற்குரிய பொருட்களுக்கான கூறுவிலை" எனக் குறிப்பிட்டு 27.05.2011 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு புனர்வாழ்வுக் கிளையில் உள்ள கேள்விப் பெட்டியில் நேரடியாக அல்லது பதிவுத்தபால் மூலம் சீல் (seal) இடப்பட்ட கடித உறையில் தங்களது கூறுவிலைகளை சமர்ப்பிக்குமாறு கோரப்படுகின்றார்கள். கூறுவிலைகள் சமர்ப்பிக்கப்படும்போது அப் பொருட்களுக்கான மாதிரி சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பொருட்கள் கொள்வனவு செய்தல் தொடர்பாக பொருட்களின் தரம், கேள்வி நிபந்தனைகள் மற்றும் விண்ணப்பப் படிவங்களை மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகத்துடன் தொடர்புகொண்டு 16.05.2011 ஆம் திகதி முதல் பெற்றுக்கொள்ள முடியும்.

கூறுவிலைகள் 27.05.2011 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு திறக்கப்படும். இதில் கூறுவிலை சமர்ப்பித்தவர் அல்லது அவரின் அனுமதி பெற்ற பிரதிநிதி சமூகமளிக்க முடியும். பொருட்களை விநியோகிப்பவர்கள் கோரப்படும் தொகையினை கொள்வனவுக் கட்டளை வழங்கப்பட்ட தினத்தில் இருந்து ஒரு வாரத்தினுள் நாவற்குழி அரச உணவுக் களஞ்சியத்தில் ஒப்படைத்தல் வேண்டும்.

**கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.**

**திருமதி இமெல்டா சுகுமார்,**
**அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலர்,**
**யாழ்.மாவட்டம்.**

(C/725)

ஒரு பொருளை இழந்த காலத்திலும் மனம் தளராமல் உறுதியுடன் இருக்கவேண்டும் அப்படி இருப்பதுதான் மறுபடியும் செல்வத்தை நம்மிடம் தோற்றுவிக்கும். - ஔவையார்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## கவனத்திற்குரிய பிரச்சினைகள்

தீர்வு தொடர்பாக அரசாங்கம் நடத்திவரும் பேச்சுத் தொடரில் இதுவரை கூட்டமைப்பினருடன் ஆறு முறையும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினருடன் இரண்டு முறையும் பேச்சுக்கள் நடைபெற்றிருக்கின்றன.

13ஆவது திருத்தத்துக்கு மேலாக என்ன? இரண்டாவது சபையின் அதிகாரங்கள் என்ன? என்பது போன்ற ஆராய்வுகள் நடைபெற்றிருப்பதற்கான செய்திகள் கசியவிடப்பட்டுள்ளன.

அவை ஒருபுறமிருக்க, ஈ.பி.டி.பி.க்கும், அரசுக்குமிடையிலான பேச்சின்போது பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கும் இரண்டு உடனடிப் பிரச்சினைகள் நமது முக்கிய கவனத்துக்குரியவையாகின்றன.

ஒன்று, வன்னிப் பகுதியில் காணியுரிமை அற்றோரின் பிரச்சினை, மற்றது, வெளிநாடுகளிலிருந்து வருவோர் எம்.ஓ.டி. எனப்படும் இராணுவ அனுமதிப்பத்திரம் பெறவேண்டுமென்ற நடைமுறை இன்னமும் தொடர்வது.

வன்னிப் பகுதியில் பெரும்பாலான காணிகள், படித்த வாலிபருக்கான காணி வழங்கும் திட்டம் போன்ற பல திட்டங்களினூடாக இரண்டு ஏக்கர், ஐந்து ஏக்கர் என தமிழ் இளைஞர்களுக்குப் பகிர்ந்து வழங்கப்பட்டவை. எழுபதுகளில் பெரும்பாலான இளைஞர்கள் இக்காணிகளுக்காக வன்னிக்குப் பயணப்பட்டார்கள்.

ஆனால், இவர்களில் பெரும்பாலானோர் காணியை வாங்கிக்கொண்டார்களே தவிர அங்கு தங்க உத்தேசிக்கவில்லை. காணிகளைப் பார்த்துக் கொள்ள, வறிய மக்களைப் பிடித்து அமர்த்தி விட்டு, இவர்கள் அவ்வப்போது மட்டுமே சென்று பார்த்துவிட்டு வருபவர்களாக இருந்தார்கள். யுத்தம் ஆரம்பித்தவுடன், வசதி படைத்த இந்த இளைஞர்களில் பெரும்பாலானோர் வெளிநாடுகளுக்குப் பறந்துவிட்டார்கள்.

காணிகளில் குடிமயர்ந்த வறிய மக்கள் பல்கிப் பெருகி அங்கே முப்பதாண்டுகளுக்கு மேலாக வாழ்ந்துவிட்டார்கள். ஆனால், அந்தக் காணிகளின் உறுதிகளோ வெளிநாடுகளில் உள்ளவர்களிடம் இருக்கிறது.

அந்தக் காணிக்கான எந்த உரிமையுமற்று அதில் வாழ்ந்து கொண்டிருப்பவர்களுக்கான மாற்று ஏற்பாடு என்ன? இது நிச்சயம் விடை காணப்பட வேண்டிய கேள்வியாகும்.

அடுத்து, வெளிநாடுகளிலிருந்து வடக்கிற்கு வருபவர்களுக்கான இராணுவ அனுமதிப்பத்திர முறையை நீக்க வேண்டும் என்ற கோரிக்கையையையும் அரசு உடனடியாகப் பரிசீலிக்க வேண்டும்.

வெளிநாடுகளிலிருந்து வருபவர்களைப் பெருமளவுக்குக் குறைக்கும் இதுபோன்ற தடைகள் வடக்கின் பொருளாதாரத்தை மட்டுமல்லாது, முழு நாட்டின்பொருளாதாரத்தையும் பாதிக்கும் என்பதை அரசு உணர வேண்டும்.

சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதில் முயற்சிகள் மேற்கொண்டு வருவதாகக் கூறும் அரசு, இதுபோன்ற 'பாஸ' நடைமுறைகளால் அதைப் பெருமளவு வீழ்ச்சியுறவே வைக்கிறது. அதுமட்டுமல்லாது, வடக்கில் வர்த்தக, தொழில் முயற்சிகளை மேற்கொள்ள வருபவர்களையும் இந்தக் கெடுபிடி நடைமுறைகளால் அச்சுறுத்திக் கொணடிருப்பதில் அரசுக்கோ, நாட்டுக்கோ எந்த இலாபமும் இல்லை.

அரசு இதைப் புரிந்துகொண்டு தேவையற்ற இந்தப் 'பாஸ்' அச்சுறுத்தல் நடவடிக்கைகளை இப்போதும் தொடர்வதை நிறுத்துவது பயன் மிகுந்ததாகும்.

-ஆசிரியர்.

# சிறுவர் துஷ்பிரயோகத்தை ஒழிப்பதற்கு கிராமங்கள்தோறும் குழுக்கள் அமைப்பு

### சிறுவர் நன்னடத்தைப்பிரிவினர் நடவடிக்கை

(கிளிநொச்சி)

வன்னியில் இடம்பெற்றுவரும் சிறுவர் துஷ்பிரயோகத்தை இல்லாதொழிக்கும் நோக்குடன் சிறுவர் நன்னடத்தைப் பிரிவினர் கிராமங்கள் தோறும் கலந்துரையாடல்களை நடத்தி அவற்றின்மூலம் குழுக்களை நியமித்து சிறவர்களுக்கான விழிப்புணர்வுகளை வழங்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்பிரகாரம் நேற்று முன்தினம் கனகாம்பிகைக்குளத்தில் கலந்துரையாடல் ஒன்று நடத்தப்பட்டு 9பேர் கொண்ட குழு ஒன்று தெரிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் தெரிவு செய்யப்படும் குழு அந்தக் கிராமங்களில் இடம்பெறும் சிறுவர் துஷ்பிரயோகங்களை இல்லாதொழித்து அவர்களுக்கு விழிப்புணர்வு வழங்குவதை முக்கிய நோக்கமாகக் கொண்டு செயற்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி ஒவ்வொரு கிராமத்திலும் 18 வயதிற்கு உட்பட்ட சிறுவர்களை வேலைக்கு அமர்த்த முடியாது. தாய் தந்தை இல்லாத சிறுவர்களை அவர்களது உறவினர்கள் எடுத்து வளர்க்கவேண்டுமாயின் நீதிமன்ற அனுமதியைப் பெறவேண்டும், தாய் தந்தைஇல்லாத பிள்ளைகளை விடுதியில் சேர்ப்பதற்கு நீதிமன்றின் அனுமதி பெறவேண்டும்.

இதேவேளை தாய், தந்தை இருக்கின்ற பிள்ளைகளை விடுதியில் சேர்க்கமுடியாது சிறுவர்கள் பாடசாலை செல்வது கட்டாயமாகும். இது போன்ற விடயங்களை இனங்கண்டு அவற்றைச் சரியான முறையில் செயற்படுத்துவதற்கே இக்குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக சிறுவர் நன்னடத்தைப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இதைவிட வேறுஇடங்களிலிருந்து இம்மாவட்டத்தில் வந்து தங்கியிருப்பவர்கள் தொடர்பாக இக்குழுவினால் பதிவுகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

அத்துடன் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் இல்லாத சிறுவர்களுக்கு கரைச்சி பிரதேச செயலகப் பிரிவின் ஏற்பாட்டில் ஒவ்வொரு புதன்கிழமையும் இப்பிறப்பு அத்தாட்சிப்பத்திரத்தை பெற்றுக்கொள்வதற்கான பதிவு நடவடிக்கை இக்குழுவினால் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், கரைச்சி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட 16 கிராமங்களில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் இன்னும் பல கிராமங்களில் இச்செயற்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் தெரியவருகிறது.

அத்துடன் சிறுவர்களுக்கு வேண்டிய உதவிகளும் பெற்றுக்கொடுக்க எண்ணியுள்ளதாக சிறுவர் நன்னடத்தை பிரிவினர் மேலும் தெரிவித்துள்ளனர். (17)

## சட்டவிரோத மது விற்பனை தீவகத்தில் அதிரடி நடவடிக்கை

(அல்லைப்பிட்டி)

அல்லைப்பிட்டி பகுதியில் சட்ட விரோத மதுபான விற்பனையில் ஈடுபட்ட 4 பேர் மீது மதுவரி திணைக்கழத்தினரால் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

அப்பகுதி பொது மக்கள் வழங்கிய தகவலை அடுத்து அப் பகுதிக்கு சென்ற யாழ்.மதுவரித் திணைக்கள பொறுப்பதிகாரி ந. கிருபாகரன் தலைமையில் சென்ற குழுவினர் சட்டவிரோதமாக மதுபானத்தை விற்பனை செய்த நான்கு பேரையும் அடையாளம் கண்டு இந்த நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இவர்கள் மீது ஊர்காவற்துறை நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது. வழக்கினை விசாரணை செய்த நீதிபதி திருமதி யோய் மகிழ் மகாதேவா குறித்த நபர்களை குற்றவாளிகளாக இனங்கண்டு தலா 1000 ரூபா தண்டப்பணம் செலுத்துமாறு உத்தரவிட்டார். மன்றில் ஆஜராகத ஒருவருக்கு எதிராக நீதிபதி பிடியாணை உத்தரவு பிறப்பித்துள்ளார். (கா)

## நடமாடும் நூல் நிலையசேவையை நடத்த யாழ். பொது நூலகம் தயாராக உள்ளது

### பிரதான நூலகர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.நூல் நிலைய நடமாடும் சேவை தேவைப்படும் பாடசாலைகள் மற்றும் நிறுவனங்கள் முதலியவை தம்மிடம் தொடர்புகொண்டு கோரும் பட்சத்தில் பாடசாலைகள், நிறுவனங்களுக்கு இச் சேவையை வழங்கத் தயாராக இருப்பதாக யாழ். பொது நூலக பிரதான நூலகர் எஸ்.தனபாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

தற்சமயம் யாழ். மாநகர பொது நூலக, நடமாடும் நூலக சேவை மாதத்தில் நான்கு தடவை பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுவருகின்றது.

இது தவிர மேலும் இச்சேவை தேவைப்படும் பாடசாலைகளும், பொது நிறுவனங்களும் தம்முடன் தொடர்புகொண்டு கோரும்பட்சத்தில் இச் சேவை வழங்கப்படும் எனவும் இந்த வருடம் தை மாதம் முதல் யாழ். பொது நூலகத்திற்கு 1000 வரையான புத்தகங்கள் அன்பளிப்பாகக் கிடைத்துள்ளதாக தெரிவித்த பிரதம நூலகர் நேற்றையதினம் இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தினால் ஒரு தொகுதி இந்து கலாசார நூலகள் வழங்கப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார். அத்துடன் யாழ்.பொது நூலகத்தை கடந்த 2004 ஆம் ஆண்டு முதல் நேற்றுவரை 14,700 வரையான வாசகர்கள் இதனைப்பயன்படுத்தியுள்ளதாகவும் நூலகத்தின் புள்ளி விபரத்தை மேற்கோள்காட்டி அவர் மேலும் தெரிவித்தார். (பா)

## கிராமிய மீன் எழுச்சித்திட்டத்தின் கீழ் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுப்பு

(வடமராட்சி கிழக்கு)

பருத்தித்துறை பிரதேசசபை எல்லைக்குட்பட்ட வடமராட்சி கிழக்கு வத்திராயன், உடுத்துறை, ஆழியவளை ஆகிய பிரதேசங்களில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கிராமிய மீன் எழுச்சித்திட்டத்தின் மூலம் வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் வத்திராயன் ஜே/429 கிராம சேவையாளர் பிரிவில் மீனவர் இளைப்பாறு மண்டபம் மற்றும் பொதுநோக்கு மண்டபம் என்பன புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ளதுடன் வெள்ளவாய்க்காலும் புனரமைக்கப்படவுள்ளது.

உடுத்துறை ஜே/430 கிராம சேவையாளர் பிரிவில் 10 ஆம் வட்டாரத்தில் மீனவர் இளைப்பாறு மண்டபமும் 9ஆம் வட்டாரத்தில் பொது நோக்கு மண்டபமும், வேம்படியில் நூல்நிலையமும் புனரமைப்புச் செய்யப்படவுள்ளதுடன் கொக்கிளாய் வீதி புனரமைப்பு செய்யப்படவுள்ளது. அத்துடன் ஆழியவளை ஜே/431 கிராம சேவையாளர் பிரிவில் மீனவர் இளைப்பாறு மண்டபம், பொதுநோக்கு மண்டபம், பாலர் பாடசாலை, பொதுக் கிணறு என்பன புனரமைப்புச் செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (38)

## வெள்ளரி, வத்தகைப்பழத்துக்கு மவுசுடன் விலையும் அதிகரிப்பு

(அச்சுவேலி)

தற்போது தொடரும் வெப்பநிலையைத் தொடர்ந்து வெள்ளரிப்பழம் மற்றும் வத்தகைப் பழங்களுக்கான மவுசு என்றுமில்லாத அளவு அதிகரித்துள்ளது.

உடல் சூட்டைத் தணிக்கக்கூடியதும், ஆரோக்கியம் அளிக்கக்கூடியதுமான இப்பழங்களுக்கு சந்தைகளில் பெரும் அளவில் கிராக்கி இருந்து வருவதால், இவை விரைவாக விற்றுத் தீர்ந்து விடுவதையும் காணமுடிகிறது. முன்னர் மிகவும் குறைந்த விலையில் விற்பனை செய்யப்பட்டு வந்த இப்பழங்கள் தற்போது கிலோ 50 முதல் 60 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதேவேளை, வியாபாரிகள் தோட்டங்களுக்குச் சென்று இப்பழவகைகளைக் கொள்வனவு செய்வதிலும் பேரார்வம் காட்டிவருகின்றனர். (03)

# வடபகுதிக்கடலில் மீன்வளம் குறைவதற்கு இந்திய மீனவரின் அத்துமீறலே காரணம்

### சமாசத்தலைவர் தவரட்ணம்

(கொழும்பு)

இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கையே வடபகுதிக் கடலில் மீன்வளம் குறைவடைந்ததுக்குக் காரணமென யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசத் தலைவர் எஸ். தவரட்ணம் தெரிவித்துள்ளார். இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகள் இலங்கைக் கடற்பரப்புக் குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டமையே மீன்வளம் குறைவடைவதற்கு காரணமாகும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். தற்போது தென்மேல் பருவக்காற்று வீசுவதனால் இக் காலப்பகுதியில் வழமையாகவே மீன்வளம் குறைந்து காணப்படுகிறது. ஆனால், காலநிலை மாற்றத்தினால் இந்நிலை ஏற்படவில்லை. இலங்கையின் கடல்வளம் குன்றியதன் காரணமாக மீன்கள் ஓரிடத்தில் தங்கியிருப்பதில்லை. அவை வளமுள்ள இடங்களைத் தேடிச் செல்வதனாலயே இலங் கையின் மீன்வளம் குறைந்து செல்கிறது. வடபகுதிக் கடற்பரப்பில் மீன்வளம் குன்றியுள்ளதனால் மீனவர்கள் தொழிலைச் செய்ய முடியாதநிலை உருவாகியுள்ளது. இதனால் மீனவர்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர் என யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தலைவர் மேலும் கூறியுள்ளார்.

# பழைய மாணவர்கள் தந்துதவும் நிதியை சிறந்த முறையில் பயன்படுத்தவேண்டும்

## வித்தியாலய அதிபர் சண்முககுமார் தெரிவிப்பு

(யாழ்.நிருபர்)

பாடசாலைகளின் வளர்ச்சிக்கு பழைய மாணவர்கள் வழங்கும் நிதிஉதவிகளைச் சிறந்த முறையில் பயன்படுத்தி மாணவர்கள் உச்சப் பயன் பெறுவதற்கு ஆசிரியர்கள் முழுமையான ஒத்துழைப்பினை வழங்க வேண்டும் என்று கோண்டாவில் இந்துமகாவித்தியாலய அதிபர் சு. சண்முககுமார் தெரிவித்துள்ளார்.

மேற்படி பாடசாலையின் பழையமாணவர்களான பேராயர் சுபகேசன், பாலசுப்பிரமணியம் பால்ராஜன் ஆகியோர் போட்டோ பிரதி இயந்திரம் ஒன்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

போட்டோப்பிரதி இயந்திரம் கையளிப்பு வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அதிபர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் காலத்தின் தேவை கருதி உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் உள்ள பழைய மாணவர்கள் பாடசாலையின் வளர்ச்சிக்காகப் பல்வேறு உதவிகளை வழங்கி வருகின்றனர். புலம் பெயர்ந்த நாடுகளில் கொட்டும் பனியிலும் நடுங்கும் குளிரிலும் கஷ்ரப்பட்டு உழைத்த பணத்தை எமது பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிகருதி அனுப்பிவைக்கின்றனர்.

ஆசிரியர்களும், மாணவர்களும் இதை ஒரு கணம் சிந்தித்துப் பார்க்கவேண்டும் பழைய மாணவர்கள் எவ்வளவோ கஷ்ரப்பட்டு எமக்கு உதவி செய்கிறார்கள். அவர்களது கனவை நனவாக்க வேண்டுமானால் மாணவர்கள் நன்கு கற்று சிறந்த பெறுபேறுகளைப்பெறவேண்டும்.

அண்மையில் வெளிவந்த கல்விப்பொதுத்தராதரப்பத்திர சாதாரணதரப் பரீட்சைப்பெறுபேறுகள் திருப்திகரமாக அமைந்துள்ளன. கணிசமான மாணவர்கள் உயர்தரவகுப்புக்குத் தகுதிபெற்றுள்ளனர். 93 சத வீதமானோர் உயர்தரப்பரீட்சையில் சித்தி பெற்றுள்ளனர் என்றார். (10)

# வீதியைத் திருத்தக்கோரிக்கை

(பளை)

பளை ஏ-9 வீதியில் இருந்து புலோப்பளை வரை செல்லும் வீதி கடந்த பல வருடங்களாகத் திருத்தப்படாமையினால் குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது.

பச்சிலைப்பள்ளி பிரதேசத்திலுள்ள சகல வீதிகளும் புனரமைக்கப்பட்ட நிலையில் வீதி அபிவிருத்தித் திணைக்கள பரிபாலனத்தில் இவ் வீதி அடங்குவதால் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையினரால் இவ் வீதி திருத்த முடியாதுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆகவே குண்டும் குழியுமாகவுள்ள இவ் வீதியை வீதி அபிவிருத்தித் திணைக்களத்தினர் (ஆர்.டி.டி) திருத்தியமைத்து மக்கள் போக்குவரத்துக்கு உதவ வேண்டுமென இக் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (70)

# வெசாக் பண்டிகையை முன்னிட்டு 3 தினங்கள் மதுபான விற்பனைக்குத்தடை

(யாழ்ப்பாணம்)

வெசாக் பண்டிகையை முன்னிட்டு எதிர்வரும் 16ஆம் திகதியிலிருந்து 3 தினங்கள் அனைத்து மதுபான விற்பனை நிலையங்களும் மூடப்பட்டிருக்கும் என மதுவரித் திணைக்களத்தினர் அறிவித்துள்ளனர்.

மதுபான விற்பனை நிலையம், விருந்தினர் விடுதிகள் எவற்றிலும் குறித்த மூன்று தினங்களிலும் மதுபானங்களை விற்பனை செய்யக்கூடாது. அறிவித்தலை மீறி மதுபான விற்பனை செய்வதனைக்கண்டுபிடிப்பதற்கென விசேட குழு பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளது. அவர்கள் எந்நேரமும் திடீர்ப் பரிசோதனை நடத்தக் கூடியவகையில் தயார் நிலையில் வைக்கப்படுவர் எனவும் மதுவரித்திணைக்களத்தினர் மேலும் தெரிவித்தனர். (கா)

# மதுபோதையில் சென்றவருக்கு தண்டப்பணம் அறவீடு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பகுதியில் சாரதி மற்றும் காப்புறுதி அனுமதிப் பத்திரம் இன்றி மோட்டார் சைக்கிளில் பயணம் செய்ததுடன் மதுபோதையில் சென்ற ஒருவர், பொலிஸார் மறித்தும் அவர்களுடன் முரண்பட்டதை அடுத்து குறித்த நபரை கொடிகாமம் பொலிஸார் கைது செய்து சாவகச்சேரி நீதிமன்றில் அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்தனர்.

நேற்று முன்தினம் இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது நீதிபதி முன்னிலையில் குற்றவாளி குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து, அவருக்கு 13 ஆயிரம் ரூபா அபராதம் விதித்ததுடன் செலுத்தத்தவறின் 5மாத சாதாரண சிறைத்தண்டனையை அனுபவிக்குமாறு நீதிபதி மா.கணேசராசா உத்தரவிட்டார். (11)

# மக்களின் அவஸ்தை நீங்க வீதி திருத்தப்படுவது எப்போது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகரை அண்டிய பகுதியில் உள்ள இருபெரும் குடியிருப்புக்களுக்குச் செல்லும் வீதிகள் முற்றாகச் சேதமடைந்துள்ளன. கிளி நகரில் ஆரம்பித்து கோணாவில், புதுமுறிப்பு, அக்கராயன் எனத் தொடர்குடியிருப்புக்களுக்கு செல்லும் வீதியும், கிளிநொச்சியில் ஆரம்பித்து வட்டக்கச்சி, இராமநாதபுரம், கல்மடு ஆகிய பகுதிகளுக்குச்செல்லும் வீதியும் மிகவும் சேதத்திற்குள்ளாகியுள்ளன.

இதில் புதுமுறிப்பு கோணாவிலூடாகச் செல்லும் வீதியில் முறிப்புப்பகுதியை அண்டியுள்ள பாலம் இடிந்து வீழ்ந்துள்ளது. கண்டர் ரக வாகனமொன்று கட்டட உபகரணங்களை ஏற்றிச்சென்றுகொண்டிருந்தவேளையே அப்பாலம் இடிந்து வீழ்ந்தது. இதனால் வாகனத்தின் சாரதி மயிரிழையில் உயிர்தப்பியுள்ளார்.

இவ்விரு வீதிகளும் வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ் உள்ளவை. இவற்றைப் புனரமைப்பதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதும், இவை இன்றுவரை திருத்தப்படவில்லை. இதனால் வன்னிப்பெருநிலப்பரப்பின் பெருமளவான மக்கள் பெரும் பாதிப்புக்களை எதிர்கொண்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (29)

# குழந்தையைப் பிரசவிக்க முடியாமல் பரிதாபகரமாக உயிரிழந்த பெண்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனாவைத்திய சாலையில் பிரசவத்திற்கென அனுமதிக்கப்பட்ட பெண்ஒருவர் பிரசவத்தின்போது குழந்தையை பிரசவிக்க முடியாமல் உயிரிழந்த பரிதாப சம்பவமொன்று நேற்று முன்தினம் அதிகாலை யாழ். போதனாவைத்திய சாலையில் இடம்பெற்றது.

மன்னார் வங்காலையைச் சேர்ந்த சுப்பிரமணியம் வேதராணி (வயது 26) என்ற பெண்ணே பிரசவத்தின் போது உயிரிழந்தவராவார். கடந்த ஞாயிற்றுக்கிழமை பிரசவத்திற்காக குறித்த பெண் யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். இவர் நேற்று முன்தினம் அதிகாலை 5.00 மணியளவில் பிரசவத்திற்கென அனுமதிக்கப்பட்டதாகவும் எனினும் குழந்தையைப் பிரசவிக்க முடியாது அவர் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவம் குறித்து யாழ். போதனாவைத்தியசாலையின் சட்டவைத்திய அதிகாரியின் விசாரணையையும் கோரப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது. (பா)

# பொதுக்கிணறுகளை சுத்தம்செய்ய வலி.வடக்கு பிரதேசசபை நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கில் அண்மையில் மீள்குடியேற அனுமதி வழங்கப்பட்ட பிரதேசங்களில் பொதுப்பாவனையில் உள்ள கிணறுகளை வலி. வடக்கு பிரதேசசபையினர் சுத்தம் செய்யவுள்ளனர்.

மீள்குடியமர அனுமதிக்கப்பட்ட மாவிட்டபுரம் மாவை கலட்டிபோன்ற பிரதேசங்களில் உள்ள பொதுக்கிணறுகளையே பிரதேசசபை சுத்திகரிக்கவுள்ளது.

இதேவேளை அப்பகுதியில் பவுசர் மூலமான குடிநீர் தற்போது வழங்கப்பட்டுவருகிறது.

இப்பகுதியில் உள்ள வீதிகளின் விபரங்கள் பிரதேச சபையினரால் சேகரிக்கப்பட்டுவருகிறது. ஆவணங்கள், மற்றும் ஏனைய பல வழிகளில் வீதிகளின் விபரங்கள் சேகரிக்கப்பட்டுவருகின்றது. இவ் விபரங்கள் சேகரிக்கப்பட்டு அதன் மூலம் வீதிகள் திருத்தப்படடுள்ளதாகவும் பெரும்பாலும் 'என்றிப்' திட்டத்தில் இவ் வீதிகள் திருத்தப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# வருடாந்த பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம், நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பழையமாணவர்கள் அனைவரையும் இந்தக்கூட்டத்தில் தவறாது கலந்துகொள்ளுமாறு பழைய மாணவர்சங்கச்செயலாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (கா)

# நேரக்கணிப்பாளர் இன்மையால் சீரற்ற முறையில் போக்குவரத்து

(பூநகரி)

பூநகரி, சங்குப்பிட்டி கேரதீவு பாலம் திறக்கப்பட்டதைத் தொடர்ந்து பூநகரி வாடியடிப் பகுதியூடாக அரச, தனியார் பேருந்து சேவைகள் இடம் பெற்று வருகின்ற நிலையில், நேரக்கண்காணிப்பாளர் இல்லாமையால் ஒரு சீரற்ற முறையில் சேவைகள் இடம் பெறுவதாக பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

தற்போது பூநகரி கேந்திர முக்கியத்துவம் மிக்க நிலையமாக மாறியுள்ளது. இதனால் யாழ். பேருந்து நிலையத்திலிருந்து மன்னார், முழங்காவில், ஸ்கந்தபுரம், நல்லூர் ஆகிய இடங்களுக்கும் பூநகரியிலிருந்து கிளிநொச்சிக்கும், கிளிநொச்சியிலிருந்து ஜெயபுரத்திற்கும் தினமும் 15 இற்கு மேற்பட்ட பேருந்துகள் சேவையில் ஈடுபட்டு வருகின்றன.

மேற்படி குறித்த வாடியடிப் பகுதியூடாக இச்சேவைகள் இடம்பெறுவதால் பூநகரி வாடியடி நகர்ப் பகுதியில் நேரடிக்கண்காணிப்பாளர் இல்லாமையால் தனியார் போக்குவரத்து சேவையினரும் அரச போக்குவரத்து சேவையினரும் நேரமுக்கியத்துவம் இல்லாமல் ஏட்டிக்குப்போட்டியாகச் செல்கின்றனர்.

இதனால் பொதுமக்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாவதாகவும் சீரான சேவையைப் பெறமுடியாதுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே இப்பகுதியிலுள்ள நிலைமைகளை அவதானிக்க நேரக்கண்காணிப்பாளர் ஒருவரை நியமிக்கவேண்டும் என அப்பகுதிப் பொதுமக்களும் பொது அமைப்புக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர். (112)



கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாசாலையில் நடைபெற்ற பாடசாலை அபிவிருத்திச் சங்க கூட்டத்தின்போது முன்னாள் யாழ். மாநகர முதல்வர் அமரர் எஸ்.எஸ்.நவரத்தினம் நினைவாக மேற்படி பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில் வலிகாமம் கல்வி வலய ஆரம்பக்கல்விக்கான ஓய்வுபெற்ற உதவிக்கல்விப்பணிப்பாளர் சி.மாதவகுமாரன், பாடசாலை அதிபர் க. சசிதரன் ஆகியோர் மாணவர்களுக்கு உபகரணங்கள் வழங்குவதைக் காணலாம்.

## சின்னஞ் சிறு செய்திகள்

### பதவி உயர்வு

(யாழ்.நிருபர்)

ஊர்காவற்றுறை கோட்டக்கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி வந்த ச.பாஸ்கரன் தீவக கல்வி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்றுள்ளார்.

காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி அதிபராக இருந்த தி.சோமசேகரம் ஊர்காவற்றுறை கோட்டக் கல்விப் பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்றுள்ளார். (10)

### வலய மட்டத்தில் முதலாமிடம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் தமிழ்த்தினப் போட்டி 2011இல் வலயமட்டப்போட்டியில் விசேட கூத்து நிகழ்வில் கோண்டாவில் இந்துமகாவித்தியாலயம் முதலாவது இடத்தைப் பெற்றுள்ளது.

மேற்படி கல்லூரி மாணவர்கள் நடித்த 'முதுசம்' என்ற விசேட கூத்து மாவட்ட மட்டப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (10)

### 5 லட்சம் ரூபா செலவில் தேர்க்கொட்டகை

(அச்சுவேலி)

ஆவரங்கால் கிழக்கு மணற்பகுதி அருள்மிகு புவனேஸ்வரி அம்மன் ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்டு வரும் சித்திரத் தேருக்கான தரிப்பிடக் கொட்டகை அமைக்கும் பணிகள் இடம்பெற்றுவருகின்றது.

சுமார் 5 லட்சம் ரூபா செலவில் ஆலய முன்றலில் அமைக்கப்பட்டு வரும் இத் தேர்த்தரிப்பிடக் கொட்டகை அமைப்பதற்கான நிதியினை ஊர் மக்கள், ஆலய பக்தர்கள் எனப் பலரும் வழங்கியுள்ளனர். (03)

## தென்மராட்சிப் பிரதேச அபிவிருத்தி

# 12 கோரிக்கைகள் அடங்கிய மகஜர் அமைச்சர் டக்ளசிடம் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த கால யுத்த அனர்த்தத்தினாலும், இயற்கை அனர்த்தத்தினாலும் பாரிய அழிவுகளைச் சந்தித்த தென்மராட்சிப் பிரதேசம் மீண்டும் பல்வேறு துறைகளில் அபிவிருத்தி அடைய வேண்டியுள்ளது.

இது தொடர்பாக தென்மராட்சிப் பிரதேச சபையினர் பின்வரும் கோரிக்கைகளை முன்வைத்து அபிவிருத்திக்கான உதவிகளைச் செய்துதருமாறு பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் முன்வைத்துள்ள கோரிக்கைகள் வருமாறு-

சாவகச்சேரிப் பிரதேச சபையினை இரண்டாகப் பிரித்து தென்மராட்சி மேற்குப் பிரதேச சபையாக உரு வாக்குதல் (தனியாக).

தபாலக கட்டடம் கட்ட நிதி ஒதுக்கீடு செய்தல்.

வீதிகள் புனரமைப்புச் செய்தல், பிரதேச சபைக்குச் சொந்தமானது, வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமானது.

கைதடி ஆங்கில மருத்துவமனையைக் கிராமிய வைத்தியசாலையாகத் தரம் உயர்த்தி அதற்கான வசதிகளை ஏற்படுத்துதல்.

முன்பள்ளி ஆசிரியர்களுக்கு துவிச்சக்கரவண்டி வழங்குவதற்கான உதவிகளை மேற்கொள்ளல்.

விடுபட்டிருக்கும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான மாதாந்த சம்பளம் கிடைக்க உதவுதல்.

அரச காணியில் நீண்டகாலமாகக் குடியிருக்கும் மக்களுக்கு காணி உறுதி கிடைக்க நடவடிக்கை எடுத்தல்.

நடமாடும் நிர்வாக சேவையை அனைத்து திணைக்களங்களையும் இணைத்து நடத்துதல்.

மின்சாரமற்ற இடங்களுக்கு மின்சாரம் ஏற்படுத்திக் கொடுத்தல்.

வாழ்வாதார நடவடிக்கைகளை மேம்படுத்துதல்.

பொது விளையாட்டு மைதானப் புனரமைப்பு.

வேலையற்ற இளைஞர், யுவதிகளுக்கான வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தல்.

மேற்படி 12 கோரிக்கைகள் சம்பந்தமாக அமைச்சரை சபையின் சார்பில் எஸ்.சிவலிங்கம், ஆர். கந்தசாமி, எஸ்.சங்கரப்பிள்ளை, எஸ்.சிவஞானம், ஆர்.பிரதீபன், டயன் ஆகியோர் சந்தித்துக் கலந்துரையாடியதாகவும், இவ்விடயம் தொடர்பாகக் கேட்டறிந்த அமைச்சர் விரைவில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுப்பதாக உறுதியளித்துள்ளதாக பிரதேச அபிவிருத்திச் சபை தெரிவித்துள்ளது.

## சின்னஞ் சிறு செய்திகள்

### அதிபர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ். நிருபர்)

காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி அதிபர் பதவிக்கு தகுதியானோரிடமிருந்து விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இலங்கை அதிபர் சேவை தரம் 1, மற்றும் தரம் 11 ஐச் சேர்ந்தவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்கமுடியும். அதிபர்தரம் உள்ளவர்களின் விண்ணப்பங்கள் கிடைக்காதவிடத்து இலஙகை ஆசிரியர்சேவை தரம் 1 மற்றும் தரம் 2, 1 இல் உள்ள தீவக வலயப் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள் விண்ணப்பிக்குமிடத்து அவர்களது வண்ணப்பங்கள் கவனத்தில் கொள்ளப்படுமென தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் வி. இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார். (10)

### புதிய நிர்வாகசபை தெரிவு

(கரணவாய்)

உடுப்பிட்டி நாவலடி நாவலர் சனசமூக நிலையத்தின் 2011 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாக சபைத் தெரிவு அண்மையில் நடைபெற்றது.

இதில் தலைவராக இ.ராசா, செயலாளராக கோ.குணசிங்கம், பொருளாளராக ச.யோகராசா, நூலகராக பு.பிருந்தன் ஆகியோருடன் 7 பேர் கொண்ட நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (18)

## பூநகரியில் தொழிற்பயிற்சி

(பூநகரி)

பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வசிப்பவர்களிடமிருந்து மேசன், தச்சுவேலைக்கான ஆறு மாதப் பயிற்சிக்கு விணணப்பம் கோரப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத்திட்ட அலுவலர்களால் வழங்கப்படவுள்ள இப் பயிற்சி வாரத்தில் ஐந்து நாட்கள் நடைபெறவுள்ளது. இப் பயிற்சி யில் பங்குபற்றுவோருக்கு தினமும் 400 ரூபா கொடுப்பனவாக வழங்கப்படவுள்ளது.

அத்துடன், பயிற்சியைப் பூர்த்தி செய்யும் பயனாளிகளுக்கு சான்றிதழும், தொழிலில் ஈடுபடக கூடிய வகையில் ஒரு தொகுதி உபகரணங்களும் வழங்கப்படவுள்ளன.

இதற்கு விண்ணப்பிப்போர் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு சம்பந்தப்பட்ட அலுவலகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (112)

## மாணவர்களுக்கான வைத்திய பரிசோதனை

(அச்சுவேலி)

புத்தூர் பிரதேச பொதுசுகாதார பரிசோதகரின் தலைமையின் கீழ் அப்பிரதேச பாடசாலைகளில் பயின்றுவரும் மாணவர்களுக்கு வைத்திய பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

பாடசாலைகள் தோறும் மேற்கொள்ளப்பட்டு வரும் இவ் வைத்திய பரிசோதனைகளின் போது மாணவர்களின் உடல் நிறை, பார்வைத்திறன், உடற்தகமை போன்ற விடயங்கள் சுகாதாரப் பரிசோதகரினால் பார்வையிடப்படுவதுடன் அம்மாணவர்களுக்கு பூச்சிக்கான மாத்திரைகள் மற்றும் விற்றமீன் மாத்திரைகளும் வழங்கப்பட்டு வருகின்றது.

மேலும் மாணவர்களுக்கு ஏதும் பிரச்சினைகள் இனங் காணப்படும் சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு மேலதிக சிகிச்சைகளுக்கான சிபார்சுகளும் வழங்கப்பட்டு வருகின்றது.(03)

## காசுக்கான வேலைத்திட்டம் உதயபுரத்தில் நேற்று ஆரம்பம்



(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலர் பிரிவிலுள்ள ஜே-89 கிராம சேவகர் பிரிவின் உதயபுரம் கிராமத்திற்கான காசுக்கான வேலைத்திட்டம் நேற்று ஆரம்பித்து வைக்கபபட்டது.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் இவ் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு இத்திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

நேற்றுக்காலை 10.00 மணியளவில் நடைபெற்ற இவ் ஆரம்ப நிகழ்வில் நல்லூர்ப் பிரதேச அமைப்பாளர் இ.ரவீந்திரதாசன், தென்மராட்சிப் பிரதேச அமைப்பாளர் சூ.அலெக்சாண்டர், நல்லூர் பிரதேச திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.சுரேந்திரநாதன், தென்னை பயிர்ச்செயகை உத்தியோகத்தர் ஜெகநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பொருளாதார அமைச்சின் கீழ், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் ஏற்பாட்டில் காசுக்கான வேலைத்திட்டம் 1.6 மில்லியன் ரூபா செலவில் இக் கிராமத்தில் மேற்கொள்ளப்படவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(14.05.2011 – சனிக்கிழமை)

பஞ்சாங்கக் குறிப்புக்கள்
கர வருஷம்
வைகாசி 31 ஆம் நாள்.
நட்சத்திரம் அத்தம் மு.இ. 11.39வரை
திதி: துவாதசி பி.இ 12.03 வரை
ராகுகாலம் 8.53 –10.23
சுபநேரம் : 2.53 –4.23

இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது

மேடம்:– தேக சுகம், பண வரவு, வீண் பயம், கவலை.

ரிஷபம்:– காரிய சித்தி, பெரியோர் மதிப்பு, பண வரவு.

மிதுனம் :– மன அமைதி, பணச் செலவு, விபத்து, வீண் பயம்.

கடகம்:– பொருள் வரவு, பதவி உயர்வு, மூத்தோர் ஆசி.

சிம்மம்:– மன மகிழ்ச்சி, காரிய சித்தி, வீண் அலைச்சல்.

கன்னி :– பொருள் இழப்பு, பண வரவு, நண்பர் தொல்லை.

துலாம் :– காரியத்தடை, பணச் செலவு, அரச பயம்.

விருச்சிகம்:– காரிய சித்தி, நினைத்தது கைகூடுதல், கவலை.

தனுசு:– இரக்கம், அமைதி, காரியத் தடை, கவலை.

மகரம்:– சோர்வு, பணச் செலவு, அரச பயம், விபத்து.

கும்பம் :– மன அமைதி, பண வரவு, தேகாரோக்கியம்.

மீனம்:– மனச் சஞ்சலம், காரிய இழப்பு, நித்திரையில் விருப்பு.

## மீண்டும் நேரம் காட்டும் மணிக்கூட்டுக் கோபுரம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகர மணிக்கூட்டுக் கோபுர கடிகாரம் மீண்டும் செயற்பட ஆரம்பித்துள்ளது. அண்மையில் இம் மணிக்கூட்டுக் கோபுர கடிகாரம் பழுதடைந்து செயற்படாமல் நின்றிருந்தது.

தற்சமயம் அவை சரி செய்யப்பட்டு மீண்டும் செயற்பட ஆரம்பித்துள்ளது.

ஏற்கனவே சில தடவை இக்கடிகாரம் பழுதடைந்து சீர் செய்யப்பட்டு செயற்பட வைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

## பட்டதாரிகள் ஆட்சேர்ப்புக்கான மதிப்பீட்டுப்பணிகள் நிறைவு

(அச்சுவேலி)

வடக்கு மாகாண சபையின் வெற்றிடமாகவுள்ள பல்வேறு பதவிகளுக்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்வதற்காக வடமாகாண சபையினால் நடாத்தப்பட்ட போட்டிப்பரீட்சை வினாத்தாள்களின் மதிப்பீட்டுப் பணிகள் நிறைவடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

புத்தூர் சோமஸ்கந்த கல்லூரியில் இடம் பெற்ற இவ் வினாத்தாள் மதிப்பீட்டுப்பணிகள் நிறைவடைந்துள்ள நிலையில் புள்ளிப்பதிவுத்தரவுகள் கணனி மயப்படுத்தப்பட்டு ஒழுங்கமைப்பட்ட பின்னர் உயர் புள்ளிகளைப் பெற்ற ஒரு தொகுதியினர் நேர்முகத்தேர்விற்கு அழைக்கப்படவுள்ளதாகவும் சில தகவல்கள் தெரிவிக்கின்றன. (03)

## கிரிக்கெட்டை இணைக்க முயற்சி




(கோலாலம்பூர்)

கொமன்வெல்த் போட்டியில் இருபது ஓவர் கிரிக்கெட் போட்டியை சேர்ப்பது தொடர்பாக சர்வதேச கிரிக்கெட் சபையிடம் கொமன்வெல்த் சம்மேளனம் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளது.

இதுகுறித்து கொமன்வெல்த் விளையாட்டு சம்மேளனத்தின் சீராய்வுக் குழுத் தலைவர் டங்கு இம்ரான் கூறியது: கொமன்வெல்த் போட்டியில் இருபது ஓவர் கிரிக்கெட் போட்டியைச் சேர்க்க விரும்புகிறோம். அதனால் எங்களின் கோரிக்கையை ஏற்குமாறு ஐ.சி.சி.யிடம் உயர்மட்டக் குழு பேச்சுவார்த்தை நடத்தும். அதனை ஐ.சி.சி. ஏற்கும் பட்சத்தில் 2018ஆம் ஆண்டு நடைபெறவுள்ள கொமன்வெல்த் போட்டியில் இருபது ஓவர் கிரிக்கெட் போட்டி சேர்க்கப்படும். ஆனால் அது அவ்வளவு எளிதானதல்ல.

2018ஆம் ஆண்டு கொமன்வெல்த் போட்டியை நடத்துவதற்கு விருப்பம் தெரிவித்துள்ள அவுஸ்ரேலியா, இலங்கை ஆகிய இரு நாடுகளிலுமே கிரிக்கெட் போட்டி பிரபலமானது. பீச் வாலிபால் போட்டியை சேர்க்கவும் இலங்கை விருப்பம் தெரிவித்துள்ளது. செயின்ட் கீட்ஸில் வரும் நவம்பரில் நடைபெறவுள்ள கொமன்வெல்த் சம்மேளனத்தின் கூட்டத்தின்போது போட்டியை யார் நடத்துவது, பீச் வாலிபால் போட்டியை சேர்ப்பது குறித்து வாக்கெடுப்பு நடைபெறும் என்றார்.

முன்னதாக 1988ஆம் ஆண்டு மலேசியாவில் நடைபெற்ற கொமன்வெல்த் போட்டியில் கிரிக்கெட் போட்டி சேர்க்கப்பட்டது.

ஆனால் அதன்பின்னர் ஐ.சி.சி.க்கும், கொமன்வெல்த் சம்மேளனத்துக்கும் இடையிலான கருத்துவேறுபாடு காரணமாக கிரிக்கெட் போட்டி இடம் பெறவில்லை.

கடந்த ஆண்டு டில்லியில் நடைபெற்ற கொமன்வெல்த் போட்டியில் இருபது ஓவர் கிரிக்கெட் போட்டியை சேர்ப்பது தொடர்பாக கொமன்வெல்த் சம்மேளனம் இந்திய கிரிக்கெட் சபையை அணுகியது. ஆனால் அந்தக் கோரிக்கையை அது நிராகரித்துவிட்டமை குறிப்பிடத்தக்கது.

## தலைமையை விரும்பும் வட்சன்

(ராஜஸ்தான்)

2012ஆம் ஆண்டு ஐ.பி.எல் தொடரில் ராஜஸ்தான் அணிக்குத் தலைமை வகிக்க அவுஸ்ரேலிய வீரர் ஷேன் வட்சன் விருப்பம் தெரிவித்துள்ளார்.

ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியின் இப்போதைய தலைவர் ஷேன் வோர்ன் இந்த ஐ.பி.எல் தொடரோடு ஓய்வுபெறுகிறார்.

இந்த நிலையில் இதுகுறித்து வட்சன் மேலும் கூறியது: ஷேன் வோர்ன் ஓய்வுபெறுவதால் ராஜஸ்தான் அணிக்குத் தலைமையேற்க விரும்புகிறேன். ஆனாலும் வேறு சிலருக்கும் தலைவராகும் வாய்ப்பு இருக்கலாம். அதனால் ஒருவேளை எனக்குத் தலைவர் பதவி கிடைக்காமல் போகலாம்.

இந்த ஐ.பி.எல் தொடரில் அடுத்த சுற்றுக்கு முன்னேறுவதற்கான வாய்ப்பு மிகவும் குறைவு. இருப்பினும் அடுத்த இரு ஆட்டங்களிலும் சிறப்பாக விளையாடி வெற்றியுடன் தலைவர் வோர்னை வழியனுப்புவோம் என்றார்.

தனது கிரிக்கட் ஆட்டத்தைப் பற்றிக் கூறிய அவர், இருபது ஓவர் ஆட்டத்தைப் பொறுத்தவரையில் நிலையாக ஒரே மாதிரி தொடர்ந்து விளையாட முடியாது. எல்லா ஆட்டங்களுக்கும் ஒரே மாதிரியாகவே தயாராகிறேன்.

ஐ.பி.எல் தொடரில் விளையாடுவது மகிழ்ச்சியளிக்கிறது. ஆனாலும் நான் எதிர்பார்த்தது போல் விளையாட முடியவில்லை என்றார்.



2008ஆம் ஆண்டு நடைபெற்ற முதல் ஐ.பி.எல் தொடரில் தொடர்நாயகன் விருதை வென்ற வட்சன், இந்த ஐ.பி.எல் தொடரில் இதுவரை 221 ஓட்டங்களையே பெற்றார்.



## பாகிஸ்தானின் சுழலில் சுருண்டது மே.தீவுகள்

(காயானா)

பாகிஸ்தான் அணியின் சுழற்பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாத மேற்கிந்தியத்தீவுகள் அணி, அதன் முதல் இனிங்சில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 226 ஓட்டங்களைப் பெற்றது.

மேற்கிந்தியத்தீவுகள், பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட முதலாவது டெஸ்ட் போட்டி கடந்த 12ஆம் திகதி காயானா மைதானத்தில் ஆரம்பமானது.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத்தீவுகள் அணி, முதலில் துடுப்பாடத் தீர்மானித்தது. இதற்கமைய முதல் இனிங்சிற்காக களமிறங்கிய மேற்கிந்தியத்தீவுகள் அணி அதன் முதல் இனிங்சில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 226 ஓட்டங்களைப் பெற்றது. இதில் எல்.எம்.பி. சிமென்ஸ் 49, சந்தர்பேர்ல் 27, டி.எம். பிராவோ 25, றோச் 24, சர்வான் 23 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மிகச் சிறப் செயற்பட்ட சயிட் அஜ்மல், 33 ஓவர்கள் பந்து வீசி, 69 ஓட்டங்களைக் கொடுத்து ஐந்து விக்கெட்டுக்களைக கைப்பற்றினார். மற்றும் மொகமட் ஹபீஸ், அப்துர் ரஹ்மான் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு முதல் இனிங்சிற்காகக் களமிறங்கிய பாகிஸ்தான் அணி, நேற்றைய ஆட்டம் மதிய போசன இடைவேளைக்காக நிறுத்தப்பட்டவேளை, ஒரு விக்கெட்டை இழந்து 45 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இன்று போட்டியின் மூன்றாம் நாளாகும்.

முதல் இனிங்சில் ஐந்து விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய சயிட் அஜ்மல் குறிப்பிடுகையில், சுழற்பந்து வீச்சுக்குச் சாதாகமாக ஆடுகளம் அமைந்திருந்தது. இதன் மூலம் சிறப்பாகப் பந்து வீசக்கூடிய வகையில் இருந்தது. எனது கிரிக்கெட் வாழ்க்கையில் இதுவும் மிகச்சிறந்த இனிங்ஸாகக் கருதுகின்றேன். நாங்கள் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றுக் கொள்ளும் பட்சத்தில் இப்போட்டியில் வெற்றி பெறுவதற்கான அதிக வாய்ப்பு எங்களுக்கு ஏற்படும்.

இரண்டாவது இனிங்ஸும் சிறப்பாகப் பந்து வீசி அணியின் வெற்றிக்காகப் போராடுவேன். ஒருங்கிணைந்து செயற்பட்டால் வெற்றிக்கான அதிக வாய்ப்பைப் பெற்றுக்கொள்ள முடியும். இப்போட்டியை வெல்லும் பட்சத்தில் தொடரைக் கைப்பற்றக் கூடிய சூழ்நிலையும் அமையும். ஒரு நாள் தொடரை வென்றது போன்று டெஸ்ட் தொடரையும் வெற்றி கொள்வோம் எனத் தெரிவித்தார்.

## இரண்டு நாள் பயிற்சி முகாம் இன்று வித்தியானந்தவில்

(முல்லைத்தீவு)

'கிரீடாசக்தி' அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள 13 விளையாட்டுக்கழங்களிலிருந்தும் தலா 100 பேர் என்ற அடிப்படையில் 1,300 வீர, வீராங்கனைகள் தெரிவு செய்யப்பட்டு, அவர்களுக்கான இரண்டு நாள் பயிற்சி முகாம் இன்று ஆரம்பமாகவுள்ளது.

இப்பயிற்சி முகாம் முல்லைத்தீவு வித்தியானந்த கல்லூரியில் இன்றும் நாளையும் நடைபெற ஏற்பாடாகியுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

விளையாட்டுத்துறை அமைச்சின் ஏற்பாட்டில் நடைபெறும் இப்பயிற்சி முகாமிற்கு வடமாகாண விளையாட்டுத்துறை திணைக்களம் முழுமையான ஒத்துழைப்பு வழங்கவுள்ளதாக விளையாட்டு அலுவலர் எஸ்.தனுராஜ் தெரிவித்தார்.

பயிற்சிக் காலத்தில் திறமையாக செயற்படும் வீரர்களில் ஒவ்வொரு விளையாட்டுத் துறையிலும் 25 பேர், இரு பாலரிலும் தெரிவு செய்யப்படுவார்கள். இவர்களுக்கு முறையே இரண்டாம் நாள் விசேட பயிற்சிகள் வழங்கப்பட்டு அதிலிருந்தும் ஒவ்வொரு விளையாட்டுத் துறையிலும் 15 பேராக மொத்தம் 400 பேர் தெரிவு செய்யப்பட்டு முல்லைத்தீவு மாவட்ட விளையாட்டு அணி உருவாக்கப்படும். இவர்களுக்கு விளையாட்டுத்துறை அமைச்சினால் மாதாந்தம் ஆயிரம் ரூபா உதவித் தொகையாக வழங்கப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

அத்துடன் எதிர்வரும் காலங்களில் இவர்கள் தங்களை வளர்த்துக் கொள்வதுடன், மாவட்டத்திலுள்ள ஏனையோருக்கும் முன்மாதிரியாக நடந்து கொண்டு விளையாட்டை மேலும் வளர்த்தெடுக்க முன்வரவேண்டும் எனவும், இதுபோன்ற பயிற்சி முகாம்கள் தொடர்ந்து நடாத்தப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் சம்பியன்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டக் கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையே இடம்பெற்ற 15 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் வடமராட்சி உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி மாவட்ட சம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

மல்லாகம் மகாவித்தியாலய மைதானத்தில் கடந்த புதன்கிழமை பிற்பகல் இடம்பெற்ற இப்போட்டியில் வலிகாமம் வயாவிளான் மத்திய மகா வித்தியாலயமும் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியும் மோதிக் கொண்டன.

மூன்று சுற்றுக்கள் கொண்ட இந்தப் போட்டியில் முதல் இரண்டு சுற்றுக்களில் 25:22, 25:13 என்ற புள்ளிகளின் அடிப்படையில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி வெற்றி பெற்று யாழ். மாவட்டச் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

மூன்றாம் இடத்திற்கான போட்டியில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியும் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியும் மோதின.

மூன்று சுற்றுக்களைக் கொண்ட இந்தப் போட்டியில் முதல் மற்றும் மூன்றாம் சுற்றுக்களை விக்ரோறியாக் கல்லூரி 25:21, 25:20 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற, இரண்டாம் சுற்றை சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி 25:15 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது

ஆட்ட நிறைவில் விக்ரோறியாக் கல்லூரி 2:1 என்ற சுற்றுகள் அடிப்படையில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியை வெற்றி பெற்று மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

## பயிற்சியாளர் நியமனம்

(சிட்னி)

அவுஸ்ரேலிய கிரிக்கட் அணியின் பந்துவீச்சுப் பயிற்சியாளராக முன்னாள் வேகப் பந்து வீச்சாளரான கிரேக் மெக்டார்மெட் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கான அறிவிப்பை அவுஸ்ரேலிய கிரிக்கட் சபை வெளியிட்டுள்ளது. இதே போல் ஏற்கெனவே உதவிப் பயிற்சியாளராக உள்ள ஜஸ்டின் லாங்கரின் பதவிக்காலம் மேலும் ஒரு ஆண்டுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

மெக்டார்மெட் 1984 முதல் 1996 வரை அவுஸ்ரேலிய அணியின் சிறந்த வேகப்பந்து வீச்சாளராகத் திகழ்ந்தவர். 71 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 291 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். 138 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 203 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார்.

முன்னதாக அவுஸ்ரேலிய அணியின் பந்துவீச்சு பயிற்சியாளர் பதவிக்கு தென்னாப்பிரிக்காவின் முன்னாள் வேகப் பந்து வீச்சாளரான டொனால்டுக்கே அதிக வாய்ப்புள்ளதாகக் கூறப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## பெருவிளையாட்டு

(பூநகரி)

பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள விளையாட்டுக்கழகங்களுக்கிடையே நடைபெற்றுவரும் பெருவிளையாட்டு நிகழ்வின் இறுதி நிகழ்வு, நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பூநகரி மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பூநகரி பிரதேச செயலர் கே.எஸ். வசந்தகுமார் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபாவதி கேதீஸ்வரன் கலந்துகொள்ளவுள்ளார். (112)




## கம்பீர் தலைமையிலான இந்திய அணி அறிவிப்பு



(புதுடில்லி)

மேற்கிந்தியத்தீவுகள் அணியுடனான ஐந்து ஒரு நாள் மற்றும் ஒரு ருவென்ரி 20 போட்டியில் விளையாடுவதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

அணித் தலைவர் டோனி, சச்சின் மற்றும் சகீர்கான் ஆகியோருக்கு எதிர்வரும் யூலை மாதம் இங்கிலாந்துடனான தொடரை முன்னிட்டு ஓய்வு அளிக்கப்பட்டுள்ளதுடன், ஒரு நாள் மற்றும் ருவென்ரி20 போட்டித் தொடருக்கான அணித் தலைவர் பொறுப்பு கம்பீருக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் துணைத் தலைவராக சுரேஷ் ரெய்னா நியமிக்கப்பட்டுள்ளார். டோனி ஓய்வில் இருப்பதனால் விக்கெட் கீப்பராக பார்த்தீவ் பட்டேல் அணியில் இணைக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் காயம் காரணமாக சேவாக், அஷிஸ் நெஹ்ரா ஆகியோர் இந்தத் தொடரில் பங்கேற்பதற்காக டோனி, சச்சின் மற்றும் சகீர்கான் ஆகியோர் மேற்கிந்தியத் தீவுகளுக்கு பின்னர் செல்லவுள்ளனர்.

சுப்பிரமணியம் பத்ரிநாத், வினய்குமார், மேலதிக விக்கெட் காப்பாளராக சாகாவும் புதிதாக அணிக்குத் தெரிவாகியுள்ள அதேவேளை, உலகக் கிண்ணத் தொடரிலிருந்த பியூஸ் சால்வா, சிறிசாந்த் ஆகியோர்அணியில் இடம்பெறவில்லை.

அணி விபரம் வருமாறு: கம்பீர் (அணித் தலைவர்), சுரேஷ் ரெய்னா (துணைத் தலைவர்), பார்த்தீப்பட்டேல், விராட் ஹோலி, யுவராஜ்சிங், பத்திரிநாத், ரோகித் சர்மா, ஹர்பஜன்சிங், அஸ்வின், பிரவீன் குமார், இஷாந்த் சர்மா, முனாப் பட்டேல், வினய்குமார், யூசுப் பதான், அமிர் மிஸ்ரா, சாகா. இளம் வீரர்களைக் கொண்ட சிறந்த அணி தெரிவாகியுள்ளதுடன், அவர்களுக்கான சிறந்த வாய்ப்பாகவும் இது அமையும் என கிரிக்கெட் சபைத் தலைவர் தெரிவித்தார்.

## வருகிறது பகல்-இரவு டெஸ்ட்

(லண்டன்)

அடுத்த ஆண்டு இறுதிக்குள் மின்னொளியில் பகல்-இரவு டெஸ்ட் போட்டிகளை நடத்த சர்வதேச கிரிக்கெட் சபை முடிவு செய்துள்ளது.

சர்வதேச கிரிக்கெட் சபைக் கூட்டம் லண்டனில் உள்ள லோர்ட்சில் கடந்த இரண்டு நாள் நடைபெற்றது.

International Cricket Council

இக்கூட்டத்தில் அடுத்த ஆண்டு இறுதிக்குள் மின்னொளியில் பகல்-இரவு டெஸ்ட் போட்டியை நடத்த சிபாரிசு செய்ய முடிவு செய்யப்பட்டது. இதற்காக மேலும் 12 மாதங்களுக்கு முதல்' தர போட்டிகளை மின்னொளியில் நடத்தி வெள்ளோட்டம் பார்ப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது. இந்தப் போட்டிகளுக்கு பிங்க் கலர் பந்துகளை பயன்படுத்த சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. அனைத்து டெஸ்ட் போட்டிகளிலும் நடுவர் முடிவை மறுபரிசீலனை செய்யும் முறையை (யு.டி.ஆர்.எஸ்) கட்டாயம் அமுலாக்க வேண்டும்.

அடுத்த உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிக்கு டெஸ்ட் போட்டியில் விளையாடும் 10 நாடுகளை மட்டும் அனுமதிப்பது என்று ஐ.சி.சி. ஏற்கனவே முடிவு செய்து இருந்தது. இதற்கு டெஸ்ட் போட்டியில் ஆடாத நாடுகளின் கிரிக்கெட் சபைகள் அதிருப்தி தெரிவித்து இருந்தன.

இந்த நிலையில் குட்டி அணிகளுக்கு வாய்ப்பு அளிக்கும் விதமாக 2015ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டிக்குக் குட்டி அணிகள் தகுதி பெற வழிவகை செய்ய கிரிக்கெட் சபை பரிந்துரை செய்துள்ளது. கிரிக்கெட் சபையின் புதிய சிபாரிசு குட்டி அணிகளுக்கு மகிழ்ச்சியை அளித்துள்ளது.

கிரிக்கெட் சபையின் இந்த சிபாரிசுகள் குறித்து ஹொங்கொங்கில் ஜூன் 26ஆம் திகதி முதல் 30ஆம் திகதி வரை நடைபெறும் சர்வதேச கிரிக்கெட் சபையின் தலைமைச் செயற்குழு மற்றும் சபையில் விவாதிக்கப்பட்டு இறுதி முடிவுகள் எடுக்கப்படும்.

இது குறித்து சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் பொதுமேலாளர் டேவ் ரிச்சர்ட்சன் கூறுகையில், கிரிக்கெட் கமிட்டியின் அறிக்கை கிடைத்ததும் அதனை அமுல்படுத்துவது குறித்து ஆலோசிக்கப்படும்.

அடுத்த ஆண்டில் மின்னொளி வசதி கொண்ட சில மைதானங்களைத் தேர்வு செய்து அதில் பகல்-இரவு டெஸ்ட் போட்டியைப் பரீட்சார்த் தமாக நடத்த முடியும் என்று நாங்கள் நினைக்கிறோம் என்று தெரிவித்துள்ளார்.

## ஐ.சி.சி.யின் முடிவிற்கு இந்தியா எதிர்ப்பு

(புதுடில்லி)

அனைத்து டெஸ்ட் போட்டிகளிலும், டி.ஆர்.எஸ்., முறையை அறிமுகம் செய்யும், ஐ.சி.சி.,யின் முடிவுக்கு, இந்திய கிரிக்கெட் சபை, எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

கடந்த 2009 முதல் டெஸ்ட் போட்டிகளில் நடுவரின் தீர்ப்பை மறுபரிசீலனை (டி.ஆர்.எஸ்.) செய்யும் முறை, அந்தந்த நாடுகளின் விருப்பத்துக்கு ஏற்ப நடைமுறையில் உள்ளது. இதுவரை 31 போட்டிகளில் பயன் படுத்தப்பட்டது. இதில், ஒவ்வொரு இன்னிங்சிலும் தலா 2 முறை மேல்முறையீடு செய்யலாம்.

இதனிடையே, டி.ஆர்.எஸ்., முறையை, எதிர்வரும் காலங்க்ளில் அனைத்து டெஸ்ட் போட்டிகளிலும் பயன்படுத்த, சர்வதேச கிரிக்கெட் சபை முடிவு செய்துள்ளது. தவிர, ஒருநாள் மற்றும் டுவென்டி-20 போட்டிகளிலும், டி.ஆர்.எஸ்., முறையை, ஐ.சி.சி., அறிமுகம் செய்யவுள்ளது. ஆனால், இதில் தலா ஒரு முறை மட்டுமே முறையீடு செய்யலாம்.

ஐ.சி.சி.,யின் இம்முடிவுக்கு இந்திய கிரிக்கெட் சபை வழக்கம் போல எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. இதுகுறித்து இந்திய கிரிக்கெட் சபையின் மூத்த நிர்வாகி ஒருவர் கூறுகையில், நாங்கள் எப்போதுமே டி.ஆர்.எஸ்., முறைக்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகிறோம். ஐ.சி.சி.,யின் தலைமை அதிகாரிகள் கூட்டத்தில் எங்கள் எதிர்ப்பை மீண்டும் தெரிவிப்போம் என்றார்.

## ஜூலையில் தொடங்கும் எஸ்.எல்.பி.எல்.

(கொழும்பு)

ஐ.பி.எல்., தொடரைப் போல, இலங்கை பிரிமியர் லீக் சார்பில் நடத்தப்படும், டுவென்டி-20 போட்டித் தொடர் வரும் ஜூலை 19இல் ஆரம்பமாகவுள்ளது..

இலங்கை பிரிமியர் லீக் டுவென்டி-20 தொடரில் மொத்தம் ஏழு அணிகள் பங்கேற்கும். ஒவ்வொரு அணியிலும் குறைந்தது 5 வெளிநாட்டு வீரர்களை ஏலத்தில் எடுக்கலாம். ஆனால், விளையாடும் 11 பேர் அணியில், 4 பேர் மட்டுமே அனுமதிக்கப்படுவர். ஏழு அணிகளும் மற்ற அணிகளுடன் தலா ஒரு சுற்று விளையாடும்.

வரும் ஜூலை 19 முதல் ஆகஸ்ட் 4ஆம் திகதி வரை, 18 நாட்கள் நடக்கும் இத்தொடரில், இரண்டு அரையிறுதி, ஒரு இறுதிப் போட்டி உட்பட மொத்தம் 24 போட்டிகள் நடக்கும். இத்தொடரில் பங்கேற்க மேற்கிந்தியத்தீவு அணி வீரர் கிறிஸ் கெய்ல், போலார்ட், பாகிஸ்தானின் அப்ரிடி, தென்னாபிரிக்காவின் கிப்ஸ் உள்ளிட்ட வீரர்கள் ஏற்கனவே ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வெலிங்டன் அணியில் முரளி

(வெலிங்டன்)

அடுத்த HRV Cup ருவென்ரி20 போட்டிக்கான தொடரில் விளையாடுவதற்கு முத்தையா முரளிதரனை ஒப்பந்தம் செய்துள்ளதாக நியூசிலாந்தின் வெலிங்டன் கிரிக்கெட் அறிவித்துள்ளது. எமது அணியில் சர்வதேசத்தில் பிரபலம் வாய்ந்த வீரர்கள் எப்பொழுதும் இருப்பார்களென வெலிங்டன் அணியின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கவின் லோசன் தெரிவித்தார். முரளி ஒரு சிறந்த கிரிக்கெட் வீரர் மட்டுமல்ல இந்தத் துறையில் சிறந்து விளங்குபவரும்கூட என அவர் தெரிவித்தார். இதேவேளை, இந்த ஒப்பந்தம் குறித்து முரளி கூறுகையில், நியூசிலாந்து உல்லாசப் பயணத்தை மேற்கொள்ளவும், கிரிக்கெட் விளையாடவும் சிறந்த நாடு. நியூசிலாந்து சுற்றுப் பயணத்தின்போது நான் எப்பொழும் எனது நேரத்தை மகிழ்வாகவே செலவிடுவேன். முரளி தெரிவித்தார்.



இத்தாலியின் ஓப்பன் டென்னிஸ் தொடரின் மூன்றாவது சுற்றில் அவுஸ்ரேலியாவின் ஜர்மிளாவை வீழ்த்திய சீனாவின் லீ னா...

## சதுரங்கப் போட்டி விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கைப் பாடசாலைகளின் சதுரங்கச் சங்கம், யாழ்.மாவட்டப் பாடசாலைச் சதுரங்க அணியினருக்கிடையே சதுரங்கப் போட்டியினை நடத்தவுள்ளதாகச் சங்கச் செயலாளர் ஆ.பு விமலவீரா அறிவித்துள்ளார்.

இப்போட்டி இந்த மாதம் 27ஆம், 28ஆம், 29ஆம் திகதிகளில் யாழ்.இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் பாடசாலை அணியினர் இம்மாதம் 16ஆம்,19ஆம்,20ஆம் திகதிகளில் தங்கள் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்து பதிவுகளை யாழ் இந்துக் கல்லூரியில், பாடசாலை நேரத்தில் மேற்கொள்ளலாம். இச்சங்கத்தினால், சாவகச்சேரி இந்துக் கல்லூரி பருத்தித்துறை காட்லிக்கல்லூரி, பருத்துறை மெதடிஸ் பெண்கள் கல்லூரி, வடமராட்சி பெண்கள் பாடசாலை தெல்லிப்பளை மகாஜனக்கல்லூரி,அளவெட்டி அருணோதயாக் கல்லூரி,யாழ் இந்து மகளிர் கல்லூரி வேம்படி மகளிர் உயர்தரப் பாட சாலை, யாழ்சென் ஜோன்ஸ் கல்லூரி,யாழ் மத்திய கல்லூரி ஆகிய பாடசாலைகளுக்கு ஏற்கனவே அழைப்புக் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இப்பாடசாலை அணியினர் மேற்குறிப்பிட்ட தினத்தில். யாழ் இந்துக்கல்லூரிக்கு வருகை தந்து யாழ்மாவட்ட இணைப்பாளர் எஸ்.தயானந்தனுடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ள முடியும். மேலதிக தகவல் தேவைப்படுவோர் இணைப்பாளரது 077 6176465 இலக்கத் தொலைபேசியுடன் தொடர்பு கொள்ளவும். குறிப்பிட்ட தினத்தில் இலங்கை பாடசாலைகளின் சதுரங்கச் சங்கத் தலைவர், செயலாளரினால் இப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

## வோர்ன் மீது புதிய புகார்

ராஜஸ்தான் ரோயல்ஸ் தலைவர் ஷேன் வோர்ன் ராஜ்தான் ரோயல்ஸ் கிரிக்கெட் சபையின் செயலர் சஞ்சய் டக்ஸூட்டை தகாத வார்த்தைகளால் திட்டியதாக அதன் கிரிக்கெட் சபை இந்திய கிரிக்கெட் சபை நிர்வாகிகளிடம் புகார் தெரிவித்தது. இதில் பெங்களூர் அணியுடனான போட்டியில் ஒன்பது விக்கெட் வித்தியாசத்தில் தோல்விடைந்தது. இதனால் கோபமடைந்த வோர்ன் மைதானத்தை தான் கூறியபடி செம்மைப்படுத்ததால் தோல்வி அடைந்துவிட்டோம் என்று சஞ்சயே திட்டியதாக தெரிவிக்கப்படுகிறது.

# நிபுணர்குழு அறிக்கை குறித்து கலந்துரையாட வெளிவிவகார அமைச்சர் இந்தியா பயணம்

**ஐ.நாவின் போர்க்குற்ற அறிக்கை மற்றும் அதனால் ஏற்படக் கூடிய அனைத்துலக பாதிப்புகளை சமாளிப்பது தொடர்பாக இந்தியாவுடன் கலந்துரையாட வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் மூன்று நாள் பயணமாக புதுடில்லி செல்லவுள்ளார்.**

**அவருடன் ஜனாதிபதியின் வெளிவிவகார ஆலோசகர் சஜின்வாஸ் குணவர்த்தனவும் புதுடில்லிக்குப் பயணமாகவுள்ளார்.**

புதுடெல்லி செல்லும் இவர்கள் மூன்று நாட்கள் அங்கு தங்கியிருந்து இந்திய அரசியல் தலைவர்கள் மற்றும் கொள்கை வகுப்பு அதிகாரிகளுடன் கலந்துரையாடவுள்ளனர்.

இவர்கள் இந்தியத் தலைவர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு ஐ.நா பொதுச்செயலரின் போர்க்குற்ற அறிக்கை குறித்த இலங்கையின் கவலையையும் தெரிவிக்கவுள்ளனர்.

மூன்று நாட்கள் அங்கு தங்கியிருக்கவுள்ள பீரிஸ், பல்வேறு அரசியல்கட்சிகளினதும் தலைவர்களையும் சந்தித்துப் பேசி அவர்களின் ஆதரவைத் தேடவும் பணிக்கப்பட்டுள்ளார். குறிப்பாக பா.ஜ.க.வை திருப்திப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

போர்க்குற்ற அறிக்கை விவகாரத்தில் இலங்கையைக் காப்பாற்ற இந்தியா முனையக் கூடாது என்று பா.ஜ.க உள்ளிட்ட கட்சிகள் வலுயுறுத்தியுள்ளதால் பீரிஸ் கடும் அழுத்தங்களை எதிர்கொண்டுள்ளார்.

ஐ.நாவின் அறிக்கை தொடர்பாக இதுவரை இந்தியாவின் கருத்து வெளிவராத நிலையில் இலங்கை அரசாங்கம் கவலை கொண்டுள்ளதாகவும், இந்தியாவின் உறுதியான ஆதரவு பற்றிய உறுதிமொழியுடன் தான் திரும்ப வேண்டும் என்று வெளிவிவகார அமைச்சர் பீரிசுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச கூறியுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை வெளிவிவகார அமைச்சர் பீரிசின் புதுடில்லிப் பயணம் கடுமையான சவால்கள் நிறைந்த ஒன்றாக அமையலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# ஐ.தே.கட்சியில் ஏற்படும் பிளவிற்கு அரசின் மறைமுக ஆதரவே காரணம்

## ரவி கருணாநாயக்க குற்றச்சாட்டு



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியில் ஏற்பட்டு வரும் பிளவுகளுக்கு பின்னணியில் அரசாங்கம் இருப்பதாக கட்சியின் தேசிய அமைப்பாளர் ரவி கருணாநாயக்க குற்றம் சாட்டுகின்றார்.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஆதரவு பலமாக வழங்கப்பட்டு வருவதன் காரணமாகவே ஐக்கிய தேசியக் கட்சியின் உட்பூசல்கள் அடிக்கடி தலைதூக்கி வருவதாக அவர் சுட டிக்காட்டியுள்ளார்.

நாட்டில் ஏதேனும் தேர்தல்கள் நடத்தப் படும் காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சியைப் பலவீனப்படுத்தும் நோக்கில் அரசாங்கத்தினால் திட்டமிட்ட வகையிலான சதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கட்சியின் ஸ்திரத்தன்மையை சீர்குலைக்கும் அரசாங்கத்தின் முயற்சி களுக்கு கட்சியைச் சேர்ந்த சிலர் ஒத்து ழைப்பு வழங்கி வருவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார். ஆயினும் அவ்வாறான சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் பற்றிய தகவல்களை வெளியிட்டு கட்சியின் ஒற்றுமையை மேலும் சீர்குலைக்க தான் இடமளிக்கப் போவதில்லை என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்த ஐ.நாவுடன் இணங்க வேண்டும்

## அரசுக்கு ஜப்பான் அறிவுறுத்து

(கொழும்பு)

தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் ஐ.நாவுடன் இணங்கிச் செல்ல வேண்டும் என்று ஜப்பானிய அரசாங்கம் வலி யுறுத்தியுள்ளது.

ஐ.நாவின் போர்க்குற்ற அறிக்கை தொடர்பாக கருத்து வெளியிட்ட போதே, ஜப்பானிய வெளிவிவகார அமைச்சின் பிரதி ஊடகச் செயலாளர் ஹிடெனோப்பு சொபாஷிமா இவ்வாறு கூறியுள்ளார்.

ஐ.நா பொதுசெயலர் பான் கீ மூனின் பதில்கள் தொடர்பாக தமது நாடு உன்னிப்பாக அவதானிக்கும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

ஐ.நாவின் நெருக்கமான ஆலோசனைகளுடன் உள்ளக நடைமுறைகளின் ஊடாக தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்த உறுதியான நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் மேற் கொள்ளும் என்று ஜப்பானிய அரசாங்கம் எதிர்பார்ப்பதாகவும் ஜப்பானிய வெளிவிவகார அமைச்சின் பிரதி ஊடகச் செயலாளர் மேலும் கூறியுள்ளார்.

# ஆணைக்குழுவின் செயற்பாடுகள் மேலும் ஆறு மாதத்திற்கு நீடிப்பு



(கொழும்பு)

கற்றறிந்த பாடங்களும் நல்லிணக்கமும் தொடர்பான ஆணைக்குழுவின் செயற்பாடுகளை மேலும் ஆறுமாத காலத்துக்கு கொண்டு நடத்த ஜனாதிபதியினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் அடங்கிய இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்படுவதற்கு மேலும் ஆறுமாதம் எடுக்கும் என்பதால் மற்றுமொரு இடைக்கால அறிக்கை நல்லிணக்க ஆணைக்குழுவிடம் இருந்து பெறப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் கால எல்லையை மேலும் ஆறு மாதகாலத்துக்கு நீடிப்பதற்கு அனுமதி வழங்குமாறு ஆணைக்குழுவினால் அண்மையில் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் கால எல்லையை நீடிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் மற்றுமொரு இடைக்கால அறிக்கை பெறப்படவுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

தருஷ்மன் அறிக்கை வெளியாகியுள்ள நிலையில் நல்லிணக்க ஆணைக்குழுவின் மற்றுமொரு இடைக்கால அறிக்கை பெறப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை நல்லிணக்க ஆணைக்குழு ஏற்கனவே இடைக்கால பரிந்துரைகள் அடங்கிய அறிக்கை ஒன்றை அரசாங்கத்துக்கு சமர்ப்பித்திருந்தது.



பொருளாதார நிதிக்குற்றங்கள் தொடர்பான பொதுநலவாய செயலகத்தின் நீதிபதிகள் மாநாடு நேற்று கொழும்பில் ஆரம்பமானது. இதன்போது பிரதம நீதியரசராகப் புதிதாக நியமனம் பெற்ற ஷிராணி பண்டாரநாயக்காவுடன் முன்னாள் நீதியரசர் அசோக டி சில்வா மற்றும் சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ் ஆகியோர் உரையாடுவதைக் காணலாம்.

# இலங்கையில் தமிழர்களைப் பாதுகாப்பதற்கான முன்முயற்சிகளை அரசு மேற்கொள்ள வேண்டும்

## ஐரோப்பிய நாடாளுமன்றம் வலியுறுத்து

(கொழும்பு)

**விடுதலைப் புலிகளுடனான போர் முடிவிற்கு வந்து இரண்டு வருடங்கள் நிறைவடையும் நிலையில், இலங்கையில் தமிழர்களைப் பாதுகாப்பதற்கான மேல திக முன் முயற்சிகளை இலங்கை அரசாங்கம் எடுக்க வேண்டும். இவ்வாறு முயற்சிகளை எடுப்பதன் மூலம் சிங்களவர்களுக்குச் சமமான, ஒளிமயமான செழிப்பான வாழ்வைத் தாங்களும் வாழ முடியுமென்ற நம்பிக்கையை தமிழர்கள் மத்தியில் இலங்கை அரசு ஏற்படுத்த வேண்டுமென ஐரோப்பிய நாடாளு மன்றம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

போரின்போது இலங்கை அரசும் விடுதலைப் புலிகள் அமைப்பும் பாரிய மனிதஉரிமை மீறல்களில் ஈடுபட்டதாக ஐ.நா.வின் நிபுணர்குழு கண்டறிந்திருப்பதால், இது குறித்து முழுமையான, நடுநிலையான, வெளிப்படையான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும்.

ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சோசலிச மற்றும் பசுமைக் கட்சிகளின் வேண்டுகோளின் பேரில், நேற்றுமுன்தினம் ஐரோப்பிய நாடாளு மன்றத்தில் இலங்கை தொடர்பான ஐ.நாவின் போர்க்குற்ற அறிக்கை பற்றிய அவசர விவாதம் நடத்தப்பட்டது.

நேற்றைய அவசர விவாதத்தின் முடிவில், ஐ.நா சில தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது. இதன்படி, ஐ.நா நிபுணர்குழுவின் அறிக்கைக்கு ஆக்கபூர்வமான பதிலளிப்பதை இலங்கை அரசாங்கம் ஊக்குவிக்க வேண்டும்.

பொறுப்புக்கூறும் உள்ளக நடை முறைகளின் தரத்தை உயர்த்துவதுடன் உண்மையான நல்லிணக்கத்துக்கு பங்களிப்புச் செய்யும் அனைத்துலகின் கடமையுடன் இணைங்கிப் போகவேண்டும்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் செயற்பாடுகளுக்கு மதிப்பளிக்கப்படும் அதேவேளை, இந்த ஆணைக்குழு ஐ.நா அறிக்கையில் கூறப்பட்டுள்ள தீவிர மான குற்றங்கள் குறித்து கவனத்தில் எடுத்து, அதில் சம்பந்தப்பட்டவர்கள் மீது குற்றவியல் சட்ட நடவடிக்கைகளுக்கு பரந்துரை செய்ய வேண்டும்.

நிபுணர்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தி போரின்போது இடம் பெற்ற அனைத்துலக மனிதஉரிமைகள் மற்றும் மனிதாபிமானச் சட்ட மீறல்கள் தொடர்பாக உண்மையான உடனடி விசாரணைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# உழவு இயந்திர பாகங்களை திருடிய முன்னாள் படை வீரர் கைதானார்

(கொழும்பு)

வன்னிப் பொதுமக்களினால் கைவிடப்பட்டிருந்த உழவு இயந்திரமொன்றின் உதிரிப்பாகங்களைத் திருடி மறைத்து வைத்திருந்த முன்னாள் படைவீரர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

விடுதலைப் புலிகளுடனான இறுதிக்கட்ட யுத்தத்தில் பங்கேற்றிருந்த பிரஸ்தாப படைவீரர் அங்கிருந்து விடுமுறையில் ஊருக்குத் திரும்பி வந்தபோது உழவு இயந்திரமொன்றின் உதிரிப்பாகங்களைத் திருடி வந்து வீட்டில் மறைத்து வைத்துள்ளார்.

பிரஸ்தாப படைவீரர் அநுராதபுரம் பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்பதுடன், புதுமாத்தளன் பிரதேசத்தில் வைத்தே அவர் இந்த உதிரிப்பாகங்களைத் திருடியுள்ளார். அதன் பின் சிறிது காலம் கழிந்த நிலையில் அவர் இராணுவத்தை விட்டுத் தப்பியோடி உள்ளார்.

கலென்பிந்துனுவெவ பொலிசாருக்கு அண்மையில் கிடைத்த தகவலொன்றின் பிரகாரம் பிரஸ்தாப படைவீரரும், அவர் திருடி வந்த உழவு இயந்திர உதிரிப்பாகங்களும் பொலிசாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

# பாடசாலைகளுக்கு மாணவர்களை அனுமதிக்கும் சுற்றறிக்கையை கல்வி அமைச்சு வெளியிட்டது

(கொழும்பு)

அடுத்த ஆண்டில் பாடசாலைகளுக்கு பிள்ளைகளை அனுமதிப்பதற்கான ஆலோசனைகள் அடங்கிய புதிய சுற்றறிக்கையைக் கல்வி அமைச்சு வெளியிட்டுள்ளது.

இதன் பிரகாரம் 2012 ஆம் ஆண்டின் ஜனவரி மாதம் 31 ஆம் திகதியில் ஐந்து வயது பூர்த்தியாகின்ற பிள்ளைகள் அடுத்த ஆண்டில் முதலாம் தரத்திற்கு அனுமதிக்கப்பட்டுவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

உரிய வயதினைப் பூர்த்தி செய்துள்ள பிள்ளைகளின் பெற்றோர் அல்லது சட்ட ரீதியான பாதுகாவலர், அடுத்த மாதம் 30 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னரே கிடைக்கும் வகையில் பிள்ளையை அனுமதிக்க எண்ணியுள்ள பாடசாலை அதிபருக்கு விண்ணப்பப்படிவத்தை அனுப்பி வைக்க வேண்டும்.

இதன் பிரகாரம் ஆறு கட்டங்களில் பாடசாலைகளுக்காக மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளதாக சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வெற்றிடங்களில் 50 வீதமானவை பாடசாலைக்கு அருகில் வதிவிடத்தைக் கொண்டுள்ள பிள்ளைகளுக்கும், 25 வீதமானவை பழைய மாணவர்களின் பிள்ளைகளுக்கும், 15 வீதமானவை பாடசாலைகளில் கல்வி கற்கின்ற மாணவர்களின் சகோதரர்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளன.

கல்வி அமைச்சின் கீழ் இயங்கும் அரச பாடசாலைகளில் கல்வித்துறைக்கு நேரடியாகப் பங்காற்றும் நிறுவனங்களது செயற்குழு உறுப்பினர்களின் பிள்ளைகளுக்காக ஐந்து வீதமும், அரசாங்கத்தின் தேவைக் கேற்ப இடமாற்றம் பெறுகின்ற அரச கூட்டுத்தாபனம் மற்றும் அரச வங்கிகளின் உத்தியோகத்தர்களது பிள்ளைகளுக்காக நான்கு வீதமும் வெற்றிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

அத்துடன் பிள்ளையுடன் வெளிநாட்டில் தங்கியிருந்த பின்னர் நாடு திரும்புகின்றவர்களின் பிள்ளைகளுக்காக ஒரு வீத வெற்றிடமும் ஒதுக்கப்பட்டுள்ளது.

முப்படைகள் மற்றும் பொலிஸ் சேவையில் ஈடுபட்டுள்ளவர்கள் மற்றும் ஏற்கனவே ஈடுபட்டிருந்தவர்களின் பிள்ளைகளை பாதுகாப்புச் செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகள் தெரிவு செய்வார்கள் என்றும் அந்தச் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளரினால் பாடசாலை ஒன்றின் சமாந்திர வகுப்பொன்றிற்காக ஏழு மாணவர்கள் வதம் தெரிவுசெய்யப்பட்டு, கல்வி அமைசசுக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து அந்த விபரங்கள் பாடசாலைகளுக்கு ஒப்படைக்கப்படும் என்று சுற்றறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஐந்து இலங்கையர்கள் வெளிநாட்டில் கைது

(கொழும்பு)

அரசியல் தஞ்சம் கோரி அகதிகளாகச் சென்ற இலங்கையர்கள் 5 பேர் மெக்சிகோ பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளதாக சர்வதேசத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கைது செய்யப்பட்டவர்களில் இலங்கையர்கள் உட்பட மொத்தம் 183 பேர் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மத்திய அமெரிக்கா, தென்னமெரிக்கா, ஆசியா மற்றும் ஆபிரிக்கா ஆகிய பகுதிகளைச் சேர்ந்த அரசியல் தஞ்சக் கோரிக்கையாளர்களே மெக்சிக்கோ பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் அமெரிக்காவில் அரசியல் தஞ்சம் கோரிச் சென்றதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

# துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் சந்தேகத்தில் இருவர் கைது

(மட்டக்களப்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட உறுப்பினரும், பிரதியமைச்சர் முரளிதரனின் இணைப்பாளருமான மதி என்பவர் சுட் டுக்கொல்லப்பட்டமை தொடர்பில் சந்தேகநபர்கள் இருவர் கைதுசெய்யப்பட் டுள்ளதாக மட்டக்களப்பு பொலிஸ் நிலைய தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த புதன்கிழமை பிற்பகல் மட்டக்களப்பு லேக் வீதியிலுள்ள அவரது வீட்டில் வைத்து மதி என்னும் மதியழகன் என்பவர், மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவரினால் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார்.

இதனைத் தொடர்ந்து மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரனின் வேண்டுகோளின் பேரில் இரண்டு விசேட பொலிஸ் குழு அமைக்கப்பட்டுத் தீவிர விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கடந்த புதன்கிழமை மாலை மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக வைத்து இருவர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

இது தொடர்பில் தீவிர விசாரணைகள் இடம்பெற்றுவருவதாகத் தெரிவித்த மட்டக்களப்பு பொலிஸார், குற்றவாளிகளைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்தனர்.

# ஆயுள் தண்டனை

(கொழும்பு)

போதைப்பொருள் வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்ட ஒருவருக்கு ஆயுட் கால தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. 2003ஆம் ஆண்டு மார்கழி மாதம் 27ஆம் திகதி மன்னாரிலிருந்து வவுனியா நோக்கி வந்த பஸ் சோதனையிடப்பட்ட போது அதில் பயணம் செய்த நாகமுனியார் யோகராசா என்பவர் 4.73 கிராம் ஹெரோயின் போதைப்பொருளை வைத்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த வழக்கு வவுனியா மேல் நீதிமன்றில் நீதிபதி ஜே.விஸ்வநாதன் முன்னிலையில் நடைபெற்றது. எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களில் இரண்டு, நியாயமான சந்தேகத்திற்கு அப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளதாக மன்று முடிவுக்கு வந்து, எதிரிக்கு அபாயகரமான ஔடதங்கள் சட்டத்தின் கீழ் போதைப்பொருளை வைத்திருந்தமை குற்றச்சாட்டிற்கு குற்றவாளியாக கண்டு ஆயுள்கால சிறைத் தண்டன விதித்து தீர்ப்பு வழங்கியுள்ளது.

எதிரி பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டபோது தலைமறைவாகியிருந்தார். ஆனாலும் வழக்கு எதிரி சமூகமளிக்காத நிலையில் நடைபெற்று தீர்ப்பு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது

# கட்டாரிலுள்ள இலங்கையர் குறித்து விசேட கவனம் செலுத்தப்படுகின்றது

(கொழும்பு)



கட்டாரில் பணிபுரியும் இலங்கையர்களின் நலன் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்படவுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் நலன்புரி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி, கட்டாருக்கு விஜயம் மேற்கொண்ட வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் நலன்புரி சேவை அமைச்சர் டிலான் பெரேரா, டோஹாவில் பணிபுரியும் இலங்கையர்களின் முகாம்களுக்குச் சென்று அவர்களின் நிலை குறித்துக் கண்காணித்துளளார்.

கட்டாரில் பணிபுரியும் சுமார் 1 இலட்சம் இலங்கையர்களில் அதிகளவிலானோர் சுத்திகரிப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

குறைந்தளவிலான வருமானத்தினைப் பெறும் இலங்கை ஊழியர்களின் உறைவிடம் மற்றும் அவர்களின் உண்மை நிலை குறித்து கண்டறியவே அமைச்சிர் திட்டமிடாத இந்தத் திடீர் விஜயத்தை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதிகளவிலான முகாம்கள் திருப்திகரமாக இருந்த போதும், ஒருசில முகாம்கள் திருப்திகரமானதாக இல்லையென அமைச்சர் கட்டார் ஊடகம் ஒன்றுக்குத் தெரியப்படுத்தியுள்ளார்.

இதேவேளை, பார்வையிட்ட முகாம்களில் திருப்தியளிக்காத இரு முகாம்கள் குறித்து உரிய அதிகார சபைகளுடன் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கை எடுக்குமாறு கட்டாரில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகர் காரியாலயத்துக்கும் அமைச்சர் பணிப்புரைவிடுத்துள்ளார்.

# இருவரை வெட்டிக்கொலை செய்த மூவருக்கு மரண தண்டனை விதிப்பு

(கொழும்பு)

இரண்டு பேரை வெட்டிக் கொலை செய்ததாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ள மூன்று குற்றவாளிகளுக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது.

நீண்ட கால வழக்கு விசாரணையின் பின்னர் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி பந்துல அத்தபத்து இந்தத் தீர்ப்பினை அறிவித்துள்ளார்.

கடந்த 2002ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 25ஆம் திகதி கொழும்பு மட்டக்குளி பிரதேசத்தில் இரு இளைஞர்களை வெட்டிக் கொலை செய்த குற்றச்சாட்டில் மூன்று சந்தேகநபர்களுக்கு எதிராக சட்டமா அதிபர் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

சந்தேகநபர்கள் மீது சுமத்தப்பட்டிருந்த குற்றச்சாட்டு சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதால் அவர்களுக்கு மரண தண்டைனை வழங்கித் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

# இரவீந்திரன் நியமனம்

(கொழும்பு)

கென்யாவுக்கான இலங்கைத் தூதுவராக ரி.இரவீந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் இலங்கை வெளிநாட்டு சேவையைச் சேர்ந்த பதவி வழி இராஜதந்திரிகளில் ஒருவர்.

இலங்கையின் முக்கிய தூதரகங்கள் பலவற்றிலும் கடமையாற்றி இருக்கின்றார். இவர் வெளிநாட்டு அமைச்சில் ஆபிரிக்க விவகாரங்களுக்கான பணிப்பாளர் நாயகமாக தற்போதுள்ளார்.

இம்மாத இறுதிக்குள் தூதுவர் பதவியைப் பொறுப்பேற்றுக் கொள்வார் என்று வெளிநாட்டு அமைச்சுச் செய்திகள் தெரிவிக்கின்றன.



ஈச்சமோட்டை, கடற்கரை வீதியில் அமைந்துள்ள புனித பற்றிமா மாதா ஆலய வருடாந்தப் பெருவிழா நேற்று கொழும்புத்துறை புனித செபமாலை மாதா ஆலயப் பங்குத் தந்தை அருட்தந்தை அன்ரன் மத்தாயஸ் தலைமையில் நடைபெற்றது.

இதில் திருப்பலி நிறைவில் அன்னையின் திருசொரூபப் பவனியில் பீடப்பணியாளர்கள், அருட்சகோதரிகள் முன்னே செல்வதையும், இறுதியில் தூய பற்றிமா அன்னையின் திருச்சொரூபம் எடுத்துவரப்படுவதையும் காணலாம்.

# இறைமையுள்ள ஒருநாட்டின் அரசாங்கம் மற்றொரு அரசுடனே தொடர்பை பேணும்

## என்கிறார் அமைச்சர் ஹெகலிய



(கொழும்பு))

இலங்கை இறைமையுள்ள ஒரு நாடு. எனவே, இறைமையுள்ள ஒரு நாட்டின் அரசாங்கம், தனக்குச் சமனான மற்றொரு நாட்டின அரசுடனேயே தொடர்புகளைப் பேணுமே தவிர இணை யத்தளங்களுடன் தொடர்பு எதனையும் பேண மாட்டாதென ஊடகத்துறை அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

வன்னியில் நடைபெற்ற இறுதிக் கட்ட யுத்தத்தின்போது அரசாங்கம், அரச சார்பற்ற நிறுவனங்கள் எதனையும் யுத்தப் பாதிப்புக்குள்ளான பகுதிகளுக்குச் செல்ல அனுமதிக்கவில்லையென விக்கிலீக்ஸ் வெளியிட்ட கருத்துத் தொடர்பாகவே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்ததாவது -

யுத்தப் பாதிப்புக்குள்ளான இடங்களுக்குச் செல்வதற்கான அரச சார்பற்ற நிறுவனங்களின் பெயர்களை பாதுகாப்பு அமைசசு திரட்டியதென உண்மைக்குப் புறம்பான செய்திகளை விக்கிலீக்ஸ் வெளியிட்டுள்ளது.

எனவே, யுத்தப் பாதிப்புப் பகுதிகளுக்கு அரச சார்பற்ற நிறு வனங்களுக்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்க வில்லை என்று கூறுவது சுத்தப் பொய். ஆனால், யுத்தம் நடைபெற்ற நேரம், அவர்களின் விபரங்கள் ஏன் திரட்டப்பட்டதென்றால், அவர்களுக்குரிய போக்குவரத்து மற்றும் பாது காப்பை வழங்குவதற்கே யாகும். ஆனால், அவர்களின் நன்மை கருதி பாதுகாப்பு அமைச்சு கேட்டதனை அவர்கள் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை.

இலங்கை ஒரு இறைமை யுள்ள நாடு. எனவே, அந்த இறைமையுள்ள நாட்டின் அரசு இணையத்தளங்களுக்குப் பதிலளிக்கத் தேவையில்லை. நாம் அரசாங்க மட்டத்திலேயே தொடர்புகளைப் பேணுவோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# பேருந்து கட்டண அதிகரிப்பை நடைமுறைப்படுத்த அரசு மறுப்பு



(கொழும்பு)

தனியார் பேருந்து உரிமையாளர்கள் கோருவதைப் போல, உடனடியாக பேருந்துக் கட்டணங்களை அதிகரிக்க முடியாது என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

தனியார் போக்குவரத்துத் துறை அமைச்சர் சி.பி ரத்நாயக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர்கள் கோருவதற்கு இணங்க ஏகபோகமாக இந்த அதிகரிப்பை மேற்கொள்ள முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தனியார் பேருந்து உரிமையாளர்கள் சந்திக்கின்ற சிக்கல்கள் தொடர்பில் ஆராய்ந்து, இது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

# உலகின் பாதுகாப்பான சுற்றுலாத்தலம் இலங்கை

(கொழும்பு))

உலகிலேயே இலங்கையானது பாதுகாப்பான சுற்றுலாத்தலமாக விளங்குவதாக சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் பதில் பணிப்பாளர் நாயகம் விபுல வணிகசேகர தெரிவித்துள்ளார்.

புள்ளிவிபரத் தகவலின்படி 2011 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளது. இக் காலப் பகுதியில் 2 இலட்சத்து 78 ஆயிரத்து 959 சுற்றுலாப் பயணிகள் வருகைதந்துள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இவ்வருடம் 63 ஆயிரத்து 835 ஆக சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளது.

விடுமுறை காலமான ஏப்ரல் மாதம் குறித்து மதிப்பீடு செய்கையில் அயல் நாடான இந்திய சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கை 52,181 ஆக, அதாவது 90 சதவீத அதிகரிப்பாக உள்ளது. அத்துடன் ஏனைய நாடுகளான பிரித்தானியா, ஜேர்மனி, பிரான்ஸ் ஆகிய நாடுகளிலிருந்து வருகைதரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை முறையே 37.022 , 20.928 , 19577 ஆகக் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# சிறைக்கூடங்களில் மதப் பாடசாலைகள்

(கொழும்பு))

இலங்கையிலுள்ள அனைத்துச் சிறைச்சாலைகளிலும், மத ரீதியான பாடசாலைகளை அமைக்குமாறு புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர பணிப்புரை விடுத்துள்ளார்.

இதன்படி முதற்கட்டமாக பௌத்தம், இந்து, கிறிஸ்தவம் மற்றும் இஸ்லாம் மதங்களைச் சேர்ந்த பாடசாலைகள் 33 சிறைச்சாலைகளில் அமைக்கப்பட உள்ளதாக அமைச்சின் செயலாளர் ஏ.திஸநாயக்க தெரிவத்தார்.

மகிந்த சிந்தனை வேலைத் திட்டத்தின் அடிப்படையில் சிறையிலுள்ளவர்கள் தமது மதம் தொடர்பான கல்வியைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் இந்தப் பாடசாலைகள் அமைக்கப்படவுள்ளன.

சிறைகளிலிருந்து கைதிகள் விடுதலையாகும்போது, தமது வாழ்க்கையை வெற்றிகரமாக சமூகத்துடன் இணைந்து நடாத்த வேண்டுமென்ற எதிர்பார்ப்புடனேயே இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சிறுவர் இல்லத்தில் தங்கியிருந்த 6 சிறுவர்கள் தப்பியோட்டம்


(கொழும்பு))

சிலாபம் பிரதேசத்தில் அமைந்துள்ள சிறுவர் இல்லமொன்றில் தங்கியிருந்த ஆறு பிள்ளைகள் நேற்று முன்தினம் தப்பிச் சென்று கொண்டிருந்த போது பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த பிள்ளைகள் தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸ் அவசர அழைப்பு பிரிவினருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து அவர்களைக் கைது செய்ய முடிந்ததாக பொலிஸார் குறிப்பிட்டனர். பிள்ளைகள் சிறுவர் இல்லத்திலிருந்து திடீரெனத் தப்பிச் சென்றமைக்கான காரணம் குறித்து பொலிஸார் விரிவான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

வாக்குமூலங்களைப் பதிவு செய்த பின்னர் இந்தப் பிள்ளைகளை வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# பிரதம நீதியரசராக ஷிராணி பண்டாரநாயக்க



(கொழும்பு))

பிரதம நீதியரசராக உயர் நீதிமன்ற நீதிபதி ஷிராணி பண்டாரநாயக்கவை நியமிப்பதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்வைத்த பிரேரணையை நாடாளுமன்ற சபை அங்கீகரித்துள்ளது.

பிரதம நீதியரசராக இருந்த அசோக டீ சில்வா ஓய்வு பெற்றதை அடுத்து அந்த இடத்தினை நிரப்பும் வகையிலேயே ஜனாதிபதி இந்தப் பிரேரணையை முன்வைத்திருந்தார்.

பிரதம நீதியரசராக ஷிராணி பண்டாரநாயக்க நியமிக்கப்படும் பட்சத்தில் இலங்கையின் வரலாற்றில் முதல் முறையாக பெண் ஒருவர் பிரதம நீதியரசராக நியமிக்கப்படுவது இதுவே முதன் முறையாகும்.

இதேவேளை இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவின் தலைவராக ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி பாலபட்ட பென்டியை நியமிப்பதற்கு நாடாளுமன்ற சபை அனுமதி வழங்கியுள்ளது.

# மன்னார் மாவட்ட அபிவிருத்தி செயலகத்தில் கலந்துரையாடல்

(கொழும்பு))


மன்னார் மாவட்டத்தில் ஐரோப்பிய ஒன்றியத்தினால் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து கிராமிய அமைப்புக்களுடனான கலந்துரையாடலொன்று நடைபெற்றுள்ளது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் என்.வேதநாயகம் தலைமையில் மன்னார் அரச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றுள்ளது.

வறுமை ஒழித்தல், உட்கட்டுமானங்களை அபிவிருத்தி செய்தல், சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளர்களை ஊக்குவித்தல், உள்ளூர் நிர்வாக அமைப்புக்களை அபிவிருத்தி செய்தல் போன்ற அபி விருத்தித் திட்டங்களை நடை முறைப்படுத்துவது தொடர்பாக ஆராயப்பட்டது.

மன்னார் மாவட்ட அபிவிருத்திப் பணிக்கென ஐரோப்பிய ஒன்றியத்தினால் சுமார் 225 மில்லியன் ரூபா பணம் செலவிடப்படவுள்ளதாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் என்.வேதநாயகம் தெரிவித்தார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் மன்னார் மாவட்ட அபிவிருத்திப் பணிகள் தொடர்பான கூட்டத்தில் மன்னார் அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர்கள், ஐரோப்பிய ஒன்றியத்தின் குழுத் தலைவர் பரிஸ் மாட்டின் ஓஸ், மற்றும் குழு அங்கத்தவர்களான பொப் மக்னினைஸ், சாம்ரகு பத்த, டி.பி.கெட்டியாராச்சி ஆகியோர் கலந்து கொண்டனர்.




கொக்கிளாய் அ.த.க. பாடசாலையில் மாணவர்களின் கல்விச் செயற்பாட்டிற்காக தற்காலிகக் கொட்டகை அமைக்கப்பட்டு வேயப்படுவதனைக் காணலாம். (17)

# கலை வண்ணம்




உண்பதற்காகவே காய்கறிகளை யும் பழங்களையும் பயன்படுத்துவதை நாம் அறிந்துள்ளோம். ஆனால் இவற்றின் மூலம் பல்வேறு சிற்பங்களையும் சித்திரங்களையும் உருவாக்கி பார்வை யாளர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள் ளார் சூ என்ற இளைஞர்.

23 வயதுடைய மேற்படி இளைஞர் வாழைப்பழம்,பீட்ருட்,கிழங்கு, அன்னாசி போன்ற பழங்களைப் பயன்படுத்தி வித்தி யாசமான வடிவில் உருவங்களை வடிவமைத்துள்ளார்.










மனைவி:- என்னங்கோ உங் களுக்கு ஒரு விஷயம் தெரியுமோ?

கணவன் :- என்னப்பா விஷயம்?

மனைவி :- எங்களுக்குக் கல்யாணம பண்ணி வைச்ச ஐயர் மண்டையைப் போட்டுட்டாராம்.

கணவன் :- ம். செய்தபாவம் சும்மா விடுமோ? தெய்வம் ஒன்று இருக்கு தல்லோ.

# திருமணத்திற்குப் பின் படிக்க விரும்புகின்றீர்களா?



90% பெண்கள் திருமணத் திற்கு பின்னர் அவர்களால் தாங்கள் நினைத்தபடி தங் களது கல்வி, வேலை, மேற்படிப்பு, பதவியுயர்வு, சாதனை ஈட்டுவதில் முழுமையான கவனத்தினை செலுத்த முடிவதில்லை. 10% பெண்கள் தமது இலக் கினை அடைந் திருக்கின்றார்கள்.

ஆம் அதில் உண் மையுள்ளது. பெண் ணிற்கு குடும்பத் தேவையை நிறை வேற்ற வேண்டிய பொறுப்புக்களைக் கூட அவர்களால் செய்து முடிக்க முடிகின்றது. ஆனால் சமூகத்தின் பார்வையில் இருந்து மட்டும் தப்பித்துக் கொள்ள முடிவதில்லை. வீட்டுத் தேவையினை பிள்ளை களைப்பராமரித்தல், அவர்களது கல்வியில் கவனம் செலுத்துதல், பெற்றோர், கணவனைக் கவனித்தல் இவற்றினைச் செய்து முடித்தால் கூட அவர்களால் படிக்க முடிவதில்லை.

திருமணத்தின் முன்னர் அவர்கள் படிப்பில் மட்டும் தங்களது கவனத்தினை ஈடுபடுத்தி படித்து பட்டம் பெற்று தமது இலக்கினை அடைகின்றனர். திருமணத்தின் பின்னர் அவர்கள் முன்னேற்றம் ஏனோ நத்தை வேகமாகின்றது.

படிக்க விரும்பம் பெண்கள் திருமணத்தின் முன்னர் படிக்க வேண்டியதை செய்து முடிக்கவேண்டிய பட்டங்களை செய்துமுடிக்க முயற்சியுங்கள்.

பெற்றோருடன் இருக்கும் போது படிக்கும் படிப்புத்தான் 75% பெண்ணிற்கு நிலைக்கிறது. அப்புறம் 25% நிகழ்தகவுதான்.

ஆகவே நான் சொல்வது படிக்க, சாதிக்க வேண்டியவற்றை திருமணத்திற்கு முன்னர் செய்யுங்கள். உங்களுக்கு வரும் கணவர் உங்களுக்கு ஒத்தாசையாக இருந்தாலும் கூட ஏனோ முடிவதில்லை.

எற்றுக்கொள்ள முடியாவிடின் நீங்களே சில படித்த பெண்களின் நாளேட்டை புரட்டிப்பாருங்கள். இந்த ஆய்வில் அகக்காரணிகள், புறக்காரணிகள் என்று வேறுபடுத்தி இரண்டும் தாக்கம் செலுத்துகின்றது.

# புதுமணத் தம்பதியினரின் தேன் நிலவு



அண்மையில் திருமணமான இங்கிலாந்தின் வருங்கால மன்னரும், மகாராணியும் தங்கள் தேன் நிலவைக் கழிப்பதற்காக இந்து சமுத்திரத்தின் இரகசியமான ஒரு பிரதேசத் திற்குச் சென்றுள்ளனர்.


இளவரசர் வில்லியம் மற்றும் கேட் மிடில்டன் ஆகிய இரு வருக்கும் இது இருவார கால தேன் நிலவுப் பயண மாக அமையும். உலகில் உள்ள மிகவும் ரம்மிய மானதும், அழகானது மான ஒரு தீவுப் பகுதியில் உள்ள உல்லாச விடுதியில் இருவரும் ஒரு இரவுப் பொழு தைக் கழிப்பதற்கு 4000 பவுண்கள் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

இருவரும் தனிப்பட்ட ஜெட் விமானத்தின் மூலம் குறித்த பகுதிக்குச் சென்றுள்ளனர். தீவின் பிரதான நிலப்பரப்பை அடைந்ததும் அங்கிருந்து தேன் நிலவு விடுதிக்கு ஹெலிகொப்டரில் அழைத்துச் செல்லப்பட்டனர்.

இந்தப் பயணத்தின் போது தங்களது ஏகாந்தம் பேணப்பட வேண்டும் என்று தம்பதிகள் விரும்புவதால் அவர்கள் எங்கு செல்கின்றார்கள் என்பது பற்றி மாளிகை வட்டாரங்கள் வாய் திறக்க மறுத்துவிட்டன. இந்த இடத்தை ஸ்கொட்லாந்து புலனாய்வுப் பிரிவினர் மூன்று வாரங்களுக்கு முன்பே சென்று பார்த்துவிட்டு பாதுகாப்பு நிலைமைகள் மற்றும் தம்பதியினர் விரும்பும் ஏகாந்தம் என்பன குறித்து திருப்தி தெரிவித்துள்ளனர்.

இளவரசர் வில்லியமுடன் செல்லும் அவரின் புது மனைவிக்குக் கூட எங்கு செல்கின்றோம் என்ற முழுமையான விவரம் தெரியாது என்று தகவல் வட்டாரம் தெரிவித்துள்ளது.

# நல்ல முயற்சி



அமெரிக்காவின் கென்டக்கியைச் சேர்ந்த 62 வயதான மிக்கி நில்சன் என்ற முதியவ ரொருவர் மதுபானத்தை எரிபொருளாகப் பயன்படுத்தி ஓடக்கூடிய கார் ஒன்றினை உருவாக்கியுள்ளார்.

இக்காரானது பழைய தேவையற்ற கழிவுப் பொருட்களைக் கொண்டே உருவாக்கப் பட்டுள்ளது. சுமார் 6 மாத உழைப்பின் பின்னர் இக்கார் உருவாக்கப்பட்டுள்ளது. இது வெள்ளை மாளிகையின் கவனத்தினையும் ஈர்த்துள்ளது. இது தொடர்பில் அறிக்கை யொன்றினை வெளியிட்டுள்ள ஒபாமா இத்தகைய முயற்சிகள் நாட்டினரை பெருமிதம் கொள்ளச் செய்வதாகவும், இதனால் எதிர்காலங்களில் எரிபொருட்களுக்காக மத்திய கிழக்கு நாடுகளில் தங்கியிருக்க வேண்டிய தேவை குறையும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

# சிறைக்குள் அழகு ராணிப் போட்டி



அழகுராணிப் போட்டி உலகம் முழுவது நடைபெற்று வருவது வழக்கம். ஆனால் சிறைச் சாலைகளில் உள்ள பெண்சிறைக் கைதிகளுக்காக அழகு ராணிப்போட்டி நடத்தப்பட்டுள்ளது.

கொலம்பியா, பிறேசில், கௌதமாலா, சிபேரியா, லித்துவேனியா போன்ற நாடுகளில் பெண் சிறைக் கைதிகளுக்கு அழகு ராணிப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன.



அழகு ராணிகளாகத் தெரிவு செய்யப்படுவோருக்கு பெரும் பாலும் பணப் பரிசுகள் வழங்கப்படுகின்றன. அதுமட்டுமல்லாது அழகு ராணிகளாகத் தெரிவு செய்யப்படுபவர்கள் சிறைச்சாலைகளில் இருந்து விரைவாக விடுவிக்கப்படுகின்ற சந்தர்ப்பங்களும் உள்ளன.

# நடுவானில் சாதனை



சுவிட்சர்லாந்து விமானப்படை முன்னாள் வீரர் உடலில் ஜெட் கருவியை இணைத்துக் கொண்டு பறவை போல பறந்து சாதனை படைத்தார். சுவிட்சர்லாந்தைச் சேர்ந்தவர் யூவ்ஸ் ரோசி(51). அந்நாட்டு விமானப்படையில் ஜெட் விமான பைலட்டாக 17 ஆண்டுகள் பணியாற்றியவர்.பணியில் இருந்து ஓய்வு பெற்ற பிறகு பல்வேறு சாகச பயணங்கள் மேற்கொண்டு வருகிறார். ஜெட் கருவியை உடலில் இணைத்துக் கொண்டு பறவை போல பறந்து அமெரிக்காவில் கடந்த 6ஆம் திகதி சாதனை படைத்துள்ளார்.

அமெரிக்காவின் அரிசோனா மாநிலத்தில் கொலராடோ ஆற்றை ஒட்டி அமைந்துள்ள கிராண்ட் கேனைன் பள்ளத்தாக்கு பகுதியில் இந்த சாகசத்தை அவர் நிகழ்த்தினார். அப்பகுதியில் உள்ள குவானோ பாயின்ட் என்ற இடத்துக்கு ஹெலி கொப்டரில் சென்றார். பறவையின் இறக்கைகள் போன்ற தோற்றம் கொண்ட ஜெட் வாகன கருவியை உடலில் இணைத்துக் கொண்டார். 2 ஆயிரம் அடி உயரத்தில் ஹெலிகாப்டர் பறக்கும் போது ஜெட்டை இயக்கியபடியே அதில் இருந்து குதித்தார். பறவை போலவே அனாயாசமாக பறந்த அவர் 8 நிமிடத்தில் 8 கி.மீ தூரத்தைக் கடந்தார். 6 முதல் 12 நிமிடம் வரை தொடர்ச்சியாகப் பறக்க முடியும். 4 இன்ஜின்கள் கொண்டது. இவர் சுவிட்சர்லாந்தின் ஜெனிவா நகரிலும், இங்கிலாந்து மற்றும் பிரான்சை பிரிக்கும் ஆங்கிலக் கால்வாயிலும் இதேபோல ஏற்கனவே பறந்து சாகசம் செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.




# கலைஞர் ரி.வி. நிர்வாகத்தில் கனிமொழிக்கு முக்கிய பங்கு

## உறவினர் சி.பி.ஐ.யிடம் வாக்கு மூலம்

(புதுடில்லி)

கலைஞர் ரி.வி. நிர்வாகத்தில் தனக்கு எந்தத் தொடர்பும் இல்லை என்ற கனிமொழியின் வாதத்தைப் பொய்யாக்கும் விதத்தில் கலைஞர் ரி.வி. நிர்வாக விவகாரங்களில் கனிமொழிக்கு ஈடுபாடுள்ளது என்று அவரது உறவினர்களில் ஒருவரான பி.அமிர்தம் சி.பி.ஐ.யிடம் வாக்குமூலம் அளித்துள்ளார்.

இந்த ஊழல் வழக்கில் சி.பி.ஐ.தாக்கல் செய்த 2ஆவது குற்றப்பத்திரிகையில் கலைஞர் ரி.வி.யின் பங்குதாரர்களான கனிமொழி, சரத்குமார் (நிர்வாக இயக்குனர்) ஆகியோர் மீது குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

இதையடுத்து இவர்கள் இருவரும் டில்லியில் பாட்டியாலா இல்லத்தில் உள்ள சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றத்தில் நீதிபதி ஓ.பி.ஹைனி முன்னிலையில் அண்மையில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

அப்போது கலைஞர் ரி.வி. நிர்வாக விடயங்களில் கனிமொழிக்கு எந்த ஈடுபாடும் இல்லை என்று அவரது சார்பில் வாதாடிய பிரபல சட்டத்தரணி ராம் ஜேத் மலானி வாதாடினார்.

ஆனால் இந்தக் கூற்றை பொய்யாக்கும் வகையில் கனிமொழியின் உறவினரான பி.அமிர்தம் சி.பி.ஐ. அதிகாரிகளிடம் வாக்குமூலம் கொடுத்துள்ளார்.

இவர் கலைஞர் ரி.வி.யில் தலைமை நிதி அதிகாரியாகப் பணியாற்றியவர்.

தி.மு.க. தலைவர் கருணாநிதியின் மூத்த சகோதரி பெரிய நாயகத்தின் மூத்த மகன்தான் இந்த பி.அமிர்தம்.

குற்றவியல் சட்டம் (சி.ஆர்.பி.சி.) பிரிவு 161 இன் கீழ் இந்த வாக்குமூலத்தை சி.பி.ஐ.யிடம் அமிர்தம் சமர்ப்பித்துள்ளார்.

கலைஞர் ரி.வி.யின் அன்றாட விவகாரங்களில் கனிமொழி தீவிரமாக ஈடுபட்டு வந்தார் என்று அதில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கலைஞர் ரி.வி. பிரைவேட் லிமிடெட் என்ற இந்த நிறுவனத்தைத் தோற்றுவித்த இயக்குநர்களில் கனிமொழியும் ஒருவர் என்று அமிர்தம் கூறியுள்ளார். இருந்தாலும் கடந்த 2007, ஜுன் 20 ஆம் திகதி இயக்குநர்கள் குழுவில் இருந்து கனிமொழி விலகிவிட்டார். மத்திய உள்துறை அமைச்சகத்திடமிருந்து வரவேண்டிய அனுமதிகள் காலதாமதமானதால் கனிமொழி தனது இயக்குநர் பதவியிலிருந்து விலகினார். எனினும், கலைஞர் ரி.வி.யின் அன்றாட விவகாரங்களில் அவர் ஆர்வத்துடன் செயற்பட்டு வந்தார் என்றும் அமிர்தம் கூறியுள்ளார்.

## ஒளிபரப்பை மாற்றிய கலைஞர் ரி.வி

(சென்னை)

வாக்கு எண்ணிக்கை ஆரம்பித்ததிலிருந்து தேர்தல் நிலவரங்களைக் காட்டி வந்த கலைஞர் ரி.வி தேர்தல் முடிவுகள் அ.தி.மு.க.வுக்குச் சாதகமாக மாறி வந்ததால், தேர்தல் செய்திகளை நிறுத்திவிட்டு "மானாட மயிலாட" நிகழ்ச்சியை ஒளிபரப்பத் தொடங்கினர்.

அனைத்துத் தொலைக்காட்சிகளிலும் தேர்தல் செய்திகள் வெளிவந்த நிலையில் கலைஞர் ரி.வியின் இந்தச் செயற்பாடு வேண்டுமென்றே மேற்கொள்ளப்பட்டதாகத் தமிழக மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதனைப் பார்த்த மக்களுக்கு இந்த நிகழ்ச்சி மகிழ்ச்சி தருவதாக அமைந்தது.

## தகவல் தொடர்பு புரட்சியை ஏற்படுத்திய சாம்பிட்ரேடாவுக்கு ஐ.நாவின் உயரிய விருது

(புதுடில்லி)

தேசிய அறிவுசார் திணைக்களத்தின் தலைவர் சாம்பிட்ரேடாவுக்கு ஐ.நாவுக்கான உலகத் தொலைத்தொடர்புத் துறையின் உயரிய விருது வழங்கப்படவுள்ளது.


1980 களில் இந்தியாவில் தகவல் தொடர்புப் புரட்சியை ஏற்படுத்தி அறிமுகம் செய்வதர் சாம்பிட்ரேடா. இவர் 1980 இல் முன்னாள் பிரதமர் ராஜீவ் மற்றும் தற்போதைய பிரதமர் மன்மோகன்சிங் ஆகியோருக்குத் தகவல் தொழில்நுட்ப ஆலோசகராகவும், தேசிய அறிவுசார் சபையின் தலைவராகவும் உள்ளார். தகவல் தொழில்நுட்பத் துறையில் இவர் பல்வேறு சாதனைகளையும், சமூக, பொருளாதாரத் துறைகளில் சிறந்த பங்களிப்பினையும் அளித்துள்ளார்.

சர்வதேச அளவில் பின்தங்கிய நாடுகளுக்கு தகவல் தொழில்நுட்பத்தினை ஏற்படுத்தியதில் முக்கிய பங்காற்றியுள்ளார். இதனைக் கௌரவிக்கும் வகையில் சாம்பிட்ரேடாவிற்கு ஐ.நாவின் உலகத் தொலைத்தொடர்புத் துறையின் உயரிய விருது வழங்கப்படவுள்ளது.

சுவீட்சர்லாந்தின் ஜெனீவா நகரில் எதிர்வரும் 17ஆம் திகதி சர்வதேச தகவல் தொழில்நுட்ப சமூக தினம் கொண்டாடப்படவுள்ளது. இந்த விழாவில் சாம்பிட்ரேடாவுக்கு விருது வழங்கப்படவுள்ளது. ஐ.நா. வழங்கும் இந்த உயரிய விருது தொலைத்தொடர்புத் துறையில் முதன்முதலாக இந்தியருக்குக் கிடைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## எனக்கு நண்பர்களாக இருந்த பலர் எதிர்முனையில் நின்று தூற்றுகின்றனர்

### கருணாநிதி வேதனை



(சென்னை)

நண்பர்களாக இருந்தவர்கள், இன்று எதிர்முனையில் நின்று ஏசியும், பேசியும் மகிழ்கின்றனர் என, கருணாநிதி கூறியுள்ளார்.

இதுகுறித்து, அவர் வெளியிட்ட அறிக்கையில்,

என் வாழ்க்கையில் எத்தனையோ இனிய நண்பர்கள், அரசியல் மற்றும் கலை, இலக்கிய ஈடுபாடு காரணமாக என்னுடன் பழகி இருக்கின்றனர். அவர்களில் சிலர், என் மீது எந்தக் குற்றமும் இல்லாமல், கால வித்தியாசத்தால் தோழமை உணர்வை அறுத்துக் கொண்டு, எதிர் முனையில் நின்று ஏசியும், பேசியும் மகிழ்ந்து கொண்டு இருக்கின்றனர்.நட்பு அறுந்துவிட்டது என்பதற்காக, அவர்களை நாராச மொழியில் நான் அர்ச்சித்தது கிடையாது. அவர்கள் தான் என் மீது வெறுப்பைக் காட்டி வருகின்றனர்.

கடலூர் சிறையில் இருந்த பழ.நெடுமாறனுக்கு, தொல்காப்பிய பூங்கா நூலை அனுப்பி இருந்தேன். அதைப் பெற்றுக் கொண்டு, உள்ளம் மகிழ்ந்ததாக அவர் எனக்கு கடிதம் எழுதினார். இதைப் போல் எனக்கு எத்தனையோ நண்பர்கள் உண்டு.

அவர்களுக்கு, கனவில் கூட நான் தீங்கு எண்ணியதில்லை. ஆனால், அவர்கள் என் மீது ஏன் வெறுப்பை வளர்த்துக் கொண்டனர் என எனக்குத் தெரியாது. தேவையில்லாமல் என்னைத் திட்டி எழுதுகின்றனர், பேசுகின்றனர். எப்படி இருந்தவர்கள் இப்படி மாறிவிட்டனர். சில நேரங்களில், சில மனிதர்கள். இவ்வாறு அறிக்கையில் கருணாநிதி கூறியுள்ளார்.

# நடிகர் வடிவேலுவின் வீட்டிற்கு திடீரென பொலிஸ் பாதுகாப்பு

(சென்னை)

தமிழகத் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் விஜயகாந்தை கடுமையாகத் தாக்கிப் பேசியிருந்தார் நடிகர் வடிவேலு. நேற்றையதினம் தமிழகத்தில் தேர்தல் முடிவு வெளிவந்து அ.தி.மு.க. வெற்றி பெற்றதனால் அவரது வீட்டிற்கு திடீரென பொலிஸ் பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது.

விஜயகாந்த் ரசிகர்களுக்கும், நடிகர் வடிவேலுக்கும் ஏற்கனவே மோதல் இருந்து வந்தது. இருதரப்பினரும் நீதிமன்றத்துக்குச் சென்றனர். சட்டமன்றத் தேர்தலிலும் மோதல் எதிரொலித்தது. தி.மு.க. கூட்டணிக்கு ஆதரவாக வடிவேலு பிரசாரத்தில் குதித்தார். கூட்டங்களில் விஜயகாந்தைக் கடுமையாகத் தாக்கிப் பேசினார்.

குடிகாரரர் என்றும் விமர்சித்தார். தமிழ் நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்து பேசினார். விஜயகாந்த் போட்டியிடும் ரிஷிவந்தியம் தொகுதிக்கும் சென்று அவரைத் திட்டித் தீர்த்தார். வடிவேலு பிரசாரத்தில் பெரும் கூட்டம் கூடியது. ஆண்களும், பெண்களும், குழந்தைகளுடன் திரண்டனர். பெரும் தலைவர்களுக்கு இணையாக அவருக்குக் கூட்டம் வந்தது. சுற்றுப்பயணம் முடிநததும் தி.மு.க. கூட்டணி நிச்சயம் வெற்றி பெறும் என்று கருத்துத் தெரிவித்தார்.



தற்போது அ.தி.மு.க. கூட்டணி வெற்றி பெற்றுள்ளதால் வடிவேலு அதிர்ச்சியாகியுள்ளார். அவர் வீட்டில் இல்லை எங்கு இருக்கிறார் என்றும் தெரியவில்லை." விஜயகாந்த் ரசிகர்களால் வடிவேலு வீடு தாக்கப்படலாம் எனச் செய்தி பரவியது.

இதையடுத்து வடபழனி லோகையா கொலனியில் உள்ள அவரது வீட்டில் கூடுதல பொலிஸ் பாதுகாப்புப் போடப்பட்டு உள்ளது. வீதியில் இருபுறமும் பொலிசார் நின்று அந்த வழியாக வருவோர், போவோரை நிறுத்தி விசாரித்து அனுப்புகின்றனர்.

# முடிவுக்கு வந்த ஆட்சி

(கொல்கொத்தா)

மேற்குவங்க மாநிலத்தில் 34 ஆண்டுகளாகத் தொடர்ந்து நடைபெற்று வந்த கம்யூனிஸ்ட் ஆட்சிக்கு இம்முறை வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

மொத்தம் உள்ள 294 தொகுதிகளில் திரிணாமூல் காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி 215 தொகுதிகளில் முன்னிலையில் உள்ளது.

இதில், திரிணாமூல் காங்கிரஸ் கட்சி மட்டும் 177 தொகுதிகளில் முன்னிலையில் உள்ளதால் அக்கட்சி தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கும் வாய்ப்பு உருவாகியுள்ளது. கூட்டணிக் கட்சியான காங்கிரஸ் 33 தொகுதிகளில் முன்னிலையில் உள்ளது. மேற்கு வங்கத்தில் ஒரு கட்சி தனித்து ஆட்சி அமைக்க 147 எம்.எல்.ஏ.க்கள் தேவை என்பது குறிபபிடத்தக்கது. இடதுசாரிகள் கூட்டணி 73 தொகுதிகளில் மட்டுமே முன்னிலையில் உள்ளது.

# தமிழகத் தேர்தல் முடிவுகள் மக்களுக்குக் கிடைத்த வெற்றி

## என்கிறார் விஜயகாந்த்

(சென்னை)

தமிழக சட்டசபைத் தேர்தலில், தே.மு.தி.க. போட்டியிட்ட பெரும்பாலான இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. இந்நிலையில், தே.மு.தி.க. அலுவலகத்திற்கு வந்த கட்சித் தலைவர் விஜயகாந்த், அங்கிருந்த எம்.ஜி.ஆர். சிலைக்கு மாலை அணிவித்தார். பின் பத்திரிகையாளர்களைச் சந்தித்த விஜயகாந்த் கூறியதாவது, இது எனக்குக் கிடைத்த வெற்றி அல்ல, மக்களுக்கும், கட்சித் தொண்டர்களுக்கும் கிடைத்த வெற்றி.

இதன் மூலம், குடும்ப அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது. ஸ்பெக்டரம் வழக்கு திசை மாறும், தற்போது இந்த வழக்கு நிலுவையில் உள்ளதால், இது குறித்து அதிகம் கருத்துக் கூற விரும்பவில்லை. இதுவரை மக்கள் அனுபவித்து வந்த பிரச்சினைகள் இனி மெல்ல மெல்லக் குறையத் தொடங்கும் என்று அவர் கூறினார்.

# பாகிஸ்தானின் வடமேற்கு பகுதியிலுள்ள ராணுவ பயிற்சி மையத்தில் குண்டுவெடிப்பு

## 80 இற்கும் மேற்பட்டோர்பலி பலர் காயம்



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் வடமேற்கு பகுதிலுள்ள துணை நிலை ராணுவ பயிற்சிமையத்தில் நேற்று இடம் பெற்ற பயங்கர குண்டு வெடிப்பில் 80 பேர் இறந்ததுடன் மேலும் பலர் காயமடைந்தாரென பொலிஸார் தெரிவித்தனர்.

முதல் குண்டு மோட்டார் சைக்கிளில் வந்த தற்கொலைப் படையாளியால் வெடிக்கப் பட்டது. இரண்டாவது குண்டு வெடிப்பு ஏற்கனவே புதைக்கப் பட்டிருந்த வெடிகுண்டு மூலம் ஏற்பட்டது எனத் தகவல்கள் கூறுகின்றன.

இந்த மாத தொடக்கத்தில் அல்கொய்தா தீவிரவாதத் தலைவர் ஒசாமா பின்லேடன் அமெரிக்க சிறப்புப் படையால் சுட்டுக் கொல்லப்பட்டார். அதற்கு பழி வாங்கும் நடவடிக்கையாக இந்தத் தாக்குதலை நடத்தி உள்ளோம் என பாகிஸ்தான் தலிபான் தீவிரவாதிகள் கூறியுள்ளனர்.

பயிற்சி முடித்து வாகனத்தில் புதிய வீரர்கள் அமர்ந்து இருந்த போது குண்டு வெடிப்புகள் ஏற்பட்டன. குண்டு வெடிப்பில் இறந்த 65 பேர் துணை ராணுவ நிலையத்திற்கு புதிதாகத் தேர்வு செய்யப்பட்டவர்கள். மிகச்சிறிய அளவில் பொது மக்களும் இறந்துள்ளனர் என அதிகாரிகள் கூறினர்.

குண்டு வெடிப்பில் காயம் அடைந்து ரத்த வெள்ளத்தில் துடித்த வீரர்கள் அருகிலுள்ள மருத்துவமனைக்கு கொண்டு செல்லப் பட்டனர். குண்டு வெடிப்பு பகுதியில் போக்குவரத்து தடை செய்யப்பட்டுள்ளது.

பெஷாவரின் வடமேற்கில் 35 கி.மீ தொலைவில் உள்ள சாபகதர் பகுதியில் இரட்டைக் குண்டு வெடிப்பு நடந்தது. இந்த இடம் ஆப்கானிஸ்தான் எல்லைக்கு அருகே உள்ளது. குண்டு வெடிபபில் வாகனங்களும் சேதம் அடைந்தன.

# ஹிட்லரின் படையில் பணியாற்றிய முன்னாள் வீரருக்கு சிறைத்தண்டனை

இரண்டாம் உலகப்போரின் போது ஜேர்மன் சர்வாதிகாரி ஹிட்லரின் நாஜிப்படையில் பணியாற்றிய ராணுவ வீரர் ஒருவர் போர்க் குற்றவாளி எனக் குற்றம் சாட்டப்பட்டு 5 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

இரண்டாம் உலகப்போரின் போது ஹிட்லரின் நாஜி இயக்கத்தில் ராணுவ வீரராகப் பணியாற்றிய டெமிஜன்ஜுக்(91) என்ற உக்ரைன் நாட்டு ராணுவ வீரர் மீது இஸ்ரேல் உள்ளிட்ட நாடுகள் போர் குற்றவாளியாக அறிவித்தது.

இவர் இரண்டாம் உலகப்போரின் போது போலந்து நாட்டில் உள்ள டெரிபிலிங்கா முகாமில் பணியாற்றினார். இரண்டாம் உலகப் போர் நடந்து கொண்டிருந்த வேளையில் இவர் மீது 28 ஆயிரத்திற்கும் மேற்பட்ட யூதர்களைப் போலாந்தின் சோபிபூர் நகரில் கொன்று குவித்ததாக குற்றச்சாட்டு எழுந்தது.

ஹிட்லரின் ஆணைப்படி இதைச் செய்ததாகவும் கூறப்படுகிறது. தற்போது இவர் அமெரிக்காவின் ஒஹிகோ மாகாணத்தில் மெக்கானிக்கல் என்ஜினியராகப் பணியாற்றி வருகிறார்.

ராணுவத்திலிருந்து ஒய்வு பெற்ற போதும் இவர் மீதான வழக்கு ஜேர்மனியின் முனிச் நீதிமன்றத்தில் நடந்து வந்தது. நேற்று இவ் வழக்கு விசாரணைக்கு வந்தது. விசாரணையில் இவர் போர்க் குற்றவாளி என அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து 5 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப் பட்டது




# பழங்குடி தலைவர்களை சந்தித்ததன்மூலம் உயிருடன் இருப்பதை உறுதிப்படுத்திய கடாபி



(திரிபோலி)


லிபியாவில், நேட்டோப் படைகளின் கடுமையான தாக்குதலைத் தொடர்ந்து, கடாபி பற்றிய தகவல்கள் வெளியாகாமல் இருந்தன. இந்நிலையில், திரிபோலியில் உள்ள ஒரு ஹோட்டலில், பழங்குடியினத் தலைவர்களை கடாபி சந்தித்துப் பேசியது, தொலைக்காட்சியில் ஒளிபரப்பானது.லிபியாவில், கடாபியை எதிர்த்து, கடந்த மூன்று மாதங்களாக, கிளர்ச்சியாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களுக்குஆதரவாக, நேட்டோப் படைகள் பயங்கர தாக்குதல் நடத்தி வருகின்றன. கடந்த மாதம் 30ஆம் திகதி திரிபோலியில் உள்ள கடாபியின் வீடு மீது, நேட்டொ படைகள் நடத்திய பயங்கர தாக்குதலில், கடாபியின் இளைய மகன் மற்றும் மூன்று பேரக் குழந்தைகள் பலியாயினர். இந்நிலையில், கடாபி உயிரோடு இருக்கிறாரா, இல்லையா என்பது குறித்த சர்ச்சை நீடித்து வந்தது.

சர்ச்சையை தீர்க்கும் வகையில், கடந்த புதன் கிழமை, திரிபோலியில் உள்ள ஒரு ஹோட்டலில், பழங்குடியின தலைவர்களை கடாபி சந்தித்து பேசியது, தொலைக்காட்சியில் ஒளிபரப்பானது.அல் ஜமாஹிரியா, தொலைக்காட்சியில், பழங்குடியினத் தலைவர்களுடன் கடாபி உரையாடுவது போன்ற காட்சி காட்டப்பட்டது. அப்போது, லிபியன் பழங்குடியினரின் பிரதிநிதிகள் நாம் என்பதை உலகிற்குக் காட்டுவோம்" என்று கடாபி கூறினார். பதிலுக்கு கூட்டத்தில் இடம் பெற்ற பழங்குடியினப் பெரியவர் ஒருவர், நீங்கள் வெற்றி பெறுவீர்கள்" என்று கடாபியைப் பார்த்துக் கூறினார்.

கூட்டத்தை முன்னிட்டு, ஹோட்டலின் சில அறைகள் சீல் வைக்கப்பட்டதாக செய்திகள் வெளியாயின. ஹோட்டலில், கடாபியின் தலைமையில், கூட்டம் நடைபெறுவதை அறிந்த நேட்டோ படையினர் ஹோட்டல் மீது தாக்குதல் நடத்தினர். இதில், ஹோட்டலின் ஜன்னல்கள் பழுதடைந்தன.லிபியா கிளர்ச்சியாளர்களுக்கு உதவ, அமெரிக்கா 11 லட்சத்து 50 ஆயிரம் கோடி ரூபாய் நிதியுதவி அறிவித்து இருந்தது. இதில், ஒரு பாகமாக, முதன் முதலாக, கிளர்ச்சியாளர்களுக்கு அனுப்பப்பட்ட உணவுப் பொட்டலங்கள், லிபியா வந்து சேர்ந்தன

# மின்னலில் சிக்கிய பயணிகள் விமானம் அதிர்ஷ்டவசமாகத் தப்பிப்பிழைத்தது

(லண்டன்)



லண்டன் ஹீத்ரு விமான நிலையத்தில் தரையிறங்கத் தயாராகிக் கொண்டிருந்த ஏர்பஸ் 380 ரக விமானம் திடீரென மின்னலில் சிக்கியபோதும் அதிர்ஷ்டவசமாகத் தப்பிப் பிழைத்தது.

பறந்து கொண்டிருந்த விமானத்தில் விமானியின் தலைக்குமேலால் பாய்ந்த மின்னல் விமானத்தின் உடல் பகுதியெங்கும் பரவியது.

இது அதி சக்தி மிக்க மின்சாரத்தை விமானத்தின் உடல் பகுதி முழுவதும் பாய்ச்சியுள்ளது.

துபாயில் இருந்து வந்த எமிரேட்ஸ் விமான சேவைகுச் சொந்தமான இந்த விமானம் இந்த ஆபத்தைக் கடந்து ஹீத்ரு விமான நிலையத்தில் பத்திரமாகத் தரை இறங்கியது. இந்தச் சம்பவம் இடம்பெற்றபோது விமானத்தில் 500 பயணிகளும், விமான ஊழியர்களும் இருந்துள்ளனர். தென்மேற்கு லண்டனைச் சேர்ந்த கிறிஸ் டோஸன் என்ற படப்பிடிப்பாளர் இந்தக் காட்சியை அப்படியே படம் பிடித்துள்ளார். வானத்தில் மேகக் கூட்டம் அதிகரித்ததும் மின்னல் வெட்டும காட்சியை இயல்பாகப்படம் பிடிப்பதற்காக தனது கமராவை தயார் நிலையில் வைத்திருந்தபோதே எதிர்பாராத விதமாக இந்தக் காட்சி அதில் சிக்கிக் கொண்டது.

உலகின் மிகப்பெரிய வர்த்தக சேவை விமானமான ஏர்பஸ் 380 இவ்வாறான மின்னல் தாக்குதலில் இருந்து தப்பியது ஒன்றும் பெரிய விடயமல்ல என்று விமானத் துறை நிபுணர்கள் சர்வ சாதாரணமாகத் தெரிவித்தனர்.

இவ்வாறான பாரிய மின்னலால் விமானம் தாக்கப்படுகின்ற போது, அதில் இருந்து பிறக்கும் மின்சாரத்தைக் கடத்தி செயல் இழக்கச் செய்யும் தன்மை இந்த விமானத்தின் உடல் பகுதிக்கு உள்ளது என்று அவர்கள் விளக்கமளித்துள்ளனர். இல்லையேல் இந்த விமானம் வெடித்துச் சிதறியிருக்கும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# ஒசாமாவின் இறப்பைக் கொண்டாட அமெரிக்க மக்கள் விரும்பவில்லை



(நியூயார்க்)

ஒசாமா பின்லேடன் இறப்பு கொண்டாடப் படக்கூடியதல்ல, என பெரும்பாலான அமெரிக்கர்கள் தெரிவித்துள்ளனர். அமெரிக்காவின் இரட்டைக்கோபுர தகர்ப்புக்கு காரணமான ஒசாமா பின்லேடன், பாகிஸ்தானின் அபோதாபாத்தில் சமீபத்தில் அமெரிக்க அதிரடி படையினரால் கொல்லப்பட்டார். இந்த செய்தி கேட்டு அமெரிக்கர்கள் பலர் பட்டாசு வெடித்து மகிழ்ச்சியடைந்தனர்.இது குறித்து, மத ஆராய்ச்சி மையம் ஒன்று அமெரிக்க மக்களிடையே கருத்து கணிப்பு நடத்தியது. எதிரி கொல்லப்பட்டாலும் கூட அது குறித்து மகிழ்ச்சியடையக்கூடாது, என பைபிளில் கூறப்பட்டிருப்பதால், ஒசாமா பின்லேடனின் இறப்பு கொண்டாடப்படக் கூடியதல்ல என, 82 சதவீத அமெரிக்கர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.



மியான்மர் நாட்டிற்கு சென்றுள்ள ஐநா.,சபையின் பொதுச் செயலாளர் பான்கி மூனின் சிறப்பு பிரதிநி விஜய் நம்பியார் (வலது) தலைநகர் யாங்கூனில் எதிர்கட்சி தலைவர் ஆங்சான் சூயியை சந்தித்தார்.

# அமெரிக்காவிற்கு ஆதரவு

(மொஸ்கோ)

அமெரிக்காவின் எத்தகைய தீர்மானத்திற்கும் நாங்கள் ஆதரவு தருகின்றோம் என்று ரஷ்யா கூறியுள்ளது.

ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ் ரஷ்ய பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது: கடந்த 2001ல் இரட்டைக் கோபுரம் தகர்க்கப்பட்ட போது ஐ.நா பாதுகாப்பு கவுன்சில் இயற்றிய அமெரிக்கா தன்னை பாதுகாத்து கொள்ள எந்த நடவடிக்கையும் எடுக்கலாம் என்ற தீர்மானத்துக்கு நாங்கள் ஆதரவு அளித்தோம்.

அதன்படி ஒசாமாவைக் கொல்ல அமெரிக்காவுக்கு உரிமை உண்டு. ஆனால் அமெரிக்கா, பாகிஸ்தானில் உள்ள அபோதாபாத்தில் நடத்திய அதிரடி நடவடிக்கைகள் குறித்து அமெரிக்கா விளக்க வேண்டும். பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கை சர்வதேச சட்டத்துக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும் என்றார்.

# உலக உணவுத்திட்டத்திற்கு சாத்தியப்படக்கூடிய திட்டங்களையே பிரதேச செயலர்கள் வகுக்க வேண்டும்

## உலக உணவுத்திட்ட மீளாய்வுக் கூட்டத்தில் அரச அதிபர்

(யாழ்ப்பாணம்)

உலக உணவுத் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் 204 உணவிற்கான வேலைத் திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டி ருந்த போதும் அவற்றில் 161 வேலைத் திட்டங்கள் மட்டுமே செயற்பட்டுள்ளதாக நேற்றுமுன்தினம் யாழ்.செயலகத்தில் நடைபெற்ற உலக உணவுத்திட்ட மீளா ய்வு மாநாட்டில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



இவ்வாறான உணவுக்கான வேலைத் திட்டங்களின் கீழ் யாழ்.மாவட்டப் பாட சாலைகளில் சமையலறைகள் அமைப்ப தற்கென 99 பாடசாலைகளுக்கு அனுமதி கிடைக்கப் பெற்றிருந்தது. இதில் 92 பாடசாலைகளில் அவ்வாறான திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருப்பதாகவும் மிகுதி 7 பாடசாலைகள் அவற்றை நிறை வேற்றி முடிக்கவில்லை எனவும் சுட்டிக் காட்டப்பட்டது.

இதேவேளை 73 சிறிய வீதித்திருத்த வேலைக்கென உலக உணவுத்திட்டத் தினால் அனுமதிக்கப்பட்டிருந்த போதும் அதில் 42 வேலைகளே முடிக்கப்பட்டுள் ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

இதேபோன்று ஏனைய உணவுக்கான வேலைத்திட்டங்களில் சிலவும் முடிக் கப்படவில்லை. இது குறித்து சம்பந்தப் பட்ட பிரதேச செயலகங்களால் கருத் துத் தெரிவிக்கப்பட்டபோது, பாடசாலை களில் சமையலறை அமைப்பதற்கான 7 திட்டங்களும் அவற்றை அமைப்பதற் கான காணி தொடர்பான பிரச்சினைகள் காரணமாகவும் சிறிய வீதித் திருத்தம் தொடர்பாகவும் ஊரிமணல் பெறுவதில் உள்ள நடைமுறைச் சிக்கல்கள் காரண மாகவும் கடந்த மழை காலத்தின்போது ஏற்பட்ட நடைமுறைச் சிக்கல் தொடர்பா கவும் நடைமுறைப்படுத்தப்பட முடிய வில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

இவை தொடர்பாக யாழ்.அரச அதி பர் திருமதி இமெல்டா சுகுமார் கருத் துத் தெரிவிக்கையில்-

நடைமுறைச் சிக்கல்கள் உள்ள திட் டங்களை அனுமதிக்காக அனுப்பிவைக் காமல், சாத்தியமான திட்டங்களை உலக உணவுத்திட்டத்திற்கு அனுப்பிவைக்கும் படி சம்பந்தப்பட்ட பிரதேச செயலகங் களைக் கேட்டுக்கொண்டார்.

இதன் மூலமாக உலக உணவுத்திட்டத் தின் நிவாரணப் பணிகள் மக்களுக்கு முழுமையாகக் கிடைக்கக் கூடியதாக இருக்கும் எனவும் அவர் இதன்போது தெரிவித்தார். (பா)

# கல்விசார் ஊழியர்கள் விபரம் திரட்டப்படுகிறது

(அச்சுவேலி)

கல்வி முகாமைத்துவ தகவல் முறைமை, பாடசாலைக் கல்விசார் ஊழியர் விபரங்கள் கல்வித்திணைக்களத்தினால் சேகரிக்கப்பட்டு வருகின்றது.

இதற்கமைய வலயக்கல்வி அலுவலகத்தினூடாக அதற்கான "A" படிவம் பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டு, அதனூடாகப் பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர் உள்ளிட்ட கல்விசார் ஊழியர் விபரங்கள் திரட்டப்பட்டு வருகின்றது.

இதில் அவர்களின் தனிப்பட்ட குடும்ப விபரங்கள், சேவை விபரங்கள், பட்டப்படிப்பு விபரங்கள், பதவிநிலை விபரங்கள் எனப் பல்வேறுபட்ட விடயங்கள் பற்றிய தகவல்கள் திரட்டப்பட்டு வருகின்றது. (03)

# பதவி உயர்வு



(ஆனைக்கோட்டை)

வலிகாமம் கல்வி வலயத்தில ஆரம்பக் கல்வி சேவைக்கால ஆசி ரிய ஆலோசகரா கக் கடமையாற்றி வந்த திருமதி றூபா உதயரத் தினம், ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளராகப் பதவியுயர்வு பெற்றுள் ளார்.

இப்பதவி உயர்வு வடமாகாணக் கல் வித் திணைக்களத்தினால் இம்மாதம் 9ஆம் திகதி முதல் வழங்கப் பெற்றுள ளது.

இவ்வலயத்தில் நீண்டகாலமாக ஆரம் பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாள ராகச் சேவையாற்றிய சி. மாதவகுமார ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து இந்த நியமனம் வழங்கப் பெற்றுள்ளது. (06)

# விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்

(ஆனைக்கோட்டை)

சண்டிலிப்பாய் சுகாதாரப் பிரிவின ரால் அப்பகுதியிலுள்ள நாய்களுக்கு விலங்கு விசர்நோய்த் தடுப்பூசி ஏற்றப் பட்டு வருகிறது.

பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் வீதி வழியாக ஒலிபெருக்கி மூலம் அறிவித் ததைத் தொடர்ந்து, குறித்த பிரதேசங்க ளில் விதியோரமாக இந்தத் தடுப்பூசி ஏற் றும் நடவடிக்கை இடம்பெற்று வருகி றது.

பொதுமக்கள் தங்களுடைய வளர்ப்பு நாய் களுக்கு இத்தடுப்பூசியை ஏற்றுமாறு சுகா தாரப் பிரிவினர் அறிவித்துள்ளனர். (104)

# பருத்தித்துறை கோட்டமட்ட ரீதியான ஆங்கில தினப் போட்டி முடிவுகள்

## ஆரம்பப் பிரிவு முடிவுகள்

(பருத்தித்துறை)

பருத்தித்துறைக்கோட்ட மட்ட ஆங் கிலதினப் போட்டியின் ஆரம்பப் பிரிவு முடிவுகள் வடமராட்சி வலய ஆங்கிலப் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.சுந் தரமூர்த்தியினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

**வாசிப்பு - தரம் 03**

செல்வி பு.மாதுஷா (வடஇந்து மக ளிர் கல்லூரி), செல்வி க.அம்சாயினி (வட இந்து மகளிர் கல்லூரி), செல்வன் தி.ஜென கன் (புற்றளை ம.வி).

**தரம் - 04**

சி.சாதனன் (தொண்டைமானாறு வீர கத்தி ம.வி), ந.பமிலா (தும்பளை சிவப் பிரகாச ம.வி), தி.பானுஜா (தும்பளை சிவ பிரகாச ம.வி).

**தரம் - 05**

க.ரஜிகரசர்மா (புற்றளை ம.வி), ஆர். சுகந்தன் (தும்பளை சிவப்பிரகாச ம.வி), ஏ.நிலக்ஷன் (துன்னாலை மேற்கு மெ. மி.த.க.).

**பேச்சு - தரம் 03**

ந.நிருபா (வடஇந்து மகளிர் கல்லூரி), எஸ்.மஞ்சலிகா (அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலை), ஜே.ஜதீசன் (தும்பளை சிவப்பிரகாச ம.வி).

**தரம் - 04**

ரி.தனருபா (தும்பளை சிவப்பிரகாச ம.வி), ஜெ.சர்மினி (வடஇந்து மகளிர் கல்லூரி), க.விஷ்ணுயி (மேலைப் புலோலி சைவப்பிரகாச ம.வி).

**தரம் - 05**

வி.ஜபஸ்திகா (வடஇந்து மகளிர் கல்லூரி), செ.கம்சாயினி (வடஇந்து மக ளிர் கல்லூரி), இ.சாகித்தியா (பரு.சித்தி விநாயகர் வித்தியாசாலை).

**தரம் -06**

ஜெ.தமிழ்ப்பிரியா (வல்வை மகளிர் வித்தியாலயம்), ரி.ரேவதி (வல்வை மகளிர் வித்தியாலயம்), எஸ்.துசியா (பொலிகண்டி எச்.ரி.எம்.எஸ்).

**தரம் - 07**

பி.அன்ரன் டல்சன் (தும்பளை எஸ். எம்.வி), ரி.மேரிரோணி (சென்.தோமஸ் ஆர்.சி.ஜி.எஸ்), எஸ்.ரி.மேரி வினியா (பொலிகண்டி எச்.ரி.எம்.எஸ்).

**தரம் - 08**

ஆர்.அக்ஷனா (தும்பளை எஸ்.எம். வி), எஸ்.விதுஷா (தும்பளை எஸ்.எம். வி), ஜெ.நிலோஜினி (சென்.தோமஸ் ஆர்.சி.ஜி.எஸ்).

**தரம் - 09**

என்.பிரியா (தொண்டைமானாறு வி. எம்.வி), ஆர்.கிருஷாயினி (தொண்டை மானாறு வி.எம்.வி), எஸ்.துஷியானி (தும் பளை எஸ்.எம்.வி), எல்.ரி.மேரி விவே ஜினி (சென்.தோமஸ் ஆர்.சி.ஜி.எஸ்) - (இருவர் மூன்றாமிடம்).

**தரம் - 10**

ஏ.பிரியங்கா (தும்பளை எஸ்.எம்.வி), ஜெ.சிந்தியா (தொண்டைமானாறு வி. எம்.வி), எஸ்.நிவேதா (வல்வை மகளிர் வித்தி).

**தரம் - 11**

எஸ்.மேரி நிரோசிகா (சென்.தோமஸ் ஆர்.சி.ஜி.எஸ்), ஆர்.பிரியா (வல்வை மக ளிர் வித்தி), ஆர்.கிருஸ்ரியன் (பொலி கண்டி எச்.ரி.எம்.எஸ்).

**பார்த்தெழுதுதல் தரம் - 03**

த.தேவசுதன் (தும்பளை சிவப்பிரகாச ம.வி), பா.சசிகா (மேலைப்புலோலி சைவப்பிரகாச ம.வி), த.தாரணி (வல்வை மகளிர் ம.வி).

**தரம் - 04**

கே.சானுஜன் (தும்பசிட்டி மெ.மி.த.க. பாடசாலை), ஆ.பாலமனுஷா (மேலைப் புலோலி சைவப்பிரகாச ம.வி), சி.அபி னஜா (வடஇந்து மகளிர் கல்லூரி).

**தரம் 05**

ம.லலிதாம்பிகை (புலோலி மெ.மி. த.க.பா), செ.தேவகி (வடஇந்து மகளிர் கல்லூரி), நா.சஜந்தினி (வடஇந்து மக ளிர் கல்லூரி).

**உறுப்பெழுத்து - தரம் 06**

வி.தர்சிகா (தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயம்), ஐ.ஜுக்சியா (புற்றளை மகா வித்தியாலயம்), ஐ.இந்துசா (வல் வை மகளிர் மகா வித்தியாலயம்).

**தரம் - 07**

பி.கௌசல்யா (பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தி), என்டினோஜா (வல்வை மகளிர் வித்தி), எஸ்.பிரியந்திரா (கொற் றாவத்தை ஏ.எம்.ரி.எம்.எஸ்).

**தரம் - 08**

ரி.சரண்யா (கொற்றாவத்தை ஏ.எம். ரி.எம்.எஸ்), ஆர்.சஜின் (புலோலி எம்.எம். ரி.எம்.எஸ்), எஸ்.நிவர்த்திகா (கொற்றா வத்தை ஏ.எம்.ரி.எம்.எஸ்).

**தரம் - 09**

வி.வேணுஷா (கொற்றாவத்தை ஏ. எம்.ரி.எம்.எஸ்), எஸ்.லக்சனா (தொண்டை மானாறு வி.எம்.வி.), கே.ரகுகரன் (பருத் தித்துறை சித்தி விநாயகர் வித்தி).

**தரம் - 10**

எஸ்.விதுசன் (தும்பளை சிவப்பிர காச வித்தி), கே.கிருஷாளினி (தும் பளை சிவப்பிரகாச வித்தி), ஜெசிந்துஜா (தொண்டைமானாறு வி.எம்.வி.).

**தரம் - 11**

ஜ.மௌசிகா (பொலிகண்டி ஏச்.ரி.எம். எஸ்), வி.ரேவதி (தும்பளை சிவப்பிரகாச வித்தி), வி.துஷியா (புலோலி எம்.எம்.ரி. எம்.எஸ்).

**சொல்வதெழுதுதல் தரம் - 06**

எஸ்.நிரந்தரிக்கா (வல்வை மகளிர் வித்தி), எஸ்.ஸ்ரீப்பிரகாஷ் (வல்வை சிவ குரு வித்தி), ஜெபிதுஷா (சென்தோமஸ் ஆர்.சி.ஜி.எஸ்).

**தரம் - 07**

எஸ்.லைவனிகா (வல்வை மகளிர் வித்தி), பி.அன்ரன் டல்சன் (தும்பளை எஸ்.எம்.வி), பி.பாஸ்கரன் (வல்வை சிவ குரு வித்தி).

**தரம் - 08**

ஜெ.தனுஜா (தும்பளை எஸ்.எம்.வி), ரி.மதுஷா (வல்வை மகளிர் வித்தி).

**தரம் - 09**

எஸ்.பிரியா (தொண்டைமானாறு வி. எம்.வி), எஸ்.கிருஸ்நயனி (தொண்டை மானாறு வி.எம்.வி), எஸ்.தனுசா (கொற் றாவத்தை ஏ.எம்.ரி.எம்.எஸ்).

**தரம் - 10**

எஸ்.விதுஷன் (தும்பளை எஸ்.எம். வி), கே.கேஷவி (வல்வை சிவகுரு வித்தி), கே.கிருஷாலினி (தும்பளை எஸ்.எம்.வி).

**தரம் - 11**

ஆர்.லக்சியா (வல்வை மகளிர் வித்தி), ஏ.அனிஸ்ரினி (சென்.தோமஸ் ஆர்.சி.ஜி.எஸ்), கே.சுவஸ்திகா (புலோலி எம்.எம்.ரி.எம்.எஸ்), என்.நிஷாந்தினி (தும் பளை எஸ்.எம்.வி) -(இருவர் மூன்றா மிடம்).

**கட்டுரை வரைதல் தரம் - 07**

வி.அருள்தாஸ் (கரணவாய் எம்.வி).

**தரம் - 08**

வி.சாளினி (கரணவாய் எம்.வி).

**தரம் - 09**

எஸ்.துவாரகன் (கம்பர்மலை வித்தி), கே.சுதர்சன் (கரணவாய் எம்.வி), வை. நிருஜா (தேவரையாளி இந்துக் கல் லூரி).

**தரம் - 10**

எம்.பபிஷாளினி, எஸ்.சேன்தராஜா

**தரம் - 11**

எஸ்.கீர்த்னா (இமையாணன் ஜி.ரி. எம்.எஸ்), கே.கிருஷாந்தி (தேவரையாளி இந்துக் கல்லூரி), எஸ்.சியாமளா (வல் வெட்டித்துறை இந்து ரி.எம்.எஸ்).

முதல் இரண்டு இடங்களைப் பெற்ற போட்டியாளர்கள் வலயமட்டத்தில் பங்கு பற்றலாம் என வடமராட்சி வலயக் கல் விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறி வித்துள்ளார். (109)

# புன்னாலைக்கட்டுவன் மில் வீதி மீண்டும் மக்கள் பாவனைக்கு

(யாழ்ப்பாணம்)

முப்பது வருடங்களின் பின்பு யாழ்ப்பாணம் புன்னாலைக்கட்டுவன் மில் வீதி ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் அவர்களினால் மக்களின் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டது.

சுமார் ஐந்து கிலோமீற்றர் நீளமான இவ்வீதி முப்பது வருடங்களாக பயன்படுத்தப்படாமல் இருந்தது. எனவே வீதியினை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்த நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் அவர்கள் உடனடியாக புனரமைத்து கொடுப்பதற்கு சுன்னாகம் பிரதேச சபையினருக்கு பணிப்புரை விடுத்தார்.

இவ்வீதியை தங்களின் பாவனைக்கு பெற்றுத்தந்து தங்களின் போக்குவரத்து சிரமங்களை தீர்த்து வைத்த பாராளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் அவர்களுக்கு பிரதேச மக்கள் அமைப்பினர் தங்களுடைய மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டனர்.

இந்நிகழ்வில் வடக்கு மாகாண உள்ளூராட்சி மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் விஜயலட்சுமி, சுன்னாகம் பிரதேச சபை செயலாளர் சுலோஜனா, பிரதேச இராணுவ பொறுப்பதிகாரி மேஜர் குமார, ஈ.பி.டி.பி.யின் வலிகாம பிரதேச அமைப்பாளர் ஜீவன், ஈ.பி.டி.பி.யின் வலி. தெற்கு பிரதேச அமைப்பாளர் அன்பு மற்றும் மக்கள் அமைப்பு பிரதிநிதிகள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# இலங்கையில் சேலைன் உற்பத்தி; ஈரான் நிதியுதவி அளிக்கிறது

(கொழும்பு)

இலங்கையில் முதலாவது சேலைன் மருந்து உற்பத்தித் தொழிற்சாலை ஈரான் இஸ்லாமிய குடியரசின் ஒத்துழைப்போடு நிர்மாணிக்கப்படவிருக்கின்றது.


இலங்கை அரசாங்க வைத்தியசாலைகளுக்குத் தேவையான சேலைன் மருந்துப் பொருட்களை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்து கொள்ளும் நோக்கிலேயே இத்தொழிற்சாலை அமைக்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவை கொழும்பில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்திய ஈரானின் இலங்கைத் தூதுவர் மஹ்மூத் ரஹீமி கொஷ்ருஜி இலங்கையில் சேலைன் மருந்துப் போத்தல் உற்பத்தி தொழிற்சாலையை நிர்மாணிப்பதற்கு பூரண ஒத்துழைப்பு நல்கப்படும் என்று உறுதியளித்தார்.

இலங்கை அரசாங்க ஆஸ்பத்திரிகளின் பாவனைக்கென வருடாந்தம் 83 இலட்சத்து 26 ஆயிரத்து 535 சேலைன் போத்தல்கள் கொள்வனவு செய்யப்படுகின்றன. இதற்கென 40 கோடியே 50 இலட்சம் ரூபா செலவிடப்படுவதாக சுகாதார அமைச்சர் இச்சமயம் சுட்டிக்காட்டினார்.

இச்சந்திப்பின் போது ஈரானிலிருந்து மருந்துப் பொருட்களை கொள்வனவு செய்வது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

# பஞ்சாப் அணி வெற்றி



(இந்தூர்)

நேற்று இந்தூரில் நடந்த இந்தியன் பிரிமியர் லீக் போட்டித் தொடரில் கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணி 6 விக்கெட்டுக்களால் கொச்சி டஸ்கர்ஸ் அணியை வெற்றி கொண்டது.

முன்னதாக 20 ஓவர்களில் கொச்சி டஸ்கர்ஸ் அணி 7 விக்கெட் இழப்பிற்கு 178 ரன்களைப் பெற்றது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணி 4 விக்கெட் இழப்பிற்கு 181 ரன்களைப் பெற்று வெற்றியீட்டியது.

ஆட்டநாயகனாக தினேஷ் கார்த்திக் தெரிவானார்.

# சிறுவர்களுக்கு ஆயுதப் பயிற்சி; இனியபாரதி மீது நடவடிக்கை

(கொழும்பு)

சிறுவர்களைக் கடத்திச் சென்று ஆயுதப் பயிற்சியளித்தல் தொடர்பில் ஐ.நா. அறிக்கை மூலம் குற்றம்சாட்டப்பட்டுள்ள இனியபாரதிக்கு எதிராக வெளிநாட்டமைச்சு விசாரணைகளை முன்னெடுக்கவுள்ளது.

2006 தொடக்கம் 2009 ஆம் ஆண்டுவரையான காலப்பகுதியில் அவர் சிறுவர்களைக் கடத்திச் சென்று ஆயுதப்பயிற்சியளி திருப்பதாக சிறுவர்கள் மற்றும் ஆயுதப் போராட்ட விவகாரத்துக்கான ஐக்கிய நாடுகள் விசேட பிரதிநிதி ராதிகா குமாரசுவாமி தனது அறிக்கையில் குற்றம் சாட்டியிருந்தார்.

அக்குற்றச்சாட்டுகள் தொடர்பில் எமது கடப்பாட்டினை நிறைவு செய்யும் வகையில் அவருக்கெதிரான விசாரணைகளை முன்னெடுக்கவுள்ளோம் என்று வெளிநாட்டமைச்சின் அதிகாரியொருவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

அதேநேரம் அவ்வாறான குற்றச்சாட்டுகள் அல்லது முறைப்பாடுகள் எதுவும் இதுவரை தமக்குக் கிடைக்கப் பெறவில்லை என்று சிறுவர் பாதுகாப்பு மற்றும் மகளிர் நலன் பேணல் அதிகார சபையின் தலைவி அனோமா திசாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள இனியபாரதி, தனது கடந்த கால செயற்பாடுகள் அனைத்தும் தற்போதைக்குக் கைவிடப்பட்டுள்ளதாகவும், அவை தொடர்பில் எந்தவொரு விசாரணையையும் எதிர்கொள்ள தான் தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

## மானிப்பாயில்....

பதிவு, தேசிய அடையாள அட்டை இல்லாதவர்களுக்கு உரிய ஆவணங்களைப் பெற்றுக்கொடுத்தல், சிறு குற்றங்கள் தொடர்பான முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்ளுதல், பொலிஸ் அதிகாரிகளின் ஆலோசனைகள் போன்ற வேவைகள் வழங்கப்படும்.

அடையாள அட்டை தொடர்பான முறைப்பாட்டார்கள் கலர் படத்துடனும், ஏனையவர்கள் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், குடும்ப அட்டை, அடையாள அட்டை உள்ளிட்ட அனைத்து ஆவணங்களுடனும் சமுகமளிக்குமாறும், இதன்மூலம் உடனடித் தீர்வினைப் பெற்றுக்கொள்ளமுடியும் எனவும் மானிப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார்.

கரப்பந்தாட்டம், விவாத அரங்கு, பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பான விழிப்புணர்வு போன்றனவும் இடம்பெறவுள்ளது.

## அ.தி.மு.க அமோக....

நடத்த மூத்த அதிகாரிகள் இன்று ஜெயலலிதாவை அவரது இல்லத்தில் சந்தித்து ஆலோசனை நடத்தினர்.

அப்போது 15ஆம் திகதி ஆளுநர் மாளிகையிலேயே பதவியேற்பு விழாவுக்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு ஜெயலலிதா கேட்டுக் கொண்டார்.

இதையடுத்து அன்றைய தினம் சென்னை கிண்டி ராஜ்பவனில் ஜெயலலிதா பதவிப் பிரமாணம் எடுத்துக்கொள்ளும் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன. அவருக்கு ஆளுநர் சுர்ஜித் சிங் பர்னாலா பதவிப் பிரமாணம் செய்துவைக்கிறார். ஜெயலலிதாவுடன் அமைச்சர்கள் சிலரும் பதவியேற்பர் என்று தெரிகிறது. மே 16ஆம் திகதி தற்காலிக சபாநாயகர் தேர்வும், அன்றைய தினமே எம்.எல்.ஏக்கள் பதவியேற்பும் நடக்கும் என்று தெரிகிறது.

நள்ளிரவு கிடைத்த தகவல்களின்படி அதிமுக தனியாகவே சுமர் 151 தொகுதிகளில் வெற்றிபெற்றுள்ளது.

தனியாக ஆட்சி அமைக்க 117 தொகுதிகள் மட்டுமே தேவை என்பதால், அ.தி.மு.க. தனியாக ஆட்சி அமைக்கும் வாய்ப்புக்கள் தோன்றியுள்ளது.

அதேவேளை தமிழகத் தேர்தல்களில் அ.தி.மு.க. பெரும் வெற்றி பெற்றுள்ளதற்கு வாக்காளர்களுக்கு அ.தி.மு.க. தலைவர் ஜெயலலிதா நன்றி தெரிவித்துள்ளார்.

தேர்தல் ஆணையம் இந்த தேர்தலை சிறப்பாக நடத்தியதாகவும் அவர் பாராட்டு தெரிவித்துள்ளார்.

அ.தி.மு.க.வின் தேர்தல் அறிக்கையில் கூறப்பட்டுள்ள விடயங்களை அடுத்த 18 மாதங்களில் நடைமுறைப்படுத்துவதற்கு தாம் முன்னுரிமை தரப்போவதாகக் கூறிய அவர், தி.மு.க ஆட்சி தமிழகத்தின் நிதி நிலையை மிக மோசமான சூழலில் விட்டுச் சென்றிருப்பதாகவும் கூறினார்.

சட்டம் ஒழுங்கை நிலை நாட்டுவது தனது முதல் நோக்கமாக இருக்கும் என்றும் அவர் கூறினார். இடதுசாரிகளுடனான கூட்டணி தேசிய அளவில் தொடருமா என்று கேட்டபோது தொடரும் என்று நம்புகிறேன் என்று அவர் பதிலளித்தார்.

தேர்தல் முடிவுகள் வெளிவரத் துவங்கியவுடன், சென்னையில் போயஸ் தோட்டத்தில் உள்ள அதிமுக பொதுச் செயலர் ஜெயலலிதா வீட்டின் முன்பு அதிமுக தொண்டர்கள் பட்டாசு வெடித்து, இனிப்பு வழங்கி கொண்டாடி வருகிறார்கள்.

அ.தி.மு.க.வோடு கூட்டணி அமைத்துப் போட்டியிட்ட விஜயகாந்தின் தே.மு.தி.க நல்ல வெற்றிகளைப் பெற்றுள்ளது. 40 இடங்களில் போட்டியிட்ட அக்கட்சி 29 இடங்களை வெல்லும் நிலையில் உள்ளது.

## களுவாஞ்சிக்குடியில்...

இளங்குமரன் (வயது 35) என்ற வர்த்தகரின் வீட்டில் வைத்து இத்துப்பாக்கிச் சூட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

படுகாயமடைந்த இளங்குமரன் களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி நேற்று இரவு மரணமானதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## மாத இறுதியில்...

உயர்மட்டத் தூதுக்குழு நேற்று இலங்கை வருவதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

இருப்பினும், இந்த விஜயம் 26ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக அறியமுடிகிறது. இச்செய்தி தொடர்பாக இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் தொடர்புகொண்டு கேட்டபோது, தூதுக்குழுவின் இலங்கை விஜயம் தொடர்பில் இன்னமும் உத்தியோகபூர்வமான தகவல்கள் தங்களுக்கு கிடைக்கவில்லை என்று குறிப்பிட்டனர்.

## கருணாநிதி...

மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்துடன் ஆட்சியமைக்க காத்திருக்கிறார் அ.தி.மு.க. தலைவி ஜெயலலிதா. இந்நிலையில் தனது தோல்வியை ஒப்புக்கொண்டு தனதும் தன் அமைச்சரவையினதும் ராஜினாமாக் கடிதங்களை நேற்று தமிழக ஆளுநரிடம் நேரில் சென்று ஒப்படைத்திருக்கிறார் கருணாநிதி.

பெருவெற்றிகண்ட செல்வி ஜெயலலிதா நாளை தமிழக முதல்வராக பதவியேற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மனைப்பொருளாதார....

சுகுமார் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதிகளாகக் கலந்துகொண்ட யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத்தலைவர்களான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும், ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறியும் இத்திட்டத்தின் நோக்கங்கள் குறித்து அலுவலர்களுக்குத் தெளிவுபடுத்தினர்.


அங்கு சிறப்புரையாற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அலுவலர்கள் பயனாளிகளைச் சரியான முறையில் அடையாளம் காணவேண்டும் எனக் கேட்டுக்கொண்டதுடன், இத்திட்டம் விரைவில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கப்படவுள்ளது எனத் தெரிவித்தார்.

இதேவேளை, யாழ். மாவட்டம் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டமாக உள்ளதால், தாம் அமைச்சர் பசில் ராஜபக்ஷவுடன் தொடர்புகொண்டு கலந்துரையாடியதையடுத்து யாழ். மாவட்டத்தில் விசேட திட்டமாக இவ்வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாகத் தெரிவித்ததுடன், இத்திட்டத்தில் முதற்கட்டமாக 5 ஆயிரம் வரையான குடும்பங்கள் தெரிவுசெய்யப்படவுள்ளதாகவும், இத்தெரிவு தொடர்பாக விபரங்கள் அடங்கிய பட்டியல் ஒன்று பிரதேச செயலாளர்களூடாக அலுவலர்களுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளதாகக் குறிப்பிட்டார்.


இம்மனைப்பொருளாதார வேலைத்திட்டத்தில் தெரிவுசெய்யப்படவுள்ள குடும்பங்கள் 10 ஆயிரம் ரூபா முதல் 20 ஆயிரம் ரூபா வரையில் விவசாய உள்ளீடுகள் மற்றும் உபகரணங்களைப் பெற்று அவர்களின் குடும்பப் பொருளாதாரத்தை விருத்தி செய்யவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

நேற்றைய கூட்டத்தில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி, வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை ஆகியோரும் இத்திட்டம் தொடர்பாக சிறப்புரையாற்றினர்.

இக்கூட்டத்தில் யாழ் மாநகரசபை மேயர் ப.யோகேஸ்வரி, வடமாகாண சபையின் பிரதம செயலாளர் சிவசுவாமி மற்றும் சபை அதிகாரிகள் உட்பட பிரதேச செயலாளர்கள், கிராம அலுவலர்கள், சமுர்த்தி அலுவலர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (பா,26)



# சேலை அலங்காரப் பயிற்சி நிலையம் சங்கானையில் அங்குரார்ப்பணம்



(சங்கானை)

சங்கானையில் யாழ். மாவட்ட பெண்களுக்கான சுயதொழில் பயிற்சித் திட்ட அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

சாறி வடிவமைப்பு மற்றும் பற்றிக் வடிவமைப்பு பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படுவதுடன், இதனூடாக சாறி வடிவமைப்பாளர்கள் 200 பேருக்கும், பற்றிக் வடிவமைப்பாளர்கள் 50 பேருக்கும் பயிற்சி நெறிகள் வழங்கப்படவுள்ளன.

சங்கானையில் மட்டுமல்லாமல், அச்சுவேலி கைத்தொழில் பேட்டை, கைதடியில் பனை அபிவிருத்தி ஆராய்ச்சி நிலையம், அல்லாரையில் தும்புத் தொழிற்சாலை, வதிரியில் தோற் பொருள் உற்பத்தி தொழிற்சாலை போன்ற தொழில்துறை நிறுவனங்களை அமைத்து மக்களது வாழ்வாதாரத் திட்டத்தை மேம்படுத்திக் கொடுப்பதில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மிகுந்த அக்கறை கொண்டுள்ளார். அதேவேளை ஆனையிறவு உப்பளத்தையும் வெகு விரைவில் இயக்குவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறார் என பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி தெரிவித்தார்.

நிகழ்வில், தேசிய வடிவமைப்பு நிலையத்தின் தலைவர் புத்தி கீர்த்திசேன சிறப்புரையாற்றும் போது, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் வழிகாட்டுதலுக்கு அமையவே இந்தப் பயிற்சிக் கூடம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் இந்தியாவிலிருந்து திருமணச் சாறிகளை இறக்குமதி செய்யாமல் உள்ளூரிலேயே இந்தியச் சாறிகளுக்கு நிகரான, தரமான சாறிகளை உற்பத்தி செய்ய முடியும் என்பதுடன், சிறந்தொரு வேலை வாய்ப்பாகவும் சிறந்த வாழ்வாதாரத் திட்டமாகவும் இதனைக் கொள்ள வேண்டும்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களினதும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் நோக்கம் இங்குள்ள மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த வேண்டும் என்பதே. அதற்கு நீங்கள் எல்லோரும் பூரண ஒத்துழைப்பையும் ஒத்தாசையையும் வழங்க எனக் கேட்டுக்கொண்டார்.

ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் உரையாற்றும் போது, எமது பிரதேசத்தில் நீண்ட காலப் பிரச்சினைகளாக இருந்து வரும் இளைய தலைமுறையினருக்கான வேலையில்லாப் பிரச்சினைகளுக்கு இவ்வாறான செயற்திட்டங்களின் மூலம் தீர்வு காணப்பட்டு வருவதோடு, அவர்களின் குடும்ப பொருளாதாரமும் மேம்பாடடைகிறது. மேலும் யாழ். மாவட்டத்தின் ஏனைய பிரதேசங்களிலும் எதிர்காலத்தில் இவ்வாறான சுயதொழிற் பயிற்சி செயற்திட்டம் ஆரம்பிக்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

சிறப்புரைகளை இஷாரா காமன்ஸ் உரிமையாளர் திருமதி இஷாரா ஹரிச்சந்திர, பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பசுபதி சீவரட்ணம் ஆகியோர் நிகழ்த்தினர். பிரதம விருந்தினர் உரையை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நிகழ்த்தினார்.

சங்கானையில் திறந்து வைக்கப்பட்ட மேற்படி பயிற்சிநெறிகளை பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் அனுசரணையுடன் தேசிய அருங்கலைகள் பேரவை, மகேஸ்வரி நிதியம், இஷாரா பெஷன் காமன்ஸ் ஆகியன இணைந்து நடைமுறைப்படுத்தவுள்ளன. பயிற்சியாளர்களின் போக்குவரத்திற்காக நாளொன்றுக்கு 100 ரூபா வழங்கப்படவுள்ளதுடன் 3 மாதகால பயிற்சியை நிறைவு செய்பவர்களுக்கு உடனடி வேலை வாய்ப்பும் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) யாழ் மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, பிரதேச செயலர் திருமதி பாபு உள்ளிட்ட துறைசார்ந்த திணைக்களங் களின் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் எனப் பலதரப்பட்டோரும் கலந்து கொண்டனர்.

### பொது மன்னிப்பு; கைதிகள் விடுதலை

வெசாக் தினத்தை முன்னிட்டு, ஜனாதிபதியின் பொது மன்னிப்பு அடிப்படையில், இரண்டாயிரத்து 600 சிறைக் கைதிகள் விடுவிக்கப்படவுள்ளனர்.

இதனை சிறைச்சாலைகள் அமைச்சின் செயலாளர் ஏ.திஸாநாயக்க தெரிவித்துள்ளார். இதற்காக ஜனாதிபதியின் அனுமதி கிடைத்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை, சிறைச்சாலைகளில் அறநெறிப் பாடசாலைகளை ஆரம்பிக்கும் திட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நிதி மோசடி; தம்பதியர் கைது

(கொழும்பு)

பிரமிட் முறையிலான நிதி சேகரிப்பில் 3 கோடி ரூபாவினை மோசடி செய்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் இளம் தம்பதியினர் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சம்பவமொன்று புத்தளம், மகாகும்புக்கடவல பகுதியில் இடம்பெற்றுள்ளது.

மேற்படி பிரமிட் முறையில் சுமார் 400 பேரிடம் இவர்கள் இந்த நிதியினைச் சேகரித்து மோசடி செய்துள்ளார்கள் என்று பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

புத்தளம், மகாகும்புக்கடவல, ஆனமடுவ, வனாத்தவில்லுவ போன்ற பிரதேசங்களைச் சேர்ந்தவர்களிடமிருந்தே இவர்கள் இந்த நிதியினைச் சேகரித்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் நேற்றுப் புத்தளம் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதை அடுத்து அவர்களிருவரையும் எதிர்வரும் 25ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் புத்தளம் பொலிஸ் குற்றத்தடுப்பு விசாரணைப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# செல்வி. மகேஸ்வரி வேலாயுதம் மூன்றாம் ஆம் ஆண்டு நினைவுகள்



(யாழ்ப்பாணம்)

பிரபல சட்டத்தரணியும் மனித உரிமைகள் ஆர்வலரும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா அவர்களின் ஆலோசகருமான செல்வி. மகேஸ்வரி வேலாயுதம் அவர்களின் மூன்றாம் ஆண்டு நினைவு தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட வேலாயுதம் - ஈஸ்வரி தம்பதியினருக்கு 1953 ஆம் ஆண்டு ஆடி மாதம் 17ஆம் திகதி செல்வி மகேஸ்வரி பிறந்தார்.

இவர் 2004 ஆம் ஆண்டு இந்து கலாச்சார அமைச்சில் பணிபுரிந்த காலத்தில் அவர் யுத்தத்தினால் சேதமடைந்த இந்து ஆலயங்களைப் புனரமைத்தது மட்டுமல்லாமல், இந்து மத வளர்ச்சிக்கும் பெரிதும் பாடுபட்டார். அத்துடன், இந்து சமயப் பெரியார்களினதும் மதகுருமார்களினதும் நன்மதிப்பையும் பெற்றிருந்தார்.

2005 ஆம் ஆண்டு தொடக்கம் தனது இறுதிக் காலம் வரை சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரின் ஆலோசகராகப் பணிபுரிந்தார்.

சமூகப்பற்றுள்ளவரான அமரர் மகேஸ்வரி வேலாயுதம் அவர்கள் படுகொலை செய்யப்பட்டமையானது எமது தமிழினத்திற்கு ஈடு கொடுக்கப்படாத பாரிய இழப்பாகும்.

# தவறுகளைத் திருத்துவோம் முன்னோக்கிப் பயணிப்போம்

## புதிய பாதை காட்டுகிறார் ரணில்

(கொழும்பு)

அரசாங்கம் மற்றும் பிரதான எதிர்க்கட்சி உள்ளிட்ட ஏனைய கட்சிகளின் தவறுகள், மற்றும் குறைபாடுகள் என்பனவற்றை திருத்திக் கொண்டு முன்னோக்கிச் செல்ல வேண்டும் என எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் மற்றும் சகல கட்சிகளிடமும் தவறுகள் மற்றும் குறைபாடுகள் காணப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

புத்தரின் போதனைக்கு அமைய தவறு மற்றும் குறைபாடுகள் திருத்திக் கொள்ளப்பட வேண்டும் என அறிவுறுத்தியுள்ளார்.



ஹோமகம சுகத்த பிம்பாராம விஹாரையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

குறைபாடு மற்றும் தவறுகளை இனம்கண்டு சகலரும் ஒன்றிணைந்து தொழில்படுவது சாலச் சிறந்தது எனவும் அவர் தெரிவித்தார்.

### புலி உறுப்பினர்கள்...

நடவடிக்கை எனத் தெரிவித்துள்ள நோர்வே எதிர்க்கட்சி, இந் நடவடிக்கையினால் இருநாடுகளுக்கும் இடையிலான உறவுகள் பாதிப்படையலாம் எனவும் அச்சம் தெரிவித்துள்ளது. நோர்வேயின் சர்வதேச விவகார நிறுவகத்தின் ஆராய்ச்சிப் பிரிவுத் தலைவர் ஐவர பிநியூமன் இது தொடர்பாக கூறுகையில், இது இறைமையை மீறும் செயல் எனவும் அடிப்படை சர்வதேச கொள்கைகளுக்கு முரணானது எனவும் தெரிவித்துள்ளார்.

இது நோர்வேயின் நலன்களையும் பாதிக்கிறது. ஏனெனில் நோர்வே போன்ற சிறிய நாடு இந்த விடயம் கையாளப்பட்டதை விட வெளிப்படைத் தன்மை மூலம் நன்மையடைகின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார். எனினும், நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் இந்நடவடிக்கையை ஆதரித்துள்ளார். ஆபத்திலுள்ள மக்களுக்கு உதவுவது நோர்வேயில் நீண்டகால சம்பிரதாயம் என அவர் கூறியுள்ளார்.

## 13 ஆவது திருத்தம்....

மத்திய அரசுக்கும் மாகாண அரசுக்கும் பொதுவாக உள்ள நிரற்பட்டியலை மாகாணத்திற்கும் மத்திக்கும் எவையெவையென தெளிவாகப் பிரித்து வரையறுத்துவிட வேண்டும் என்பதை ஈ.பி.டி.பி தரப்பினர் வலியுறுத்தினர்.

இரண்டாவது சபை ஒன்றுக்கான ஆலோசனைகளை அரசதரப்பினர் முன்வைத்தனர். பேச்சுவார்த்தையில் முன்வைக்கப்பட்ட கருத்துக்களுக்கு அரச தரப்பில் இணக்கமான அபிப்பிராயங்களே தெரிவிக்கப்பட்டதாகக் கூறிய சந்திரகுமார் எம்.பி, தாங்கள் முன்பே வைத்திருந்த எட்டு அம்சக் கோரிக்கைகளையும் நினைவுபடுத்தியதாகவும் சொன்னார்.

அவற்றைப் பற்றிய முன்னேற்றத்தை அடுத்த சந்திப்பின்போது சொல்லக்கூடிய வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என அரசாங்கக் குழுவினர் உறுதியளித்தனர்.

நிரந்தரத் தீர்வு ஒன்று ஏற்படும் வரை வடக்கு கிழக்கில் குடிமக்களினதோ அல்லது இராணுவத்தினரதோ குடியேற்றத் திட்டங்கள் நடைபெறக் கூடாது.

வடக்கு கிழக்கில் காணிகளின்றி இருக்கும் மக்களுக்கு அந்தந்தப் பகுதிகளில் காணிகளைப் பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும்.

வேலைவாய்ப்பளிக்கக்கூடிய வகையில் புதிய தொழில் முயற்சிகள் ஏற்படுத்தப்படவேண்டும்.

பொலிஸ் மற்றும் பாதுகாப்புப் படைகளில் மேலும் தமிழர்கள் சேர்த்துக்கொள்ளப்படவேண்டும்.

மீள்குடியேறிய மக்களுக்கு அர்த்தபூர்வமான வாழ்வாதார வசதிகளுக்கான உடன் நடவடிக்கை.

அவசரகாலச் சட்ட விதியைத் தளர்த்துவதற்கான கால எல்லையைத் தீர்மானித்தல்.

தடுத்துவைக்கப்பட்டிருப்போர் விடுவிக்கப்படுவதற்கு உரிய நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துவதோடு, தடுப்பிலுள்ள அவர்களது விபரங்கள் குடும்பத்தினருக்குத் தெரியப்படுத்தப்படவேண்டும்.

மேற்படி கோரிக்கைகளுக்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அதன் விபரத்தை அடுத்த சந்திப்பில் பேசக்கூடியதாக இருக்குமென அரச குழுவினர் உறுதியளித்தனர்.

இதுதவிர வன்னியில் காணியுரிமை அற்றோருக்கான மாற்று என்ன என்பது பற்றியும், முறையான வீட்டு வசதியளிக்கும் திட்டம் தாமதமாகக் கூடாதெனவும், புலம்பெயர்ந்தோரின் வருகைக்கு இராணுவத்தினரிடமிருந்து அனுமதி பெறவேண்டியிருப்பதை நீக்கிவிடவேண்டுமெனவும் தாம் வலியுறுத்தியதாக சந்திரகுமார் எம்.பி தெரிவித்தார்.

## இலங்கை மீது...

இந்திய மத்திய அரசுக்கு தொடர்ந்து வலியுறுத்தவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் ஜெயா தொலைக்காட்சிக்கு அவர் அளித்துள்ள பேட்டியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாக நான் பலமுறை விளக்கியுள்ளேன். இது ஒரு சர்வதேசப் பிரச்சினை. எனவே தமிழக அரசால் குறிப்பிட்ட அளவில் மட்டுமே செயற்பட முடியும். அதற்கு மேல் செயற்படுவதானால் அது மத்திய அரசால் மட்டுமே, அதாவது இந்திய அரசால் மட்டுமே செயற்பட முடியும்.

இருப்பினும், இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு நான் இரண்டு தீர்வுகளை முன்வைக்க விரும்புகின்றேன். போர்க்குற்றம் புரிந்ததாகத் தெரிவிக்கப்படும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சர்வதேச போர்க்குற்றங்களுக்கான நீதிமன்றத்தில் நிறுத்த இந்திய அரசு நடவடிக்கை எடுக்கலாம். அதை செய்யுமாறு இந்திய அரசை நான் தொடர்ந்து வலியுறுத்துவேன்.

இரண்டாவதாக, இலங்கைத் தமிழர்கள் கௌரவமான, சுதந்திரமான வாழ்க்கை வாழ இலங்கை அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இலங்கை அரசை இந்தியா வலியுறுத்த வேண்டும். அதைச் செய்ய, இலங்கை ஜனாதிபதியும் அவரது அரசாங்கமும் மறுத்தால், இலங்கை மீது இந்தியா பொருளாதாரத் தடைகளை விதிக்க வேண்டும்.

அப்படிச் செய்தால், இலங்கை அரசு பணிவதைத் தவிர வேறு வழியில்லை. இதைச் செய்யுமாறு இந்திய அரசை நான் தொடர்ந்து வலியுறுத்துவேன் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 மே 14 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.